Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 14/00


දිනමුරසු වාරමලර් டிச. 29, 2002-ஜன.04, 2003

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 492



## சமாதானத்துக்கான சவால்கள்!




## கடவுளை ஏமாற்றலாமா...?

கடவுளை நம்பி வணங்குபவர்களும் சில வேளைகளில் கடவுளைக் கூட ஏமாற்ற நினைப்பதுண்டு. ஒரு பிழையைச் செய்துவிட்டு "இந்தக் கடவுள் அறிய நான் அதைச் செய்யவில்லை" என்று சத்தியம் செய்துவிட்டு பின்பு தனிமையில் சென்று "கடவுளே! என்னை மன்னித்துவிடு! வேறு வழியின்றி நான் சத்தியம் செய்துவிட்டேன்." என்று மன்றாடுபவர்களும், செய்த பிழைகளை மன்னிக்குமாறு உண்டியலில் இலஞ்சம் போடுகிறவர்களும் இருக்கின்றனர். ஒரு வட்டிக்காரனிடம் சென்று ஒருவர் வட்டிக்குப் பணம் கேட்டார். வட்டிக்காரன் "9 சதவீத வட்டி" என்று எழுதிக் காட்டினார். "ஒன்பது சதவீதமா? இது கடவுளுக்கே பொறுக்காதே...." என்றார் அவர். அதற்கு வட்டிக்காரர். "நீ பயப்படாதே! நான் 9 என்று எழுதியிருப்பதைக் கடவுள் மேலேயிருந்து பார்த்தால் 6 என்றுதான் தெரியும்" என்றார்.

தி.குணவர்த்தன, களுவாஞ்சிக்குடி.

# ஆன்மீகம்

## அனைத்துலக மக்களும் கொண்டாடும் பண்டிகைதான் நத்தார் பண்டிகை



**மா**ர்கழி மாதம் தொடங்கிவிட்டாலே நத்தார் பண்டிகை விளம்பரங்களை அழகான சோடினைகளோடும், நத்தார் தாத்தாவின் விதம் விதமான வடிவங்களிலும் உலக நாடுகளிலுள்ள வியாபார ஸ்தாபனங்கள் அனைத்திலுமே காணலாம். கிறிஸ்தவர்களால் மட்டுமல்ல மேலை நாடுகளில் அனைத்து மக்களாலும் கொண்டாடப்படும் பண்டிகைதான் நத்தார்.

உலக இரட்சகராம் இயேசுபிரான் பாலகனாக பெத்தலகேமில் ஒரு மாட்டுத் தொழுவத்தில் எம் அனைவரையும் பாவத்திலிருந்து மீட்கவே மனிதனாகப் பிறந்தார்.

இம்முறை வடக்கு கிழக்கிலுள்ள எம் சகோதரங்களும் நத்தார் பண்டிகையைக் கொண்டாட ஆயத்தமாகும் இவ் வேளையில் எம் நாட்டிலே நிரந்தர சமாதானம் ஏற்பட நாம் ஒவ்வொரு வரும் பாலன் இயேசுவிடம் இறைஞ்சி வேண்டுவோம்.

அனைவருக்கும் என் உளங்கனிந்த நத்தார் வாழ்த்துக்கள்.

செல்வி மேரி சுபாஷினி, இராஜவெல்ல.

## ஆபத்துக்கள் அணுகா!

**எ**வரேனும் ஒரு மனிதர் உண்மையாக தூய மனத்துடன் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்று கூறிக் கடலில் குதித்தாலும் அதில் மூழ்கி அவர் இறந்துவிடமாட்டார். நெருப்பில் வீழ்ந்தாலும் அது அவரைக் கரிக்காது; பாம்புகள், தேள்கள் இருக்குமிடங்களில் அகப்பட்டுக் கொண்டாலும் அவை அவரைத் தீண்டமாட்டா. ஒரு முஃமினான மனிதனின் கப்ரின் அருகிலிருந்து இக்லாசுடன் இதனை ஓதினால் இதன் பரக்கத்தால் அவருக்கு வேதனை நீக்கப்படும்.

**நூல்: கஸீனத்துல் அஸ்ரார்.**

"அல்லாஹ்வின் பெயர் கூறப்படாமல் அறுக்கப்படும் எதனையும் நீங்கள் சாப்பிட வேண்டாம். நிச்சயமாக அது பெரும் பாவமாகும்" என அல்லாஹுதஆலா குர் ஆனில் அருளியுள்ளான்.

*-சூரா அன் ஆம்.*

தொகுப்பு: ஆமினா ஹஸனி, கல்முனை -07.

## கவிதைப் போட்டி இல.489

**இடம் உள்ள வரை இடம் பிடித் துள்ள வியக்க வைத்த கவிதைகள்**



பரிசுக்குரிய கவிதை

### ஆடும் சிங்கங்கள்

'ஆறுகள்' அடிக்கும் ஆற்றலுண்டு!
'நூறுகள்' சேர்க்கும் பொறுமையுண்டு!
சாதனைக்கொரு சச்சின்!
செமத்தலுக்கு ஒரு சேவாக்!
அடித்து ஆடும் சிங்கங்களே
அடுத்த (உலக) கோப்பைக்காகவா
உங்கள் ஆலோசனை...?"

நா.ஜெயபாலன், பிபிலை.

### ஓர் ஒற்றுமை!

ஆடிக் களைத்த இருவர்,
இங்கு கூடி ஓய்வில் பேசுகிறார்-போர்
ஆடிக் களைத்த இருவர் கூடி
அங்கு ஆய்வுகள் செய்கிறார்!

வி. சித்ரா, ஆரையம்பதி-01.

### த(ம்)ன் நம்பிக்கை!

சிறந்த துடுப்பாட்டம்,
தேர்ந்த களத்தடுப்பு,
அணி அந்நியோந்நியம்
கலந்த கலவைகளில்...
அ(இ)ந்த அணியென்ன-வேறு
எந்த அணிதான்-நம்
இந்திய அணியினுடன்
சந்திப்பு நிகழ்த்தினாலும்
வெற்றி...
நமது முதுகை மட்டுமே
முட்டும்!!!!

தாராபுரம் நிலாம், கரம்பை.

### ஆட்டம்!

நாணய சுழற்சியில்
நடைபெற இருப்பது துடுப்பாட்டம்!
நினைவு சுழற்சியில்
நினைவில் எழுவது போராட்டம்!
நாளைய சுழற்சியில்
நிறையுமோ இச் சதிராட்டம்?

டி. ஜோர்ஜ், நுவரஎலியா.

### அன்றும் இன்றும்

'ச்சசின்' சரிந்தால்
சதமடிப்பதே சாதனை அன்று
சரிந்தவர் சரிய
சளைக்காமல் சாதிப்பர்
இளையவர் இன்று

எஸ்.குமுதினி, வவுனியா.

### என்றும்

வெற்றிப் படிகளை நோக்கும்-எங்கள்
தோல்வியின் பக்கங்கள் புரட்டப்படும் வரை
வீரத்தின் நிழல்கள் மறைவதும் இல்லை
வேகத்தின் கைகள் ஓய்வதும் இல்லை.

தெ.லோஜனா, கொழும்பு-06.

### விளையாட்டு கிரகம்

விளையாட்டு கிரகத்தில்
வெயிலடிக்கும் வரை-நீங்கள்
மனித உலகத்தின்
பட்டுப் போன மைதானங்களை
மறந்திருப்பது நியாயம்தான்.

மு.கீர்த்தியன், லபுகெலையூர்.

### சொல்லிவிடுங்கள்

எதிரே வரும் பந்தை எதிர்த்தாடுவது
எப்படியென ஆலோசிக்கும் வீரர்களே..
வாழ்க்கையின் மைதானத்தில்
துன்பமென்னும் பந்து துரத்திவரும் போது
எதிர்கொள்வது எப்படியென எடுத்துரைப்பீரா?

சுகுமாரன் ரஜனி, பெயாவல்.

### நானும் சாதிப்பேன்

சாதனை நாயகன் இப்போ
சாதிக்க வந்த இவனுக்கு
சாணக்கியமாக அறிவுரை கூற
சலிக்காமல் கேட்டுக் கொண்டே
சவாலை எதிர் கொள்வேன் என
சமாதானம் கூறுகின்றாரோ...


அலாவுடீன் ஏ.எல்.ஏ.பாபு, திருமலை.

### சுழற்சி...!

வெற்றிக் களிப்பா?
வீராப்பு வேண்டாம்...!
தோல்வியா..?
துவண்டுவிட வேண்டாம்...!
வீசும் பந்தினைப் போல்..
வெற்றி தோல்வியும்..
சுழன்று கொண்டே வரும்...!

எஸ். தமிழாம்பிகை ஜெகன், நானாட்டான்.

## கவிதைப் போட்டி இல.492



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 04.01.20023

கவிதைப் போட்டி இல.492
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### அசட்டுப் புறாக்களோ?

ஆட்டத்தைத் தொடக்கிவைத்து
ஆட்டமிழந்து போனபின்பு
அடுத்தவரை ஆடவிட்டு
மீண்டும் களமிறங்கக் காத்து நிற்கும்
அசட்டுப் புறாக்களோ இவை?

செல்வி கௌசிகா மகேந்திரன், உடுவில்.

### விமர்சனம்

விளையாட்டு வீரர்களே,
பல காலத் துயரின் பின்
எம் மண்ணில் மலர்கின்ற
சமாதான மலர்பற்றி
இடைவேளை நேரத்திலே
உங்களிடையே விமர்சனமோ?

துவாசினி, மீசாலை.

### சதமடித்து, சதமடித்து....

சதமடித்து சதமடித்து
சல்லி சேர்க்கும் நீங்கள்
சதமேனும் இல்லாதவர்க்கு
ஈந்தால்...
இடம் பிடிப்பீர்
இந்தியர் இதயங்களில்
மட்டுமல்ல...
மானிடர் மனங்கள்
அனைத்திலும்.

சி. குமுதினி, வவுனியா.

### புரிகிறதா உங்களுக்கு!

கொண்ட கொள்கையும்!
கொதித்தெழும் வீரமும்!
நெஞ்சில் உறுதியும்!
நேர்கொண்ட பார்வையும்!
ஒற்றுமையின் பலமும்!
உள்ளத்தில் இருந்துவிட்டால்!
உலக கிரிக்கெட் கோப்பையென்ன?
உலகமே காலடியில்தான்!

ஹப்புத்தளையூர், மனோ கோபாலன்.

# உங்கள் பக்கம்

## 'அரசியலும் அடம்பிடித்தலும்'

அடம் பிடித்தல் என்பது ஒரு பொருளை அல்லது இலக்கை அடைய வேண்டும் என்பதை முன்னிட்ட தீராததொரு அவாவாகும்.

இன்றைய எமது நாட்டு அரசியலில் என்ன நடைபெறுகின்றது? எது சரி? எது பிழை? எவ் வழியில் சென்றால் சுபீட்சமான எதிர்காலத்தை எய்தலாம்? எவ் வழி எம்மைப் படுபாதாளத்தில் தள்ளிவிடும்? இவை பற்றிய சிந்தனைகள் எவற்றிற்குமே இடம் கொடுக்காமல் அடம் பிடிப்பதையே பிரதான கருமமாகக் கொண்ட அரசியல்வாதிகள் பலர் தம்மை மக்களுக்கு இனம் காட்டியுள்ளார்கள்.

தேர்தல் ஒன்றின் மூலம் 'மக்கள் தலைவராக' தெரிவு செய்யப்பட்டவர்கள் தாம் நினைப்பவையெல்லாம் 'மக்கள் நலன் கருதியவையாக' ஆகிவிடும் என்று கருதிவிடக் கூடாது. தவிர தேர்தல் சமயத்தில் இருந்த ஒரு நிலைப்பாடே ஆட்சிக் காலம் முடிவடையும் தருணம் வரையும் இருக்கும் என்றும் அவர்கள் எண்ணக் கூடாது. வளர்ந்துவரும் அரசியல் சமுதாய மாற்றங்களுக்கு ஏற்ப மக்கள் புதிய புதிய முடிவுகளை அங்கீகரிப்பர். அச் சமயத்திலெல்லாம் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் மக்களின் கருத்துக்களை அறிந்து தமது 'அடம் பிடித்தல்' தன்மைகளிலிருந்து விலகி மக்களுக்காகச் செயற்பட வேண்டும்.

அரசியல்வாதிகளே வன்முறையில் ஈடுபடுவது... வன்முறையைத் தூண்டுவது... இன முரண்பாடுகளுக்குத் தூபமிடுவது... போருக்கு ஆதரவாகப் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பேசுவது... சமாதானச் சூழலைக் கெடுப்பது என்பவற்றை எல்லாம் நிறுத்தினால் நாட்டில் இயல்பாகவே அமைதி நிலை தோன்றும்! வேறு பிரயத்தனங்கள் வேண்டா!

அடம்பிடித்தல் என்பது பாரியதொரு மனநோயாக மாறி வருவதையும் பல அரசியல்வாதிகளின் நல்ல குணாம்சங்கள்... இயற்கைச் சுபாவங்கள் கூட அவர்களின் பேச்சுக்களாலும் செயல்களாலும் அடிப்பட்டுப் போய் விடுவதையும் பத்திரிகை, தொலைக் காட்சி, வானொலி போன்ற ஊடகங்கள் வாயிலாக அறியக் கூடியதாக உள்ளது. அதே போல் இடதுசாரிக் கொள்கையில் நின்றபடியே இனத் துவேசத்தின் உச்சத்தில் கொடிகட்டிப் பறக்கும் கட்சிகள் பற்றி என்ன சொல்வது?

ஒன்று மட்டும் உறுதி...

அரசியல் தலைவர்கள் ஏன் எதற்காக அடம்பிடிக்கிறார்கள் என்பதை மக்கள் இன்று சிந்தித்துப் பார்க்கத் தலைப்பட்டுவிட்டார்கள்!

**திருமலை, வீ.என்.சந்திரகாந்தி.**

---

**மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,**

தித்திக்கும் பல சுவையான இனிய அம்சங்களைச் சுவைபட வழங்கும் எங்கள் அபிமான முரசே, 'லேடீஸ் ஸ்பெஷல்' தந்த மிகச் சிறிய இதய வலி, அம்மா நான் நலமா? மருத்துவக் குறிப்புகள் மிகவும் பயனுள்ளதாக இருந்தன. மேலும், 'புகுந்த மனை', 'என்ன செய்யப் போகிறாய்' சிறுகதைகளும், 'அன்பான எதிரி' பாப்பா முரசு சிறுகதையும் அருமையாக இருந்தன. பாராட்டுக்கள். மேலும் முரசில் நல்ல படைப்புகளை எதிர்பார்க்கின்றோம். நன்றி.

மங்களா வாமதேவன், தங்களா வாமதேவன், மட்டக்களப்பு.

**அன்பின் தினமுரசே!**

முதலில் உனக்கு என் இனிய நல் வாழ்த்துக்கள். வாரா வாரம் வெளிவருவதையிட்டு எனக்கு மிக்க மகிழ்ச்சி. அத்தோடு தினந்தோறும் வெளிவராதா என்ற ஏக்கமும் என்னிடம் உள்ளது.

முரசில் வெளிவரும் ஆக்கங்களும், மற்றைய நிகழ்வுகளும் என்னை மிகவும் ஈர்த்துள்ளது. பத்து வருட காலமாகத் தமிழ் மக்களின் நண்பனாய், பலவிதமான ஆக்கங்களைச் சுமந்து வரும் தினமுரசே இனி வரும் காலத்திலும், சிறந்து விளங்க வேண்டும் என்பது எனது நீண்ட கால ஆசையாகும். எனவே முரசு சிறந்து விளங்க எனது இனிய வாழ்த்துக்கள்.

பொ.கோமளா இந்துமதி, இம்புல்பிட்டிய.

## வாசக[ர்] சாலை



**அன்பின் இனிய தினமுரசுக்கு!**

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சிறந்தவை. இதில் 'பாப்பா முரசு', 'நினைத்து நினைத்துச் சிரிக்க', 'தகவல் பெட்டி', 'ஸ்போட்ஸ்', 'காதில பூ கந்தசாமி', 'பார்த்த ஞாபகம் இல்லையோ', 'சினி விசிட்', 'லேடீஸ் ஸ்பெஷல்' ஆகியவை என்னை மிகவும் கவர்ந்தவை. முரசே உன் சேவை தொடர என் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

கோ. கோகுலவாணி, இத்தாலி.

## அறிவித்தல்

ஏராளமான வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 2003ம் ஆண்டின் புது வருடப் பரிசாக 'குறுக்கெழுத்துப் போட்டி' மீண்டும் முரசில் அச்சேறுகின்றது. அடுத்த இதழிலிருந்து முரசைக் கையிலெடுக்கும்போது கூடவே பேனாவையும், உங்கள் தேடலையும் கையில் எடுத்துக் கொள்ளுங்கள் வாசகர்களே.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

## மட்டுநகரிலுள்ள கட்டளைப் படைப்பிரிவை அகற்ற முடியாதென

## இராணுவம் அறிவிப்பு

மட்டக்களப்பு நகர மத்தியிலுள்ள இராணுவப் படைப்பிரிவின் தலைமையகத்தையும் அதனோடிணைந்த உயர் பாதுகாப்பு வலயத்தையும் விலக்கிக் கொள்ளுமாறு புலிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கையை இராணுவம் நிராகரித்துள்ளது.

இராணுவ கட்டளைப் படைப்பிரிவு தலைமையகம் மட்டக்களப்பு நகரசபைக் கட்டடத்திலும் வாடிவீட்டுக்குச் சொந்தமான கட்டடத்திலும் செயற்படுகிறது. இதைச் சுற்றியுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் முன்பு அரசாங்க நிறுவனங்கள் செயற்பட்ட கட்டடங்கள் சிலவும் உள்ளன.

கடந்த 12 ஆண்டு காலமாக இந்த உயர் பாதுகாப்பு வலயம் இருந்து வருகிறது. இதற்குள் இருந்த அரச நிறுவனங்கள் நகரின் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. பொதுமக்களுக்குச் சொந்தமான வீடுகள் எவையும் இங்கு இல்லாததனால் இந்த இடத்திலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் எனக் கோரப் புலிகளுக்கு அனுமதியில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் மட்டக்களப்பு கட்டளைப் படைப்பிரிவின் தலைமையகத்தையும் கல்குடா வாடி வீட்டிலுள்ள இராணுவ முகாமையும் அகற்ற முடியாது என மின்னேரியா 23வது படைப்பிரிவின் பிரிகேடியர் சுமித் வீரசூரிய அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் அறிவித்திருக்கிறார்.

## ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினரின் கொலை தொடர்பாக பூரண விசாரணைக்கு பிரதமர் உத்தரவு

மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேச சபை உறுப்பினர் பூபாலபிள்ளை அழகுதுரையின் கொலை தொடர்பாக விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொலிஸ்மா அதிபர் ரி.ஆனந்தராஜாவைப் பணித்திருக்கிறார்.

ஈ.பி.ஆர்.எல்.எப். (வரதர் அணியின்) உறுப்பினரான அழகுதுரை (வயது 35) கடந்த 16ம் திகதி இரவு 7.30 மணியளவில் மண்டூரில் வைத்துக் கடத்தப்பட்டார். பின்னர் 22ம் திகதி ஞாயிறன்று காலை மண்டூர் வாவியில் இவரது சடலம் கண்டெடுக்கப்பட்டது.

சடலத்தின் ஒரு கை துண்டிக்கப்பட்டிருந்ததுடன் மோசமான சித்திரவதைகளின் பின்னர் கொலை செய்யப்பட்டிருப்பதற்கான சான்றுகள் உடலில் இருந்ததாக வெல்லாவெளிப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர் புலிகளாலேயே கடத்திக் கொலை செய்யப்பட்டதாக வெல்லாவெளி பிரதேச சபையின் தலைவர் ஆர்.துரைரத்தினம் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

இதேவேளை கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் கடத்திச் செல்லப்பட்ட ஈ.பி.டி.பி. மட்டக்களப்பு அமைப்பாளர் உள்ளிட்ட மூன்று பேர் குறித்தும் இதுவரை எந்தத் தகவலும் இல்லை.

புலிகளுக்கு எதிரான மாற்றுக் கருத்துக் கொண்டுள்ளோரைக் கடுமையான அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும் விதத்தில் கிழக்கில் தொடர்ச்சியான கடத்தல், கொலைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தனியார் பஸ்களில் அதிகரித்த கட்டண அறவீடு

கிழக்கு மாகாணத்தின் பெரும்பாலான இடங்களில் இருந்து கொழும்பு வரும் தனியார் பஸ்களில் கூடுதலான கட்டணம் அறவிடப்படுவதாகப் பரவலான குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்படுகிறது.

கல்முனையில் இருந்து கண்டி வழியாகக் கொழும்பு வரும் பஸ்களில் 285 ரூபா அறவிடப்படுகிறது.

மட்டக்களப்பிலிருந்து பொலனறுவை வழியாகக் கொழும்பு வருவதற்கு தனியார் பஸ்களில் ஒரு வழிக் கட்டணமாக 200 ரூபா அறவிடப்படுகிறது. இ.போ.ச பஸ்களில் 95 ரூபா மாத்திரமே அறவிடப்படுகிறது.

சொகுசு பஸ்கள் என இத் தனியார் பஸ்கள் அழைக்கப்படுகின்ற போதும் இவற்றில் குளிரூட்டி இயங்கச் செய்யப்படுவதில்லை. இது குறித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பொதுமக்கள் கோருகின்றனர்.

## தீ விபத்து தொடர்பாக இருவர் கைது

கடந்த 17ம் திகதி இரவு கொழும்பு ஐந்துலாம்புச் சந்தியில் இடம்பெற்ற தீ விபத்து தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சுவாமிப்பிள்ளை என்பவரது பட்டாசுக் கடையில் ஊழியர்களாகப் பணியாற்றிய இவ்விருவரும் சம்பவம் நடைபெற்ற அன்று விடுமுறையில் இருந்துள்ளனர். இந்தக் கடையில் வேலை செய்த ஏனைய 11 பேரும் இந்த விபத்தின் போது உயிரிழந்தனர்.

இந்தப் பட்டாசுக் கடையில் ஏற்பட்ட பாரிய வெடிப்பொன்றே தீ விபத்துக்குக் காரணம் என விசாரணையாளர்கள் நம்புகின்றனர்.

## வெள்ள நிவாரண விநியோகத்தில் அசமந்தப் போக்கு

கிழக்கு மாகாணத்தை கடந்த வாரம் தீவிரமாகத் தாக்கிய வெள்ளத்தை அடுத்து தமது இருப்பிடங்களை இழந்து அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ள மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதில் காண்பிக்கப்படும் அரசியல் தலையீடுகள், அதிகாரிகளின் அசமந்தப் போக்கு காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

வெள்ள நிவாரணம் வழங்குவதற்காகப் பல இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாக ஊடகங்கள் மூலம் பிரசாரம் செய்யப்பட்டாலும் மிகக் குறைந்தளவிலான நிவாரணங்கள் தாமதமாகவே பாதிக்கப்பட்டவர்களுக்குச் சென்றடைந்துள்ளன.

தனிப்பட்ட சிலர் வழங்கிய உதவிகள், அரசியல்வாதிகள் சார்பில் வழங்கப்பட்டதை விட அதிகமாகும் எனப் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட உலர் உணவு நிவாரணங்களைப் பிரித்துக் கொடுப்பதில் அதிகாரிகள் மிகவும் பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்வதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. அத்துடன் அரசியல்வாதிகள் தங்களுக்கு நெருக்கமானவர்களுக்கும் தத்தமது ஊர்களுக்குமே நிவாரணத்தின் போது முக்கியத்துவம் அளித்து செயற்படுகின்றனர். இந்நிலையினால் மக்களின் ஒரு பகுதியினருக்கு எவ்வித உதவியும் கிடைக்கப்பெறவில்லை.

## ஊழல் குற்றச்சாட்டுக்களில் பொலிஸாருக்கு முதலிடம்

இலங்கையில் மிக அதிக அளவில் ஊழல் இடம்பெறும் அரச நிறுவனம் பொலிஸ் திணைக்களம் என ட்ரான்ஸ் பெரன்ஸி இன்டர்நெஷனல் என்ற அமைப்பு நடத்திய ஆய்வொன்றிலிருந்து தெரியவந்திருக்கிறது.

இந்த ஆய்வுக்கென வடக்கு-கிழக்குத் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 2500 குடும்பங்களின் கருத்துக்கள் பெறப்பட்டன. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 39 சதவீதமானவர்கள் "இந்த நாட்டின் மோசமான ஊழல் இடம்பெறும் நிறுவனம் பொலிஸ் திணைக்களம்" எனக் கூறியிருக்கிறார்கள்.

இவர்களுள் 24.6 சதவீதமானவர்களிடம் பொலிஸார் இலஞ்சம் கேட்டிருக்கிறார்கள். இதில் 21.1 சதவீதமானவர்கள் பொலிஸுக்கு இலஞ்சம் வழங்கியுள்ளனர்.

பொலிஸ் சேவைக்கு அடுத்து மோசமான ஊழல் இடம்பெறும் அமைப்பு நீதிச்சேவை என ஆய்வு தெரிவிக்கின்றது. சுகாதாரம், கல்வி ஆகிய பிரிவுகள் இதற்கடுத்ததாக உள்ளன.

இந்த ஆய்வின் போது இலங்கையில் குறைந்த அளவு ஊழல் இடம்பெறும் அமைப்பை பெயரிடுமாறு கேட்கப்பட்ட போது 40 சதவீதமானவர்கள் பதிலளிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

67.9 சதவீதமான மக்கள் இலங்கையின் அன்றாட வாழ்வுக்கு இலஞ்சம் இன்றியமையாதது என்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

ட்ரான்ஸ் பெரன்ஸி இன்டர்நெஷனல் நிறுவனம் அரசாங்க அமைப்புக்களில் ஊழல்கள் இடம்பெறும் வழிமுறைகளைக் கண்டறிந்து அவற்றைத் தடுப்பதற்கான முயற்சிகள் குறித்து விரிவான ஆய்வுகளை நடத்தத் தொடங்கியிருக்கிறது.

## புலிகளின் நீதிமன்றம் பொலிஸாரினால் சுற்றிவளைப்பு!

## நீதிபதி கைதாகி பிணையில் விடுதலை

கல்முனை மருதமுனைப் பகுதியில் பாழடைந்த வீடு ஒன்றில் இயங்கி வந்த புலிகளின் நீதிமன்றத்தைச் சுற்றிவளைத்த பொலிஸார் அந் நீதிமன்றத்திற்குப் பொறுப்பாகச் செயற்பட்டவரைக் கைது செய்ததுடன் 200க்கும் மேற்பட்ட வழக்குக் கோப்புக்களை கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்திருக்கும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இயங்கும் புலிகளின் நீதிமன்றங்களை மூடுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இயங்கும் நீதிமன்றங்கள் குறித்து அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சுக்களின் போது கருத்துப் பரிமாறப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையில் வடக்கு-கிழக்கில் செயற்படும் புலிகளின் வங்கிகள் குறித்த விபரங்களைத் திரட்டித் தருமாறு மத்திய வங்கி ஆளுநர் ஏ.எஸ்.ஜயவர்த்தன பொலிஸ்மா அதிபரிடம் கேட்டிருக்கிறார்.

## ரயில் மோதி இறந்தவரின் மோதிரம் சவச்சாலையில் வைத்துத் திருட்டு

கடந்த வாரம் கொழும்பு பம்பலப்பிட்டிக்கும் வெள்ளவத்தைக்கும் இடையில் ரயில் மோதி கொல்லப்பட்ட இரு இந்தியர்களில் ஒருவரது கைவிரலில் இருந்த வைர மோதிரம் கொழும்பு தேசிய மருத்துவமனையின் சவச்சாலையில் இருந்த போது திருடப்பட்டுள்ளது.

சுமார் 1,80,000 ரூபாய் பெறுமதியான இந்த மோதிரம் விபத்து நடந்த போது அவரது கைவிரலில் இருந்ததாக ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்ட ரயில் நிலைய அதிகாரிகளும் முதலில் சடலத்தைப் பெறுப்பேற்ற பொலிஸாரும் கூறுகின்றனர். இது வைத்தியசாலையில் வைத்தே காணாமல் போயிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த கொழும்பு தேசிய மருத்துவமனை அதிகாரி ஒருவர், இறந்தவரின் உடலில் இருந்து மோதிரம் திருடிய இந்த அசிங்கமான செயலைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## கூட்டமைப்பு நிராகரிப்பு

வடக்கின் உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு உட்படும் பகுதிகளில் இருந்து இராணுவத்தை அகற்றுவது தொடர்பாக யாழ் பிராந்திய கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவினால் முன்வைக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளை தமிழ்க் கூட்டமைப்பு நிராகரிப்பதாகப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்த நிபந்தனைகள் தற்போதைய சமாதான முயற்சிகளுக்குத் தடையாக இருக்கும் என்பதால் தமிழ்க் கூட்டமைப்பு திட்டவட்டமாக நிராகரிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

## நோர்வே தூதுவரை வெளியேற்றுமாறு பௌத்த அமைப்புக்கள் கோரிக்கை!

இலங்கையிலுள்ள நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கின் பெயரில் புலிகளால் தருவிக்கப்பட்ட அதி சக்தி வாய்ந்த ஒலிபரப்புக் கருவிகளுக்கு மத்தியில், அதி நவீன செய்மதித் தொலைதொடர்பு சாதனங்கள் இருந்ததாக வெளியாகியிருக்கும் செய்திகள் குறித்து அரசாங்கம் அடுத்து வரும் ஒரிரு நாட்களில் விரிவான அறிக்கை ஒன்றை வெளியிட உள்ளது.

இந்த ஒலிபரப்பு சாதன கொள்கலனில் செய்மதி தொடர்புக் கருவிகள் இருந்ததாகக் கூறப்படுவதை ஏற்க மறுக்கும் அரசாங்கம் வானொலி ஒலிபரப்புக் கருவிகளை வழங்கியது தேசத் துரோகமான செயல் அல்ல எனக் கூறியுள்ளது.

இதற்கிடையில் நோர்வே தூதுவர் தனது இராஜதந்திர சலுகைகளைத் தவறாகப் பயன்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டியிருக்கும் கடும்போக்கு சிங்கள அமைப்புக்கள் அவரை நாட்டைவிட்டு வெளியேற்றுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

# முரசம்

## விடைபெறும் வருடம்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

இந்த வருடத்துக்கு விடைகொடுக்கும் கடைசித் தினங்களில் நிற்கின்றோம்.

வரப்போகும் புதிய வருடம் பற்றிய எதிர்பார்ப்புகளோடும் காத்திருக்கின்றோம். கிறிஸ்மஸ் பண்டிகை களைகட்டி ஓயும் இத் தினங்கள் மனித சமூகத்தின் பாவங்களைக் கழுவச் சிலுவை சுமந்த தேவனின் நற் சிந்தனைகளை மீட்டும் வேளையில் நாமும் இந்த வருடத்தின் நிகழ்வுகளைச் சற்று மீட்டுப் பார்ப்பது நன்று.

இந்த வருடத்தின் பிறப்பானது இலங்கையைப் பொறுத்தவரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த, நம்பிக்கை தரும் மாறுதல்களைக் கொண்டதாகவே மலர்ந்திருந்தது. புதிய அரசாங்கம் பதவியேற்றதுடன், சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குப் பச்சைக் கொடி காட்டி, யுத்த நிறுத்தத்தையும் அமுலாக்கி, சாதாரண வாழ்க்கையில் பெரும் நெருக்கடியாகவிருந்த பாதுகாப்புக் கெடுபிடிகள் அனைத்தையும் தளர்த்தியது. அத்துடன் நில்லாது புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொண்டு, யுத்தத்தை ஓய்வுக்குக் கொண்டுவந்ததற்கப்பால் பொதுமக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கைக்குரிய தேவைகளையும் பூர்த்தி செய்தது.

இப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சில குறைபாடுகள் இருந்தாலும் யுத்தத்தின் ஓய்வையும் சமாதான முயற்சியின் முன்னேற்றத்தையும் மனதில் கொண்டு எதிர்க்கட்சியுட்பட, மாற்றுத் தமிழ்க் கட்சிகள் ஈறாக, இலங்கையின் பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் இதற்கு ஒத்துழைக்க முன்வந்ததும் நல்லதோர் அறிகுறியாக அமைந்தது.

தொடர்ந்து, சமாதானப் பேச்சுவார்த்தையும் ஆரம்பிக்கப்பட்டு மூன்று சுற்றுக்கள் வரை நிகழ்ந்தேறியுள்ளது. இந் நிலையில் மற்றொரு பாரிய அரசியல் திருப்புமுனையாக, புலிகள் சமஷ்டி ஆட்சியை ஏற்று தமிழீழத்தைக் கைவிடத் தயார் என அறிவித்துள்ளார்கள். இதனால் ஒரு அரசியல் தீர்வு குறித்த வரைவினை உருவாக்குவதற்குத் தடையாக எந்தக் காரணமும் இப்போது இல்லையென்ற நிலை உருவாகியுள்ளது.

அத்தகைய அரசியல் தீர்வை வரைவதற்கான ஆரம்பமாக பொதுஜன ஐக்கிய முன்னணி முன்வைத்த இரு அரசியல் யாப்பு ஆலோசனைகளைக்கூட எடுத்துக் கொள்ளலாம். அது இப் பணியில் எதிர்க்கட்சியின் ஈடுபாட்டை ஈர்க்கும் ஒரு நல்ல அணுகுமுறையாக அமையும்.

இதேவேளையில், இச் சமாதான முயற்சியில் சில நெருடல்களும் இல்லாமல் இல்லை. அவை பிரதானமாக, ஜனநாயகத்தையும் பன்மைத்துவத்தையும் மனித உரிமைகளையும் நிலைநாட்டுவது குறித்ததாகவே எழுந்துள்ளன.

கிழக்கில் நிகழ்ந்த முஸ்லிம் கலவரங்கள், யாழ்ப்பாணத்தில் மாற்றுக் கட்சியினரை ஜனநாயகத்துக்கு மாறாக அகற்ற மேற்கொள்ளப்படும் முயற்சிகள், மக்கள் மீதான கப்பம், வரி, தண்டம் என்ற பெயர்களிலான நிதி வசூலிப்புகள், அங்கொன்று இங்கொன்றான காணாமல் போவோர் பட்டியல் அதிகரித்துச் செல்வது என்பன கவலைக்குரியனவாக உள்ளன. இவற்றைச் சரிசெய்வதென்பது இச் சமாதான முயற்சியில் அதி முக்கியமான அடுத்த பணி. எவ்வாறாயினும் இந்த வருடம் அரசியல் களத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் முன்னேற்றகரமானவையே.

அவை பிறக்கப்போகும் அடுத்த வருடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நிகழ்ந்துவரும் தவறுகள் திருத்தப்பட்டு, சமாதானத்தின் அடுத்த கட்டங்களுக்குத் துரிதமாக நகர வேண்டிய அவசியப்பாட்டை இத் தருணத்தில் சகலரும் உணர வேண்டும்.

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# சமாதானத்துக்கான சவால்கள்!

புத்தாண்டு பிறக்கிறது.

புத்தாண்டுக் கனவுகள் அனைவருக்கும் உண்டு.

ஆனால் இந்த நாட்டு மக்களுக்கென ஒரு தனியான கனவு உண்டு.

அதுதான் சமாதானம் பற்றிய கனவு.

நிறைவேறக்கூடிய எதையும் கனவென யாரும் கொள்வதில்லை.

நிறைவேறாத ஆசைகளும், நிறைவேறுவது மிகக் கடினமானதாக இருக்கும் விடயங்களும்தான் எமக்குக் கனவுகளாக மலர்கிறது.

அப்படி நம்மவருக்கு நிறைவேறாத ஆசையாகவும் நிறைவேறுவது முயற்கொம்பாகவும் இருந்துவந்த விடயம்தான் சமாதானம்.

புதிதாக உதயமாகும் புத்தாண்டிலாவது இந் நாட்டில் சமாதானம் மலர வேண்டுமென்பதுதான் இங்குள்ள சாதாரண மக்கள் அனைவருக்கும் பொதுப்படையாகவுள்ள அவா.

நிறைவேறுமா...?

சமாதானம் பற்றி இன்று பலர் பேசுகிறார்கள்.

சண்டை பிடித்தவர்களும் பேசுகிறார்கள். சண்டைக்கு விலக்குத் தீர்க்க முன்வந்தவர்களும் பேசுகிறார்கள். சண்டையில் சம்பந்தமில்லாதவர்களும் பேசுகிறார்கள். உள்நாட்டவர்கள் மட்டுமன்றி வெளிநாட்டவர்களும்தான் பேசுகிறார்கள். வெளிநாடுகள்தான் இதற்குக் கூடிய அழுத்தம் கொடுத்தும் வருகின்றன.

முன்பொரு காலத்தில் இருந்தததைப் போலல்லாது இன்று யுத்தத்துக்குக் குரல் கொடுப்பவர்கள் ஒருவகை காட்டுமிராண்டிக் காலத்துக் குணாம்சங்களைக் கொண்டவர்களைப் போல் பார்க்கப்படும் நிலை, சிங்கள மக்கள் மத்தியிலும் தோன்றியுள்ளது.

அதனால், எதிர்ப்பவர்கள்கூட சமாதானத்தின் பெயரில்தான் தங்கள் எதிர்ப்பைக் காட்ட வேண்டிய நிலைமை தற்போது தோன்றியுள்ளது.

அப்படியானால் ஏன் இன்னும் சமாதானம் வரவில்லை என்ற கேள்வி எழுவதில் நியாயம் உண்டு.

சமாதானம் பற்றியே அனைவரும் பேசினாலும் ஒவ்வொருவரும் பேசும் சமாதானத்துக்கிடையில் வித்தியாசம் நிறையவே உண்டு என்பதுதான் இங்கு உள்ளார்ந்திருக்கும் உண்மை.

புலிகளும் சமாதானத்தைத்தான் பேசுகிறார்கள். புலிகள் பேசும் சமாதானம் என்பது என்ன?

அரசாங்கமும் சமாதானத்தைப் பற்றித்தான் பேசுகிறது. அரசாங்கம் பேசும் சமாதானம் என்பது என்ன?

ஏன் எதிர்க் கட்சியான பொ.ஐ.மு.வும் சமாதானத்தைப் பற்றித்தான் பேசுகிறது. பொ.ஐ.மு. எதிர்பார்க்கும் சமாதானம் என்பது என்ன?

மாற்றுத் தமிழ்த் தரப்பினராக இன்று ரீ.டி.எப். (தமிழர் ஜனநாயக முன்னணி) என்ற வகையில் தம்மை வெளிப்படுத்தத் தலைப்பட்டிருக்கும் கட்சிகள் கொண்டிருக்கும் சமாதானம் பற்றிய கருதுகோள் என்ன?

வடக்கு கிழக்கிலும் கணிசமான சனத்தொகை விகிதாசாரத்தைக் கொண்டுள்ள, ஒரு தனித்துவமான சிறுபான்மைச் சமூகமாக விளங்குகின்ற முஸ்லீம் மக்களின் அரசியல் தலைமைகள் எதிர்பார்க்கும் சமாதானம் என்ன?

நாட்டில் சமத்துவத்தை நிலைநாட்ட வேண்டுமென்ற வகையில் தம்மை இடதுசாரிகளாக முன்னிறுத்தும், இடதுசாரித் தத்துவங்களை கோஷமிடும் ஜே.வி.பி. போன்ற கட்சிகளின் சமாதானத்தின் அர்த்தம்தான் என்ன?

இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாட்டாளரென்ற நிலையில் மத்தியஸ்தம் வகிக்க முன்வந்திருக்கும் நோர்வே நடுவர்கள் கருதும் சமாதானம் என்பது என்ன?

எமது அண்டை நாடென்ற வகையிலும் தென் கிழக்காசியப் பிராந்திய வல்லரசென்ற வகையிலும் இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரங்களில் அதிக உரித்தை வகித்துவரும் இந்தியா கருதும் சமாதானம் என்ன?

இதைவிட இப் பிரச்சினையில் தற்போது ஏதோ ஒருவகையில் தலையீடு அல்லது அக்கறை செலுத்தி வரும் வெளிநாடுகள் குறிப்பாக அமெரிக்கா, பிருத்தானியா போன்றவை கருதும் சமாதானம் என்ன?

இவற்றைவிட இந் நாட்டின் பெரும்பான்மைச் சமூகமான சிங்கள மக்கள் எதிர்பார்க்கும் சமாதானம் என்ன?

இவை யாவற்றுக்கும் மேலாக இப் பிரச்சினைக்குப் பிரதான பாத்திரவாளியாக ஆகியுள்ள தமிழ் சமூகம் எதிர்பார்க்கும் சமாதானம் என்ன?

நாம் சமாதானம் என்று உச்சரிக்கும் இந்தச் சொல்லுக்கு உண்மையான அர்த்தம் என்ன?

இதை நாம் மேலோட்டமான பார்வையைக் கடந்து நுணுகி ஆராய்வோமானால், இச் சமாதானம் என்ற சொல், உச்சரிப்பில் ஒரே சொல்லாக இருப்பதைப்போலன்றி, அதுகுறித்துப் பேசும் ஒவ்வொரு தரப்புக்கும் வெவ்வேறான, சில சமயங்களில் மாறுபட்ட அர்த்தப் பரிமாணங்களைக் கொண்ட தாகவே உண்மையில் விளங்குவதைக் காண்போம்.

பொருள் ஒன்றாகவும் சொல் வெவ்வேறாகவும் இருந்தாலாவது அதில் ஒரு அடிப்படை இணக்கப்பாடு அமைந்திருக்கும்-தீ என்ற சொல்லைத் தீயம் என்று அழைத்தாலும் நெருப்பென்று அழைத்தாலும், சுடரென்று அழைத்தாலும், அல்லது சிங்களத்தில் கினி என்றாலும் ஆங்கிலத்தில் ஃபயர் என்றாலும் அது ஒரே அர்த்தத்தைத்தான் கொடுப்பது போல.

ஆனால் சொல் ஒன்றாகவும் அதற்கு ஒவ்வொரு தரப்பும் கொண்டுள்ள பொருள் வேறாகவும் அமைந்தால் எப்படி இங்கு அடிப்படை இணக்கம் தோன்ற முடியும்?

புலிகளைப் பொறுத்தவரையில் சமாதானம் என்பது தமது வலிமையின் அடிப்படையில் இலங்கை அரசாங்கத் தரப்பினருடன் பேசப்படும் ஒரு பேரமே.

அமெரிக்க துணை ராஜாங்கச் செயலாளர் ரீச்சேர்ட் ஆர்மிடேஜ் ஒஸ்லோ உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில் புலிகள் ஆயுதங்களை கைவிட்டு, தனிநாட்டைத் துறந்து, கொழும்பு அரசாங்கத்தின் இலங்கை முழுவதற்குமான இறைமையை ஏற்பதாக பகிரங்கமாக அறிவிக்க வேண்டுமெனத் தெரிவித்தபோது அதற்கு புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் அளித்த பதிலில் இதை நாம் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது.

நாம் எமது வலிமையின் அடிப்படையிலிருந்துகொண்டுதான் பேசுகிறோம். இதையே அமெரிக்காவும் செய்கிறது. அது தன் வலிமையை அடிப்படையாகக் கொண்டுதான் தனது மேலாதிக்கத்தை வகிக்கிறது, அதனால்தான் அது பேசுவதை மற்றைய நாடுகள் மதிக்கின்றன. எமது வலிமை கருதித்தான் அரசாங்கமும் எம்முடன் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்வந்துள்ளது, என்பதாக அவரது பதில் அமைந்திருந்தது.

அதாவது தமது வலிமையின் தளத்தில் நின்று அரசாங்கத்துடன் பேசுவதென்பது, புரிந்துணர்வினால் ஏற்படும் சமாதானம் என்பதிலிருந்து வேறுபடுகிறது.

அத்தோடு அரசாங்கம் மட்டுமே இதில் மாற்றுத் தரப்பாக புலிகளால் கருதப்படுகிறது. அது தவிர்ந்த மற்ற எத் தரப்புகளுக்கும் இங்கு பாத்திரம் இருப்பதாகப் புலிகள் உணரவில்லை. அவற்றைப் பெரிதாகப் பொருட்படுத்தவும் இல்லை. அரசின் மற்றொரு அதிகார மையமான ஜனாதிபதியைக்கூட அவர்கள் இங்கு மற்றொரு தரப்பாக அங்கீகரிக்கவில்லை.

மேலும் இங்கு சமாதானமென்பது புலிகளும் அரசாங்கமும் மேற்கொள்ளும் ஒரு ஒப்பந்தம் மட்டுமே, அதற்குப் புறம்பாக எதுவும் இல்லை என்பதே புலிகளின் எண்ணக்கிடை.

அதாவது யுத்தத்தின் பின் அவரவர் பலம் பலயீனங்களைப் பொறுத்து இரு நாட்டு அரசர்களிடையே ஏற்படும் இணக்க ஒப்பந்தம் போல.

ஆனால் அரசாங்கம் எதிர்பார்க்கும் சமாதானத்தின் அர்த்தமானது வேறு.

அது வெறும் யுத்தமற்ற நிலையையே சமாதானமெனக் கருதுகிறது.

யுத்தத்தைத் தவிர்க்க வேண்டுமாயின் யுத்தம் புரிபவர்களைத்தான் சமாளிக்க வேண்டும். அதனால் அரசைப் பொறுத்த வரையில் மற்றைய தரப்பினர்கள் எவரும் சமாதானத்தின் முக்கியஸ்தர்களல்ல. புலிகளைத் திருப்திப்படுத்தி யுத்தத்திலிருந்து விலகி நிற்க வைக்கும் விடயங்களேதான் அதற்குப் பிரதானமானவை.

எனினும் தனது அரசாங்கத்தை நிலைநிறுத்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் தரப்பினரையும் ஈடுகட்ட வேண்டிய இக்கட்டையும் அது எதிர்கொள்கிறது.

அதனால் இதில் எந்தத் தரப்பினரும் பாதிக்கப்பட மாட்டார்ளென்று பொதுப்படையாகக் கூறிக் கொண்டாலும் அது எவ்வாறு என்று ஒரு தெளிவான பதிலை வழங்கக் கூடியதாக இல்லை.

முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் ஒரு பொதுப்படையான உறுதிமொழிகளுக்கு அப்பால் உண்மையாக, தமக்கு எத்தகைய பாதுகாப்பு, இனத்துவ அங்கீகாரம், மற்றும் அரசியல் உரிமைகள், அத்துடன் அதிகாரங்களும் அதற்கான அதிகாரப் புலமும் இத் தீர்வில் உத்தரவாதப்படுத்தப்படப் போகின்றன என்ற சந்தேகம் என்றுமில்லாத அளவு வலுப்பெற்றுள்ளது.

இதன் விளைவாக முஸ்லிம்களுக்குள்ளேயே தமது அரசியல் எதிர்காலம் குறித்து ஒன்றை விட ஒன்றான தீவிரப் போக்குகள் முனைப்புற்று அதனடிப்படையிலான பிளவுகளும் வெடிக்கத் தொடங்கியுள்ளன.

தமிழ்த் தரப்பில் புலிகளின் மேலாண்மையின்கீழ் இயங்க முன்வந்திருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்த கட்சிகளைப் பொறுத்தவரை சமாதானமென்பது புலிகள் பேசி முடிக்கும் எதுவாக இருந்தாலும் சரி என்ற நிலைதான். தாம்கூட அதனுடன் சம்பந்தமற்றவர்களாக ஒதுங்கிக் கொள்வதே உகந்த அரசியல் வழிமுறையாகக் கருதுகிறார்கள்.

ஆனால் புலிகளுக்கு மாற்றுத் தரப்பாக அமைந்திருக்கும் தமிழ்க் கட்சிகள் தம்மைத் தமிழர் ஜனநாயக முன்னணியென்ற கூட்டமைப்பாக அமைத்துக்கொண்டு, சமாதானமென்பதில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுடன், ஜனநாயகம், பன்மைத்துவம், மனித உரிமைகளும் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்துகின்றனர்.

இந்தியாவும் ஏறக்குறைய இத்தகைய விடயங்களையே வலியுறுத்துவதுடன், புலிகள் மட்டுமன்றி சம்பந்தப்பட்ட சகல தரப்பினரினது பொது இணக்கத்தினடிப்படையிலேயே தீர்வு ஈட்டப்பட வேண்டுமெனத் தெரிவித் துள்ளது.

அதேவேளை பேச்சுவார்த்தையில் நடுவராகச் செயற்படும் நோர்வேயைப் பொறுத்தவரை, ஏனைய தரப்பினர்களைப் பேச்சுக்களில் சேர்த்துக் கொள்வதென்பது புலிகளையும் அரசாங்கத்தையும் பொறுத்த விடயமாகவும், தான் இவர்கள் இருவருக்கும் இடையிலே மட்டுமே ஏற்பாட்டாளராகச் செயற்படுவது போலவும்தான் நடந்து கொள்கிறது.

அதைப் பொறுத்தவரை சமாதானமென்பதை, இவ்விரு தரப்புக்கும் இடையில் ஈட்டப்படும் இணக்கத்தால் மட்டுமே நிலைநாட்டிவிடலாமெனக் கருதுகிறது. இதர தரப்பினர்களை சற்றுத் தள்ளி வைத்து, குழப்பங்கள் எதையும் மேற்கொள்ளாதபடி பார்த்துக்கொண்டாலே போதுமென்றுதான் கருதுகிறது. அதேவேளை, உலக நாடுகளை இச் சமாதான முயற்சிக்கு அனுசரணையாக்கிக் கொள்வதில் தீவிர ஆர்வம் காட்டுகிறது. குறிப்பாக இந்தியாவை மனஞ் சுழிக்க வைக்காது பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற ராஜதந்திரக் கவலையை அது கொண்டுள்ளது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை வெறுமனே பயங்கரவாதம் நிறுத்தப்படுவதே சமாதானமென்ற சுலபமான வாய்ப்பாட்டைக் கொண்டுள்ளது.

எதிர்க்கட்சியான பொ.ஐ.மு.வைப் பொறுத்தவரை, புலிகளுக்கு எல்லை தாண்டிய அளவில் விட்டுக்கொடுத்துக் கொண்டு போவதனால் மட்டுமே யுத்தத்தை ஒத்திவைக்க அரசாங்கம் முனைவது நாட்டை அதள பாதாளத்தில் தள்ளிவிடும் ஆபத்தான வழிமுறை எனவும், பதிலாக, தம்மால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தைத் தொடக்கமாகக் கொண்டு, அனைத்துத் தரப்பையும் உள்ளடக்கிய அரசியல் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், தீர்வானது புலிகளின் ஆயுதக் களைவையும் உள்ளடக்கியதாகவே அமைய வேண்டுமென்றும் கூறுகிறது.

ஜே.வி.பி. புலிகளின் ஆயுதங்கள் களையப்படாதவரை சமாதானம் ஏற்படப்போவதில்லையெனக் கூறிவருகின்றது.

இந் நிலையில்தான் அண்மையில் ஒஸ்லோ மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின்போது புலிகளின் தத்துவாசிரியர் தாம் சமஷ்டி முறையான தீர்வை ஏற்கத் தயாரென்றும், வடக்கு கிழக்கில் ஏனைய கட்சிகளும் அரசியல் நடத்தும் உரிமையை அங்கீகரிப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

இருப்பினும் யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி.யினரை வெளியேறக் கோரும் ஆர்ப்பாட்டங்கள் புலிகளின் பின்னணியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது மட்டுமன்றி, பாதுகாப்பு தொடர்பான உபகுழுக் கூட்டத்தில் புலிகள் தரப்பில் தலைமை வகித்த புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதி கருணா, ஈ.பி.டி.பி.யினர் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற வேண்டுமெனக் கோரியுமிருந்தார்.

அத்துடன் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனும் ஈ.பி.டி.பி.யினர் தீவுப் பகுதியை விட்டு வெளியேறிய பின்னர்தான் பேச்சுவார்த்தைகள் எனத் தெரிவித்துமிருந்தார்.

இதனால் பிரதமர் ரணில் முன்னிலையில் கூட்டமைப்பினர் மற்றும் தமிழர் ஜனநாயக முன்னணியினர் கலந்துகொண்டு ஈட்டிய உடன்பாடும் புலிகளால் நிராகரிக்கப்படுவதாகிவிட்டது.

இத்தகைய நிலையில் அடுத்து வரும் புத்தாண்டில் சமாதானம் சாத்தியமா என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது.

இக் கேள்விக்கு முன்னர் எத்தகைய சமாதானத்தை நாம் சமாதானமெனக் கருதுகிறோம் என்பதற்கான ஒரு தெளிவான பதிலை நாம் தேடியாக வேண்டும்.

யார் தேடுவது? □

நரன்

# ஐந்துலாம்புச் சந்தியில் ரி.என்.ரி.யாக மாறிய பட்டாசு!

20க்கும் மேற்பட்ட உயிர்களைப் பலிகொண்ட ஐந்துலாம்புச் சந்தி தீஅனர்த்தத்தின் புகை அணைந்து போனாலும், இந்த விபத்துக்கான காரணம் குறித்து இன்னும் பல்வேறு ஊகங்கள் புகைந்தவண்ணமே இருக்கின்றன.

நிச்சயமான தீர்மானம் ஒன்றிற்கு வர முடியாத அளவு முரண்பட்ட தகவல்கள் விசாரணையாளர்களுக்குக் கிடைத்திருக்கின்றன.

விபத்து நடைபெற்று இரண்டு நாட்களின் பின்னர் வெளியான அரசாங்க பகுப்பாய்வாளரின் அறிக்கை பெரும் சர்ச்சையைக் கிளப்பியது.

அவரது அறிக்கையின்படி இந்தச் சம்பவத்திற்குப் பட்டாசு வெடித்தது காரணம் அல்ல.

சுவாமிப்பிள்ளை என்பவரது கடையில் வைக்கப்பட்டிருந்தாக நம்பப்படும் சக்திவாய்ந்த ரி.என்.ரி. வெடிமருந்து வெடித்ததே காரணம் எனக் கூறப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் மூன்று கிலோவிற்கு உட்பட்ட அளவு வெடிபொருள் சுவாமிப்பிள்ளையின் கடையின் மேல்தளத்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று அரசாங்கப் பகுப்பாய்வாளர் தனது அறிக்கையில் கூறியிருக்கிறார்.

அந்தக் கடையின் மேல் தளத்திலுள்ள இரும்புச் சட்டங்கள் உள் நோக்கி வளைந்து சிதைந்திருப்பதும், இரண்டாவது மாடியில் கொங்கிறீற் தட்டுக்கள் வெடித்து உடைந்திருப்பதும் இத்தகைய சக்திமிக்க பொருள் ஒன்று வெடித்ததனாலேயே என அரசாங்கப் பகுப்பாய்வாளர் கூறுகிறார்.

அரச தரப்பு விசாரணைகளின் அடிப்படையில் கடைக்கு வெளியிலிருந்து குண்டு வீசப்பட்டிருக்கலாம் என்ற ஊகம் நிராகரிக்கப்படுகிறது. ஏற்பட்டிருக்கும் சேதங்களை வைத்து நடத்தப்பட்ட பகுப்பாய்வு அறிக்கைகளின்படி ஏதேனும் ஒரு சக்திவாய்ந்த பொருள் உள்ளே இருந்துதான் வெடித்திருக்க வேண்டும் எனப் பரவலாக நம்பப்படுகிறது. அப்பொருள் புலிகள் கொண்டு வந்து மறைத்து வைத்திருந்த குண்டு என வெளியிடப்படும் தகவல்களிலுள்ள உண்மைத் தன்மை மேலதிக விசாரணைகளின் மூலமே உறுதி செய்யப்படும்:

இந்தத் தீ அனர்த்தம், கொழும்பு புறக்கோட்டையின் சன நெரிசல் மிக்க ஐந்துலாம்புச் சந்தி சுற்றுவட்டத்திற்கு முன்னால் உள்ள அந்தப் பழைமை வாய்ந்த கட்டடத்திற்குள் நடந்து வந்த ஏராளமான சட்டவிரோதச் செயல்கள் மற்றும் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள் குறித்த உண்மைகளை வெளிக்கொணர்ந்திருக்கிறது.

சுவாமிப்பிள்ளை பட்டாசுக் கடையிலும் அருகிலுள்ள தேங்காய் எண்ணெய் மொத்த விற்பனைக் கடையிலும் சில நேரங்களில் ஊழியர்களை உள்ளே வைத்துப் பூட்டிவிட்டுச் சென்றிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

கொள்ளைக்காரர்கள் கப்பம் கேட்டு வந்து அது வழங்கப்படாததனால் குண்டு ஒன்றை வீசிவிட்டுச் சென்றிருக்கலாம் என ஒரு தகவல் கூறுகிறது. எவ்வாறெனினும் இரவு கடையை மூடும்போது சுவாமிப்பிள்ளை கடையிலும் சரி, அருகிலுள்ள தேங்காய் எண்ணெக் கடையிலும் சரி கணக்குகளைப் பார்க்கும் நேரங்களில் கடையை உட்பக்கமாகப் பூட்டிவிட்டு அவற்றைக் கவனிப்பதே வழக்கமாக இருந்து வந்துள்ளது. இதற்கு முன்னர் சில கொள்ளைச் சம்பவங்கள் இக் கடைகளில் இடம் பெற்றிருப்பதே இதற்குக் காரணமாகும். சம்பவம் நடைபெற்ற அன்று இரவம் சுவாமிப்பிள்ளையின் கடை உட்பக்கமாகப் பூட்டப்பட்டே இருந்திருக்கிறது. ஆதலால் உள்ளே என்ன நடந்தது என்பது இதுவரை ஊகங்கள்தான்.




எவ்வாறெனினும் 20க்கு மேற்பட்ட உயிர்கள் அநியாயமாகவும் பரிதாபகரமாகவும் காவு கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான காரணகர்த்தாக்கள் யார்? உண்மையில் பட்டாசு வெடித்த தீயே இத்தனை உயிர்களையும் பலியெடுத்ததா? அல்லது அரசாங்கப் பகுப்பாய்வாளர் கூறுவது போல் ரி.என்.ரி. வெடிமருந்து இருந்துள்ளதா? இவை மிகச் சரியாக விடை கண்டறிய வேண்டிய கேள்விகள்.

இதற்கப்பால் பொதுமக்கள் வாழும் ஒரு கட்டடத்தின் கீழ் தளத்தில் தேங்காய் எண்ணெய் மற்றும் பட்டாசு போன்று இலகுவில் தீப்பற்றக் கூடிய பொருட்கள் தொகை அளவில் சேமித்து வைப்பதற்கு யார் அனுமதி அளித்தார்கள் என்பதும் அறியப்பட வேண்டும். கீழே பட்டாசுக் கடை இருந்திருக்கிறது. மேல் மாடியில் உள்ள வீடுகளில் காஸ் சிலிண்டர்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன. அனர்த்தம் நிகழ்ந்து பலர் துடிதுடித்து இறக்கும் வரை இந்த ஆபத்துக்களின் பாரதூரத்தை யாரும் உணரவில்லை.

இவை இப்படி இருக்க தீ மூண்டதும் தீயணைப்புப் படை செயற்பட்ட வேகம் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்கிறது.

இத்தகைய அவசர நிலைமை ஒன்றின் போது தண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்காகக் கொழும்பு நகரில் அமைக்கப்பட்டிருக்கும் சுமார் 35 தண்ணீர்க் குழாய்களில் ஒன்று கூடச் செயற்படும் நிலையில் இல்லை என்பது தீ விபத்து நடந்த பின்னர், தண்ணீர் எடுப்பதற்குத் திறந்தபோதுதான் தெரியவந்திருக்கிறது. இறுதியில் பேரேவெவ குளத்திலிருந்துதான் மிகவும் தாமதமாகத் தண்ணீர் பெறப்பட்டுள்ளது. நடந்து முடிந்த அத்தனை சம்பவங்களுக்கும் ஒருவரை மாற்றி ஒருவர் குற்றஞ்சாட்டுகிறார்கள். இதன் அர்த்தமே இத்தகைய தவறுகள் திருத்தப்படப்போவதில்லை என்பதுதான். ■

# அஷ்ரப்பின் பெயரை விற்று கட்சியைத் துண்டாடும் அரசியல்!

அதாவுல்லா குழுவினர் அமைச்சர் ரவூப் ஹக்கீமை முஸ்லிம் காங்கிரஸ் அங்கத்துவத்திலிருந்து நீக்கியிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள்.

முன்னர் அதாவுல்லா குழுவினரை ஹக்கீம் கட்சியிலிருந்து நீக்கியதாக அறிவித்திருந்தார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கள் பிளவுபட்டுள்ள இரண்டு பிரிவினரும் ஒருவரை ஒருவர் விலக்கிக் கொள்ளும் படலம் இன்னும் முடிந்த பாடில்லை.

தங்கள் தரப்பால் சுமத்தப்பட்ட 37 குற்றச்சாட்டுக்களுக்கும் பதிலளிக்கத் தவறியதால் ஹக்கீம் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாக அதாவுல்லா குழுவினர் அறிவித்துள்ளனர்.

மறுபுறம் தனது தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றிணையுமாறு ரவூப் ஹக்கீம் தொடர்ந்தும் கூறிவருகிறார்.

இதற்கிடையில் இந்த இரு தரப்பினரதும் செயற்பாடுகள் மீது அதிருப்தியுற்றிருக்கும் சிலர் தனிக்கட்சி தொடங்கப்போவதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

முஸ்லிம் காங்கிரஸ் யாருடையது? அதற்குள் என்ன நடக்கிறது? என்ற கேள்விக்கு யாரிடமும் தெளிவான பதிலில்லை. கட்சி அதன் ஆரம்ப நோக்கத்திலிருந்து வெகு தூரம் விலகிச் சென்றுவிட்டதை மட்டும் சந்தேகமின்றி உணர முடிகிறது.

இவ்வாரம் முஸ்லிம் காங்கிரஸ் நெருக்கடியில் ஏற்பட்டுள்ள புதிய திருப்புமுனையான நிகழ்வு இந்த இரண்டு பிரிவினர் மீதும் விரக்தியுற்றிருக்கும் சிலர் மூன்றாவது அணி ஒன்றை உருவாக்கப் போவதாகக் கூறியிருப்பதுதான்.

முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்களிலிருந்து அறியக் கிடைக்கும் தகவல்களின்படி இந்தப் புதிய குழுவுடன் சேர சில எம்.பி.க்களும் உடன்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. எவ்வாறெனினும் இந்த விடயம் இன்னமும் கொள்கை ரீதியிலான உடன்பாட்டுடன் மாத்திரமே காணப்படுகிறது. புதிய அணி முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகர் எம்.எச்.எம். அஸ்ரப்பின் கொள்கைகளை ஏற்று நடக்கும் என்று அந்த அணியை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் கூறுகின்றனர்.

முன்னர் பேரியல் அஸ்ரப் குழுவினர் பிரிந்து சென்ற போதும் இதே கதையைத்தான் சொன்னார்கள்.

ஆரம்பத்தில் அமைச்சர் ஹக்கீம் கட்சித் தலைவராகப் பதவியேற்ற போதும் கட்சியின் ஸ்தாபகரது நோக்கத்தை நினைவுகூர்ந்து அஸ்ரப்பின் வழியைப் பின்பற்றுவதாக உறுதியளித்திருந்தார். ஆனால் அப்படியெதுவும் நடக்கவில்லை.

முஸ்லிம் காங்கிரஸைக் கூறுபோட்டுத் தங்களுக்கு வசதியான வகையில் கிழக்கு மாகாண முஸ்லிம்களை ஏமாற்ற எத்தனிக்கும் எல்லாத் தரப்பினருமே அஸ்ரப்பின் பெயரை விற்றுத்தான் தங்களது அரசியலை ஆரம்பிக்கிறார்கள்.

முஸ்லிம் சமூகத்திற்குக் காத்திரமானதொரு தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற அஸ்ரப்பின் கனவுக்கு அடித்தளமாக அமைந்ததே, ஒட்டு மொத்த முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தையும் ஒரே குடையின் கீழ் ஒன்றிணைக்க வேண்டும் என்பதில் தான் இருந்தது.

இந்த அடிப்படையை மறந்துவிட்டு, பகுதி பகுதியாகப் பிரிந்து சென்று அஸ்ரப் செய்ததை முஸ்லிம்களுக்காகத் தாங்களும் செய்யப் போவதாகக் கூறுவது வேடிக்கையானது மட்டுமன்றி இந்த அரசியல்வாதிகளைக் கோமாளிகளாகப் பார்க்க வேண்டிய நிலைக்கு மக்களைத் தள்ளுகிறது.

> இந்த இரு தரப்பினரதும் செயற்பாடுகள் மீது அதிருப்தியுற்றிருக்கும் சிலர் தனிக்கட்சி தொடங்கப் போவதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

அதாவுல்லா-ஹக்கீம் பிரிவினர் பரஸ்பரம் அரசியல் சேறு பூசிக்கொள்ளும் காரியத்தில் மும்முரமாக இறங்கியிருக்கிறார்கள்.

தனது தலைமையின் கீழ் ஒன்றிணைய வேண்டுமென்று ரவூப் ஹக்கீம் வெறுமனே கூறிவருகிறாரே தவிர, தனது நல்லெண்ணத்தை நிரூபிக்கும் வகையில் காரியங்கள் ஆற்றப்பட்டதாகத் தெரியவில்லை.

அண்மையில் மத்திய மாகாணத்தின் மடவளையில் நடந்து முடிந்த தேசிய மீலாத் விழா நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்களில் ரவூப் ஹக்கீமுடன் முரண்பட்டு நிற்கும் எந்தவொரு முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.யின் பெயரும் இடம்பெற்றிருக்கவில்லை. அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதா என்பது கூடத் தெரியவில்லை. மறுபுறம் அதாவுல்லா குழுவினர் ஹக்கீமுக்குச் சேறு பூசுவதற்கென்றே அஸ்ரப்பின் பெயரை வைத்துப் பத்திரிகை ஒன்றை அச்சிட்டு விநியோகிக்கப் போவதாகவும் அறியக் கிடைக்கிறது. அத்துடன் ஹக்கீமின் அமைச்சுப் பதவியைப் பறிக்குமாறும் வலியுறுத்தி வருகின்றனர். இல்லாது போனால் தற்போது ஹக்கீம் வகிக்கும் பதவிக்குச் சமமான ஒரு அமைச்சுப் பொறுப்பைத் தங்கள் சார்பிலும் ஒருவருக்குத் தர வேண்டும் என்று கோருகின்றனர்.

இரு தரப்பினரும் வீம்புக்காக ஒன்றை மாற்றி ஒன்று செய்து கொண்டிருக்கும் போது ஒன்றிணைதல் என்ற பேச்செல்லாம் பெரும்பாலும் வீணானவை. இத்தகையதொரு பின்னணியில் இந்த இரண்டு பிரிவிலிருந்தும் மூன்றாவது அணி ஒன்று தோன்றினால் கூட முஸ்லிம்களுக்கு விமோசம் கிடைக்கப் போவதில்லை.

உடைந்துபோயிருக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்குள் இருந்து ஒவ்வொருவரும் தனிக்கட்சி தொடங்கினால் கூட ஆச்சரியப்படும்படியாக இல்லை. முஸ்லிம்கள் எல்லாவற்றையும் விரக்தியோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ○

# NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் குளியலறை உபகரணங்களை

*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்



**Naveen Ceramic No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8**

**எமது புதிய காட்சியறை**
**184-A, Havelock Road, Colombo-05.**
**Tel :01-507334**

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.



## சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் திருமணப் பதிவு செய்து, திருமணம் செய்ய வருவோருக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவரவர் வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். இலவச விமான நிலைய வாகன வசதி, சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார். விபரத்திற்கு:-

**LINGAM WEDDING SERVICE**

10, Anson Road, # 15-14 International Plaza, Singapore-079903

எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி

அப்பு: 0065-975 14 941



## தெய்வீக மருத்துவம்

THEIVEEGAM INTERNATIONAL SOCIAL AND SPRITUAL SERVICES

**National Theiveega Sakthy Foundation International Interregious Traditional & Medical & Divine Service**

சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை

Government Approved Charity Regd No: - HA/4/BT/219

**டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P, J.P. (SL)**

கிரக தோஷம் காலப்பகையால் பிரிந்த, காதலர்கள் கணவன் மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீயபழக்கம், மனிதத் தீமை, மருந்திடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைச்சக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரிக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்)

Theiveegam SriLanka
Head Office
Batticaloa.

Tele / Fax:065-24825, 078 610098
வெளிநாட்டவர்களுக்கு,
Tele / Fax: - 0094 78610098

மட்டக்களப்பிலும் சந்திக்கலாம்

"வாழ்விளிருளை நீக்கிஒளியையேற்றுவோம்"
" DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE "


## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் ★ 08 ❒ 03 ❒ 1929



மறைவு ★ 19 ❒ 12 ❒ 1997

**திரு. ரூபன் குலநாயகம் பசுபதிப்பிள்ளை**

**(இளைப்பாறிய அதிபர்)**

நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமாகப் பிரகாசிக்கின்ற சூரியப் பிரகாசம் போலிருக்கும்
- (நீதி மொழிகள் 4.18)

அன்பின் இருப்பிடமாய், பண்பின் பிறப்பிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய் எல்லோரையும் வாழவைத்த அன்புத் தெய்வமே! ஆண்டுகள் ஐந்து சென்றாலும் கூட உங்கள் நினைவுகள் எங்களை விட்டு அகலாது ஐயா! அன்று எம்முடன் வாழ்ந்து மறைந்தீர்கள். இன்று மறைந்தும் எம்முடன் வாழ்கின்றீர்கள். என்றும் உங்கள் நினைவுடன் வாழும் அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப் பிள்ளைகள்.

தகவல்: ரகு, சூரிச் (Swiss)


## நீங்கள்கண்ணாடி அணிபவரானால்

எந்தரக லென்ஸ் தேவையென உணர வேண்டும்!

55 YEARS SOLID OPTICALS SERVICES



சாதாரணமாகப் பாவனையிலுள்ள பைபோகஸ் லென்ஸ்

SOLA FLAT TOP
21 ம் நூற்றாண்டுக்கு மிகச் சௌகரியமான லென்ஸ்

நன்மைகள்
* இடது வலது கண்களுக்கென விசேட Plastic லென்ஸ் கொண்டது
* பாரமற்றது * உடையாதது * மிகத் தெளிவானது.

ரூ 1000/-ல் இருந்து

**RAY-BAN OPTICIANS**

81, ஒல்கொட் மாவத்தை. கொழும்பு-11.
தொலைபேசி-327003, 449762

மருத்துவ சிபாரிசுக்கமையவோ, நமது கணனி மூலமோ பார்வையைப் பரிசீலித்து அதே தினத்தில் கண்ணாடியைப் பெறுங்கள்.



**கம்பியூட்டர் வகுப்புக்கள்** 7 முதல் 15 வயது வரையிலான சிறுவர்களுக்கு பென்டியம் கம்பியூட்டர்களில் பயிற்சி வழங்கப்படுகிறது. புதிய வகுப்புகள் ஜனவரி 2 இல் ஆரம்பம். கட்டணம் மணித்தியாலத்திற்கு 50 ரூபா. பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

தொடர்புகளுக்கு:-

**Swiss Tec Computer System**

5- 1/21, கொட்டாஞ்சேனை மார்க்கட் கொம்பிளக்ஸ், கொழும்பு-13.
T.P 078-669247



## ANISCH Anisch Credit & Kranken Kasse

Anisch Bank Credit இன் குறைந்த வட்டி வீதத்தில் இருந்து வங்கிக் கடன் வழங்கும் திட்டமும், ஆலோசனையும்.

(உதாரணம்:- 4000 Sfrக்கு வருட வட்டி 62 Sfr மட்டுமே) 2003 ஆம் ஆண்டின் புதிய வங்கிக் கடன் பெறும் நடைமுறை மாற்றப்பட்டுள்ளதை முன்னிட்டு டிசம்பர் 1ஆம் திகதி முதல் டிசம்பர் 31ஆம் திகதி வரை எம்மிடம் Sfr 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை வங்கிக் கடன் பெறுவோருக்கு 1/2 பவுண் தங்க நகை; Sfr 20 ஆயிரம் முதல் 45 ஆயிரம் வரை வங்கிக் கடன் பெறுவோருக்கு 1 பவுண் தங்க நகை; Sfr 45 ஆயிரம் முதல் 80 ஆயிரம் வரை வங்கிக் கடன் பெறுவோருக்கு 2 பவுண் தங்க நகை அன்பளிப்பாக வழங்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு:- K. Ananda

**Anisch Credit & Kranken kasse**

Gantrisch -Str -11 - 3052- Zullikofen (Born Swiss )

Tel:- 031-9110338 , Natel : 078-8158916 Fax:- 031-9115894





## இலங்கையில் அற்புத மலையாள மாந்திரீக சக்தி

மலையாள மாந்திரீக சித்தர் பேராசிரியர்.
டாக்டர் P.K சாமி (J.D.G.AN) JP அவர்களைச் சந்தியுங்கள்.

1. பிரிந்தவர் ஒன்று சேர.
2. காதல் கைகூட.
3. கணவன் மனைவி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருக்க.
4. காதலன் காதலி தேடிவர.
5. எதிரியின் தொல்லை இன்றி நிம்மதி பெற.
6. குபேர வாழ்வு பெற.
7. குழந்தைப் பாக்கியம் பெற.
8. திருமணம் தோஷ நிவர்த்தி பெற. 9. வலம்புரி மகாலட்சுமி கடாட்சம் பெற.
10. ஒடிப்போனவர் தேடிவர. 11. வெளிநாட்டுப் பிரயாணம் தடை நீங்க.
12. தீராத நோய் தீர. 13. தெய்வீக சக்தியால் ஔடதம் மூலம் கூந்தல் வளர.
14. கடன் தொல்லை சிறுக சிறுக குறைய. 15. கையில் பணம் சேர.
16. அதிஷ்ட வீடு கட்ட.





**★ ஜேர்மனி அன்பரின் மடல், தெய்வீக சக்தியில் பேசும் மழலை**

மனித தெய்வமே! உங்களின் தெய்வீக சக்தியினால் பேசாத எம் 03 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்தத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நமஸ்காரங்கள்.

**★ மட்டக்களப்பு அன்பரின் மடல், துரித கதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு.**

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தங்களின் அருள் சக்தியின் மூலம் நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த எனது வெளிநாட்டுப் பிரயாணம் தங்களோடு தொடர்பு ஏற்படுத்திய பின் உங்கள் சக்தியினால் துரித கதியில் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

**★ மாத்தளை அன்பரின் மடல், கை கூடிய திருமணம்.**

ஐயா அவர்களுக்கு, திருமணம் செய்ய இஸ்டமில்லாமல் இருந்த எனது மகளுக்கு திருமணத்தில் விருப்பம் தெரிவித்து, ஒரு வெளிநாட்டு வரனைத் தங்கள் கிருபையால் தந்து நல்லபடியாகத் திருமணத்தை முடித்துத் தந்தீர்கள். எங்களது மனமார்ந்த நன்றிகள்.

**உங்கள் விதியைத் தெரிந்து கொள்ள**

உங்கள் குறைகளை திட்டவட்டமாக, தெளிவாக மாந்திரீகத் துறையில் 41 வருடங்களாகத் தனக்கென ஒரு பாணியை அமைத்துத் தன்னடக்கத்துடன் சேவை புரியும். P.K. சாமி ஐயா அவர்களைக் கண்டு உங்கள் குறைகளை நீக்கி வாழ்வில் வெற்றி பெறுங்கள். அது மட்டுமா வாழ்வில் தோல்வியில் துவண்டு ஐயாவின் ஆசீர்வாதம் பெற்றபின் வெற்றி பெற்றவர்களின் திட்டவட்டமான, தெளிவான, நூற்றுக்கு நூறு உண்மையென உங்களால் உறுதி செய்யப்பட்ட ஜாதக விவரணம்.

சாஸ்திரம். இது தர்மத்திற்கு இணையாவது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம் கொச்சியம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர், பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்கள் இது ஒரு மயங்க வைக்கும் மாத்திரை அல்ல. மாயா ஜால வித்தையும் அல்ல. பரிபூரண மலையாள துர்க்கையின் தெய்வீக அறபுத அருள் கடாட்சமே.

அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. உங்களுக்கு நடந்தது. நடக்கப்போவது நடக்க இருப்பது, உங்கள் விதியின் விவரணம் என்ன? அன்றைய வருடம் எப்படி? அன்றைய மாதம் எப்படி? அன்றைய நாள் எப்படி? என்பதை அறியவும்.

குறிப்பாகச் **"செய்யும் தொழிலை செய்யாதவன் கெட்டான். செய்யத் தெரியாத தொழிலை செய்தவனும் கெட்டான்"** என்ற வாக்கியத்திற்கு ஏற்ப உங்களின் தொழில் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும். உங்களின் குழந்தையால் உங்களுக்கு யோகமா? உங்கள் திருமணம் எப்பொழுது? எங்கு நடைபெறும். எத்தனையாம் திகதி? என்ற விபரங்களை அறிந்து கொள்ள வேண்டுமா? உங்களின் இல்லம் வாஸ்து சாஸ்திர முறையில் அமைய வேண்டுமா? உங்கள் பிறப்பின் இரகசியம் அறிந்து கொள்ள காண்ட அடிப்படையில் ஜாதகம் எழுதிக் கொள்ளவும்.

**★ஜேர்மனி அன்பர் அனாவின் மடல், பிரிந்த குடும்பம் ஒன்று கூடியது.**

கருணை மிகுந்த கண்ணியத்துக்குரிய ஐயா அவர்களுக்கு, என்றென்றும் உங்கள் நல்லாசிகள் எனக்குத் தேவை. ஐயா ஒரு வருடமாக எனது கணவர் வேற்று மத பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டதால் தினமும் என் கணவனால் நொந்து, வெந்து கொண்டிருந்தேன். என் மன வேதனையை என் தோழியிடம் கூறி ஆறுதல் தேடும்போது அவர் மூலமாக உங்களின் சக்தியை அறிந்து கொண்டு, தங்களோடு தொடர்பை ஏற்படுத்தி என் நிலைமைகளை விளக்கினேன். உங்கள் சக்தியால் ஸ்ரீ துர்க்கையின் பூரண அருள் கிடைக்கப் பெற்று, ஐயா இப்பொழுது என் கணவர் மனம் திருந்தி என்னிடமே வந்து விட்டார். என்னோடு மிகவும் பிரியமாகவும் அன்பாகவும் நடந்து கொள்கின்றார். எனது வாழ்வில் நான் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் இருக்கின்றேன். எல்லாம் உங்கள் அருள் சக்தியின் மகிமையால் நடந்தது. எனது வாழ்க்கையில் ஒளி ஏற்படுத்திய உங்களுக்கு எனது ஆயிரமாயிரம் நன்றிகள்.

**★ கனடா அன்பரின் மடல், புத்தி பேதலித்தவர் பூரண நலம்.**

பெருமைக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு, எனது மகளுக்கு 07 வருட காலமாக இருந்த மனப்பிரச்சனை, மனப் பயம், பைத்தியம் அனைத்தும் உங்கள் தெய்வ அருளால் பூரண சுகம் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

**★ டென் மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத் தக்க முடி வளர்ச்சி**

அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் தலைமுடி உதிர்வதைத் தடுத்து, நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழி காட்டியமைக்கு என்றென்றும், தங்களுக்கும் துர்க்கை அம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

**★ லண்டன் அன்பரின் மடல், என் இனியவள் என்னிடமே வந்தாள்**

மதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து, என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்தமைக்கு ஆயிரம் நன்றிகள்.

**★ கொழும்பு அன்பரின் மடல், தீய பழக்கத்தில் இருந்து மீட்பு.**

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தீய பழக்கம் உள்ள எனது தம்பியை மீட்டு, அவருக்கு புது வாழ்வும், அவருடைய மகளுக்குத் திக்கு வாய் குணமடையவும், எனது மைத்துனிக்கு கிடைக்க வேண்டிய காசு கிடைக்கவும், எனது மைத்துனனின் மகன் வெளி நாடு செல்லவும் தங்கள் அருள் சக்தியின் மூலம் நிறைவேற்றிய உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

**★ லெபனான் அன்பர் வரைந்த மடல், மனநோயில் இருந்து மீட்பு.**

கனம் மதிப்புக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு. நீண்ட காலமாக இருந்து வந்த எனது நோய் பூரணமாகச் சுகம் பெற்று இவ்வுலகில் என்னையும் ஒரு சாதாரண பெண்ணாக வாழ வழியமைத்துக் கொடுத்து நீண்ட நாள் நரக வேதனையில் இருந்து மீட்டுத் தந்தமைக்கு நன்றி.

**★ யாழ்ப்பாணம் அன்பரின் மடல், அச்சொட்டான ஜாதக பலன்.**

ஐயா அவர்களுக்கு என்னுடைய ஜாதக பலனை விரிவாக அறியத் தந்தீர்கள். தாங்கள் கூறியது போல் அனைத்தும் நிகழ்வதையிட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். என்றென்றும் உங்களுக்கு நன்றி.

**★ சுவிற்ஸர்லாந்து சுரேஷின் மடல்.**

அன்புள்ளம் கொண்ட ஐயாவுக்கு, சுரேஷர் எழுதிக் கொள்வது. ஆச்சரியமும் ஆனந்தமாய் இருக்கிறது உங்கள் சேவை. நான் பணம் அனுப்பி. என் பிரச்சனையை தொலைபேசி வாயிலாக "என் காதலியை அழைத்துத் தாருங்கள். அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது." என்ற எனது அழுகைக் குரலுக்கு மனமிரங்கி, தொலைபேசி வாயிலாகவே ஒரு மணி நேரத்திற்குள் 7000 மைலுக்கு அப்பால் இருந்து நீங்கள் செய்த அருள் சக்தி மாந்திரிகத்தின் சக்தியால் என் காதலிஎன்னை வந்து அடைந்து விட்டாள். தங்கள் சேவை மீண்டும் மீண்டும் மக்களுக்குக் கிடைக்கத் துர்க்கையின் ஆசீர்வாதங்கள்.

**★ சுவிஸ் அன்பரின் மடல். நீண்டு வளர்ந்த கூந்தல்**

ஐயா அவர்களுக்கு, நீண்ட காலமாக முடி உதிர்ந்து முடி கட்டையாகி வெளியில் செல்ல முடியாது. வெட்கப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு உங்கள் அருள் சக்தியின் மூலம் கூந்தல் நீண்டு கறுப்பாய் இருக்க அருள்புரிந்தீர்கள். ஐயா! உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**★ ஒப்டன் அன்பரின் மடல். சுகமாகிய புற்றுநோய்.**

ஐயா அவர்களுக்கு, நீண்டகாலமாக புற்று நோயால் அவதிப்பட்ட என் மனைவிக்கு தங்களின்அருள் சக்தியின் மூலம் பூரணமாக சுகம் கிடைத்தது. எங்கள் வாழ்வில் ஒளி வீசிய உங்களுக்கு கோடான கோடி நமஸ்காரங்கள்.

உலக மாந்திரீக சக்கரவர்த்தி.

**Prot. Dr. P.K Samy ( J.D.G.AN) J.P.**
Sri. Durgadevi. mantharika Utchada Peedam,
162. Kotahena Street. Colombo-13.
T.P. 466271, 466571, 342463, 466620, 431137, 466820. Fax: 0094-1-344831.
E.mail: drpk samy . @ sttnet.lk.

பார்வை நேரம் கொழும்பில் காலை 8.00-5.00 மணிவரை
வெளிநாட்டவர் தொ.பே. தொடர்பு காலை 6.00 இரவு 9.00 மணிவரை மட்டுமே. (இலங்கை நேரப்படி)
நுவரெலியாவில் காலை 8.00-6.00 மணிவரை

நுவரெலியா கிளை.

33, Daily Fair Complex, Kandy Road, Nuwara - Eliya.
(நுவரெலியாவில் மட்டுமே கிளை உண்டு.)
T.P. 052 -22508, 35097, 23093, 23336, 23570 Fax: 00945-235097
w.w.w. imexpo lanka . com. drpk samy.

# கிழக்கின் மழை கால அரசியல்

அடேயப்பா... இப்படியொரு அடைமழை, பெரு வெள்ளம் எத்தன வருடகாலத்துக்குப் புறகு வந்திருக்குது. காட்டு வெள்ளம் ஊரெல்லாம் பூந்து ஒரு கலக்குக் கலக்கிப்போட்டுது. சேறும், சகதியும், அழிவும், அகதிகளாக இடம் பெயர்ந்தவர்களின் அவலமும்தான் மிஞ்சிப் போய்க் கிடக்குது.

1965ல் வந்த வெள்ளப் பெருக்குக்குப் புறகு 1979ல் வங்காள விரிகுடாவில் தோன்றிய பெரும் புயல் மட்டக்களப்பைச் சுக்குநூறாகச் சிதறடிச்சது.

பெரும் புயலோடு பெரு வெள்ளமும் சேர்ந்தல்லவா 1979ல் பேரழிவைக் கொடுத்தது. அதற்குப் புறகு இப்படியொரு இயற்கை அனர்த்தம் இப்பதான் நடந்திருக்குது. ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்தப் பெரு மழை வெள்ளத்தால பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

சாங்கம் ஒதுக்கியுள்ளது. அதுவும் உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்களை மட்டும் சென்றடையுமா? என்பது கேள்விக்குரியதே! மட்டக்களப்புக் கச்சேரியில வெள்ளத்தால பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில, அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், சமுக சேவைகள் அமைச்சர், இவர்களுடன் மாவட்ட மக்கள் பிரதிநிதிகள், ஜோசப் அண்ண, வெள்ளிமலை ஐயா சகிதம் நீண்ட நாட்களுக்குப் புறகு தங்கவடிவேல் ஐயாவையும் காண்கிற புண்ணியம் கிடைச்சிருக்கு.

ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்க முடியாத நிலமை ஒரு பக்கமிருக்க, மறுபக்கம் என்னடா என்றால், காத்தான்குடியில நான்கு அரசியல் புள்ளிகள் போட்டி போட்டுக்கொண்டு வீட்டுக் கதவுகளைத் தட்டி நிவாரணம்



படுவாங்கரைப் பக்கமிருக்கிற வயலெல்லாம் இப்பவும் வெள்ளக்காடாய்க் கிடக்குது. ரெண்டொரு நாளில தண்ணி வழியாட்டி வட்டிக்குக் கடன் வாங்கி வயல் விதைச்ச ஏழை விவசாயிகளின் நிலமை படுமோசமாகத்தான் இருக்கும்.

இதைவிட, வெலிக்கந்த, புனானை, மைலந்தன்னைப் பக்கமிருந்து கடந்த பத்து வருஷத்துக்கு முதல் இடம்பெயர்ந்து வந்து வாழைச்சேனை, கல்குடாப் பக்கமிருக்கிற அகதி முகாம்களில வசிக்கிற நூற்றுக் கணக்கான குடும்பங்கள், இந்த வெள்ளத்தால இன்னமும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு, பள்ளிக்கூடக் கட்டடங்களில அகதிகளாகத் தங்கியிருக்கிறாங்க.

படுவாங்கரைப் பக்கமும் இன்னமும் நிலமை மோசம். சில வீதிகள் இன்னமும் வெள்ளக்காடா நிரம்பிப்போய்க் கிடக்கு. ஆனாலும், இந்தப் பெரு வெள்ளத்தில உயிர்ச் சேதமெதுவும் இந்த முறை இடம் பெறவில்லை.

ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் இந்த அனர்த்தத்தில பாதிக்கப்பட்ட போதும் நிவாரண உதவிகள் வழங்க நாற்பது லட்சம் ரூபாவை மட்டுமே அர

வழங்கியதையும் காணக் கிடைத்தது.

பொதுஜன ஐக்கிய முன்னணி எம்.பி., ஏ.எல்.எம். ஹிஸ்புல்லா, சுதந்திரக் கட்சி அமைப்பாளர் ரசூல், முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதி மூபின், ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் ஆகிய நான்கு அரசியல்வாதிகளுமே காத்தான்குடியில் போட்டி போட்டுக்கொண்டு ஜாம், பணிஸ், பாண், பருப்பு, அரிசி, இறைச்சி என்று அள்ளியிறைத்து, பெரு வெள்ளத்துக்கு மத்தியிலும் அரசியல் ஆதாயம் தேட முற்பட்டதைக் காண முடிந்தது.

இதெல்லாம் ஒரு பக்கமிருக்க மழையும், வெள்ளமும் நிறையப் பேரை அகதிகளாக அவஸ்தைப்பட வைத்துக்கொண்டிருந்த வேளையில், கடந்த பத்து வருடத்திற்கு முன்னர் இடம்பெயர்ந்து, காத்தான்குடியில் வசித்து வந்த ஒல்லிக்குளத்துக் கிராம முஸ்லிம்களை மீளக் குடியமர்த்தவெனக் கட்டப்பட்ட வீடுகள் இனந்தெரியாதவர்களால் சேதமாக்கப்பட்டுள்ளது.

போர் ஓய்ந்துள்ளபோதிலும், சமாதான சூழ்நிலையிலும் தொடரும் அச்சுறுத்தல்கள்... இயற்கையின் சீற்றம்... இன்னும் என்ன என்ன நடக்கப் போகுதோ யாருக்குத்தான் தெரியும்.

# சர்ச்சையாக மாறும் உயர் பாதுகாப்பு வலயம்

உயர் பாதுகாப்பு வலயங்களாக இராணுவத்தினரால் பிரகடனம் செய்யப்பட்டிருக்கும் சில இடங்களில் மக்களை மீளக் குடியேற அனுமதிக்க வேண்டும் என்று புலிகள் விடுத்து வரும் கோரிக்கைகளுக்கு இராணுவத்தின் சார்பில் வழங்கப்பட்டுள்ள பதில் சமாதான முன்முயற்சிகளில் சர்ச்சைக்குரிய நிலையைத் தோற்றுவித்துள்ளது.

வடக்கில் பாரிய இராணுவ முகாம்களை அண்மித்த பகுதிகளில் குறிப்பிடத்தக்க தூரம் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இந்த உயர் பாதுகாப்பு வலயம் என்ற பதத்தையே இல்லாமல் செய்துவிட்டு இராணுவ முகாமுக்கு மிக அருகாமை வரையிலும் மக்கள் குடியேற அனுமதிக்க வேண்டும் என்று புலிகள் கோரி வருவதோடு அதற்கான அழுத்தங்களையும் பிரயோகித்து வருகின்றனர்.

இந்த உயர் பாதுகாப்பு வலய விவகாரத்துக்குத் திட்டவட்டமான ஒரு தீர்வைக் காணாத நிலையில் அவசர மனிதாபிமான உதவிகளுக்கான உபகுழுக் கூட்டங்களை நடத்துவதில் அர்த்தமில்லை எனப் புலிகளின் முக்கிய தளபதியான கருணா கடந்த வாரம் கூறியிருந்தார். அவரது இந்தக் கருத்து வெளியாகி ஒரிரு தினங்களில் இலங்கை இராணுவத்தின் சார்பில் உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சனை குறித்த முக்கிய தீர்மானம் வெளியிடப்பட்டது.

யாழ் பிராந்திய இராணுவத் தளபதி சரத் பென்சேகா இராணுவத்தின் இத்திட்டத்தை அரசாங்கத்திடம் சமர்ப்பித்திருக்கிறார். இராணுவத்தின் சார்பில் இது குறித்துப் பிரதமருக்கும் விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் அடங்கும் பிரதேசங்களில் உள்ள வீடுகளை அவற்றின் உண்மையான சொந்தக்காரர்கள் தவிர்ந்த வேறெவருக்கும் வழங்க முடியாது என இராணுவம் திட்டவட்டமாகக் கூறி வருகிறது. அதுவும் அவர்களுக்குக் கூட வீடுகள் கையளிக்கப்பட வேண்டுமாயின் புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய போர் நிறுத்தத்தைக் கண்காணிக்கும் குழுவின் அதிகாரங்களை விஸ்தரித்து, புலிகளின் ஆயுதங்கள் முழுவதையும் பரிசோதனை செய்ய அக்குழுவுக்கு அனுமதி அளிக்க வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டின் பலாலி, நாகர் கோயில், பருத்தித்துறை, முகமாலை, தனங்கிளப்பு, அரியாலை, கொழும்புத்துறை ஆகிய ஏழு உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் அடங்கும் வீடுகள், குடியிருப்புகள், வர்த்தக நிலையங்கள் என்பவற்றை அவற்றின் உண்மையான உரித்தாளர்களன்றி வேறு எவருக்கும் வழங்க முடியாது என்பதை இராணுவம் மிக உறுதியாகக் கூறுகிறது.

தற்போது போர் நிறுத்த சூழ்நிலை என்பதாலும் இனிமேல் அத்தகையதொரு ஆபத்து இல்லை என்பதாலும் இராணுவத்திற்கு உயர் பாதுகாப்பு வலயத்தின் அவசியம் இல்லை எனப் புலிகள் கூறுகின்றனர்.

புலிகள் சொல்வது போல் இனிமேல் போர் மூளாது, யுத்த பீதி இல்லை என்றால் அவர்கள் தங்களது கனரக ஆயுதங்களைக் கைவிடலாம்தானே என மறுபுறம் இராணுத்தின் சார்பில் கேள்வி

> புலிகள் சொல்வது போல் இனிமேல் போர் மூளாது, யத்த பீதி இல்லை என்றால் அவர்கள் தங்களது கனரக ஆயதங்களைக் கைவிடலாம்தானே என மறுபுறம் இராணுத்தின் சார்பில் கேள்வி எழுப்பப்படுகிறது.

எழுப்பப்படுகிறது. இந்த நிலையை ஏற்று ஆயுதங்களைக் கைவிடப் புலிகள் தயாரில்லையாயின் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றத் தாமும் தயாரில்லை என்பதே இராணுவத்தின் வாதம்.

உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமான பிரச்சனையை அவசர மனிதாபிமானப் பிரச்சனைகளுடனும் புனர்வாழ்வு நடவடிக்கையுடனும் முடிச்சுப் போடத் தேவையில்லையெனப் படையினர் சார்பில் கூறப்படுகிறது.

எவ்வாறெனினும் இப் பிரச்சனை தற்போதைய அமைதி நிலையைப் பாழடித்துவிடக் கூடாது என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு.

# அதிரடி அய்யாத்துரை




**மகேஸ்வரனார் தாஜ்மஹால்** கட்டப்போறார் தெரியுமோ? மனுசனுக்குக் காதல் தோல்வியோ என்று கேட்டுப்போடாதயுங்கோ! உது வித்தியாசமான தாஜ்மஹால். நல்லூர் ஆதீனத்திற்கு டக்ளஸ் அமைச்சராயிருக்கேக்க நிதி வழங்கினவர். அது அங்கிருக்கிற பெயர்ப் படிகத்தில எழுதிக் கிடக்கு. அந்தப் பெயர்ப் படிகத்திலிருந்து டக்ளஸின்ர பெயரை நீக்கிவிடச் சொல்லி சிறுபிள்ளைத்தனமா அடம்பிடிச்சிருக்கிறார் நம்மட மண்ணெண்ணெய்க்காரர். ஆதீன நிருவாக சபை கூடி "உது நியாயமில்லாத கோரிக்கை" என்று மகேஸ்வரனுக்குத் திட்டவட்டமாச் சொல்லிப் போட்டுது. பிறகு ஆதீனத் தலைவரைத் தனியாச் சந்திச்ச மகேஸ்வரன் தன்ர வழமையான வியாபாரக் கலையோடு ஆதீனத் தலைவரையும் விலை பேசியிருக்கிறார். "உங்களின்ர வீட்டை தாஜ்மஹால் போல கட்டித்தாறன். டக்ளஸின்ர பெயரை நீக்கிவிடுங்கோ" என்று கேட்டிருக்கிறார். விசயம் சரிவரயில்லைப் போலக் கிடக்குது.

**கிழக்கில மாற்றுக் கட்சிக்காரரைக்** கடத்திற்றுப் போறதும், வெட்டிக் கொன்று வாவியில போடுறதுமாக நடக்கிற ஈனச் செயல்களைக் கொழும்புத் தமிழ்ப் பத்திரிகைகளும் கண்டிக்க முன்வந்திருப்பதைப் பார்க்க எங்களின்ர பத்திரிகையாளர்களுக்கும் முதுகெலும்ப இருக்கிறது என்று மீண்டும் நம்ப வைக்கிறது. உந்தக் கொலைகளுக்கு யார் காரணம் என்று தெரிந்துகொண்டும் கண்டிச்சிருக்கினம் எண்டால் மயக்கம் தெளியத் தொடங்கியிருக்கிறது என்றுதானே அர்த்தம்.

**"பாலசிங்கம் அண்ணையின்ர** வெள்ளைக்கார அம்மணியை ஏன் எங்களின்ர பேச்சுவார்த்தைக்கு அழைச்சுட்டுப் போகவேண்டும்" என்று கட்சிக் கூட்டத்தில தைரியமாக் கேட்டுப் போட்டார் கூட்டணியின்ர தாடிக்கார எம்.பி. மற்றவை சும்மா கேட்டுக் கொண்டிருப்பினமோ? விசயம் நேராக வன்னிக்குப் போட்டுது. இப்போது வம்பில மாட்டிக் கொண்டிருக்கிறார் ஐயா. "அடுத்த இலக்சனில போட்டியிட விடமாட்டம்" என்று வன்னிக்காரர் இப்பொழுதே கூறத் தொடங்கிட்டினமாம்.

**அரசியல்வாதிகளின்ர பிள்ளைகள்** நட்சத்திர ஹோட்டல்களில போய் அடிதடி சண்டை பிடிக்கிறது வழக்கமான விசயமாய்ப் போயிட்டுது. அப்பாக்கள் பாராளுமன்றத்தில செய்யிறதைப் பிள்ளைகள் ஹோட்டல்களில செய்யினம். எதிர்காலத்தில நாட்டைக் குட்டிச்சுவராக்க வளரும் வாரிசுகளைச் சட்டமும் கண்டுகொள்ளாமல் இருப்பதுதான் கவலையான சமாசாரம்.

**சட்டவிரோதமா நடக்கிற** காரியங்களை விசாரிச்சு தண்டனை கொடுக்கிறதுதான் நீதிமன்றத்தின்ர வேலை. நீதிமன்றமே சட்டவிரோதமாக இயங்குதென்ற புதுக் கூத்து இந்த நாட்டில நடக்குது. கிழக்கில வழக்கு விசாரிக்கேக்க பொலிசார் போய் நீதிமன்றத்தைச் சுற்றிவளைக்க, சட்டத்தரணிகள் தப்பியோடிட்டினம். குற்றவாளிகளும் தப்பிச்சிட்டினம். கடைசியில நீதிபதிதான் சிக்கினார். அவரைக் கொண்டுபோய் இன்னொரு நீதிபதியிட்ட நிறுத்தி பிணையில விடுவிச்சிருக்கினம்.

**ஒரு காலத்தில அசைக்க** முடியாத அணியாயிருந்த இலங்கை கிரிக்கெட் அணிக்கு இன்று தோல்வியைத் தவிர வேறொன்றும் தெரியாத பரிதாப நிலை பாத்தியளோ. தொடர்ச்சியாகக் கிடைக்கிற தோல்விகளால இரசிகர்களை விட நொந்துபோய் இருக்கிறது அரசாங்கம்தான். சனத்தின்ர தலையில கிரிக்கெட் ஜுரம் உச்சத்தில அடிக்கேக்க எத்தனை பொருட்களுக்கு விலை யேத்தியிருக்கலாம்.

# ஸ்போர்ட்ஸ்

## இலங்கை அணிக்கு தொடர் தோல்விகள்

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் வி.பி.கிண்ண முக்கோணப் போட்டித் தொடரில் இலங்கை அணி சந்தித்து வரும் தோல்விகள் தொடர்கின்றன.

இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய இரு அணிகளுடனும் இலங்கை அணி படுதோல்விகளை சந்தித்தது.

ஞாயிற்றுக்கிழமை பேர்த் நகரில் அவுஸ்திரேலியாவுடன் நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலியா பெற்ற 305 ஓட்ட இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 163 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்தப் போட்டியில் அவுஸ்திரேலிய அணிக்காக டெரன் லிமன் 119 ஓட்டங்களைக் குவித்தார். மெதிங் ஹேடன் 64 ஓட்டங்களையும், மைக்கல் பெவன் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

தொடராக பல போட்டிகளில் மிக மோசமான துடுப்பாட்டத்தில் ஈடுபட்ட இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் ஞாயிறன்று நடந்த போட்டியிலும் செயலிழந்தனர்.

ரசல் ஆனல்ட் (40), ரொமேஷ் களுவிதாரன (35) ஆகியோரைத் தவிர முன்னணி வீரர்கள் எவரும் மிளிரவில்லை.

முன்னதாக இங்கிலாந்து அணியுடன் நடைபெற்ற போட்டியிலும் இலங்கை அணி 160 ஓட்டங்களுக்கு மொத்த விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டம், பந்துவீச்சு, பந்துத் தடுப்பு ஆகிய மூன்றிலும் இலங்கை அணி மிகவும் பலவீனமான நிலையில் இருப்பதாகக் கூறியிருக்கும் சனத் ஜயசூரிய, இவற்றை உடனடியாக மீளமைக்காத பட்சத்தில் இப்போட்டித் தொடரில் இறுதிப் போட்டிக்கான வாய்ப்பை இழக்கவேண்டி ஏற்படும் எனக் கூறியிருக்கிறார்.

இலங்கை அணி கலந்துகொள்ளும் அடுத்த போட்டி ஜனவரி 9ம் திகதி சிட்னியில் நடக்கவிருக்கிறது.

## சிந்தியா பதில்கள்

★ **சிந்தியா! எமது போராட்டத்தில் துரோகிகள் என்று பட்டத்தைச் சுமந்து கொண்டு தேசத்தை நேசிக்கும் தேசியவாதிகளும் உள்ளனர். தேசியவாதிகள் என்று கூறிக்கொண்டு தேசத்தைக் காட்டிக்கொடுக்கும் தேசத் துரோகிகளும் உள்ளனர். இவர்கள் யார் யார் என்று அடையாளம் காட்ட முடியுமா?**

ந. ஞானன், காங்கேசன்துறை.

*இதற்குப் பதில் சொல்லாமல் மௌனமாயிருந்து தேசியவாதியாகக் காட்டிக் கொள்வதே எனது விருப்பமும்!*

★★

★ **"நான் ஒரு தடவை சொன்னா நூறு தடவை சென்ன மாதிரி" இதே வார்த்தையை 1974ல் வெளிவந்த நாளை நமதே படத்தில் எம்.ஜி.ஆர். சொல்லியிருக்கிறார். 20 வருடங்கள் கழித்து ரஜினி இப்போது சொல்லும்போது மட்டும் ஏன் இளைஞர்கள் மத்தியில் அது பிரபலமாகப் பேசப்படுகிறது?**

எஸ். மரியதாஸ், லோகி தோட்டம்.

*எம்.ஜி.ஆர். அதைச் சொல்லும்போது ஒற்றை விரலை அப்படியும் இப்படியுமாகச் சுழட்டினாரா, பின்னணியில் 'விஸ்ஸ்க் விஸ்ஸ்க்' என்ற சத்தம் வந்ததா, ஸ்லோ மோஷனுடன் ஒரு முப்பது முறையாவது அதைத் திருப்பித் திருப்பிச் சொன்னாரா... இல்லையே!*

★★

★ **இப்போது வருகிற தமிழ்ப்படங்களில் பெரும்பாலானவை கலாசாரத்தைச் சீரழிப்பதாகவும், எங்கள் பொது அறிவைக் கேலி செய்வதாகவும் அமைந்திருக்கின்றனவே?**

ரீ. கமலசுந்தரி, பசறை.

*இது குறித்து இயக்குநரும் நடிகருமான சேரன் கூறியிருந்த கருத்து நல்லவிதமாகப்பட்டது. அதாவது படத்தைப் பார்த்துவிட்டு வெளியே வருபவர்கள், அடுத்த காட்சிக்காக நிற்பவர்களிடம் "இந்தப் படத்தைப் பார்க்காதீர்கள்" என்று ஒவ்வொருவரிடமும் சென்று சொல்ல வேண்டும். இதை ஒரு சமூக சேவையாகக் கருதிச் செய்ய ரசிகர்கள் முன்வர வேண்டும்.*

*(அதுபோல, தொலைக்காட்சி நாடகங்கள் குறித்தும் நிலையத்தினருக்குப் பலநூறு கடிதங்கள் செல்ல வேண்டும்.) வேறு எப்படி இந்த அபத்தங்களை முடிவுக்குக் கொண்டு வருவது!*

★★

★ **அந்த ஆண்டவன் கட்டளை ஆறு என்கிறாரே கண்ணதாசன், அவை என்னங்க?**

க. கமால்தீன், ஏறாவூர் 3.

*ஆறு மனமே ஆறு.*

★★

★ **அர்ஜுனின் அடுத்த படம் என்ன?**

எம்.எஸ். மகீன் மொஹமட், கெக்கிராவ.

*ஒற்றன், ஜோடி சிம்ரன்.*

★★





★ **சமீபத்தில் படித்தது என்ன?**

மனோகோபாலன், ஹப்புத்தளை.

*'இனி நான் உறங்கட்டும்'- பி.கொ.பாலகிருஷ்ணனின் மலையாள நாவலின் தமிழாக்கம். தமிழில் 'கிருஷ்ணப் பருந்து என்ற நல்ல நாவலைத் தந்த ஆ.மாதவன் இதைத் தமிழாக்கியிருக்கிறார். மகாபாரதத்தின் உணர்ச்சிக் கொந்தளிப்பான தருணங்களைத் தொடுத்துப் புனையப்பட்டது. தமிழில் எஸ்.ராமகிருஷ்ணனும் இதுபோலொரு மறுவாசிப்பை 'உப பாண்டவன்' என்று தந்திருக்கிறார். பொதுவாகவே பாரதக் கதை அதன் உணர்ச்சிகரமான தருணங்களால் தொடர்ந்து நம்மோடு உறவுகொண்டியங்கி வருவது அந்த வகையில் ராமகிருஷ்ணனுடையதை வீட பாலகிருஷ்ணனுடைய இந்த நாவல் பாரதத்தை வெகுவாக வழிமொழிகிறது.*

★★

★ **அரைகுறை ஆடையுடன் நம் தமிழ்ப் பண்பாட்டை மிதித்து நடக்கும் மங்கையர் பற்றி?**

கதிரவேலு தர்ஷன், கல்கிசை.

*தமிழ்ப் பண்பாடு என்ன தரையிலேயா கிடக்கிறது!*

★★

★ **ஷாம் அதற்கிடையில் திருமணம் செய்து கொண்டுவிட்டாரே, நடிகராக இனி தாக்குப் பிடிப்பாரா?**

எஸ். பிரபாயினி, கொழும்பு.

*விக்ரம், அஜித், விஜய் எல்லோருமே திருமணத்திற்குப் பிறகும் வெற்றிப்படங்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள் என்ற நம்பிக்கையில் செய்திருக்கிறார். இனிவரும் படங்களில் வெற்றியைக் காண்பித்தால்தான் அவரிடம் இளமைக் கவர்ச்சியை விடவும் வேறு 'விஷயம்' இருக்கிறது என்பது உறுதியாகும்.*

★★

★ **காதல் என்பது உடைமையா? பகிர்வா?**

ரட்ணசபாபதி ரமேஷ், கல்லோயா.

*உடைமைப் பகிர்வு!*

★★

★ **ஒருவர் ஏழையாகவும், ஒருவர் குபேரனாகவும் இருக்கிறார்கள். இவருவரும் சாதாரண மனிதர்கள்தான், எப்படி இந்த ஏற்றத்தாழ்வு? அப்படியானால் சுவர்க்கம், நரகம் என்பது இவ்வுலகிலேயே தீர்மானிக்கப்படுகிறதா?**

எம்.எம். மஹ்ரூப், கல்முனை.

*இவ்வுலகில் அல்ல வேறெங்கோ நமக்கு அப்பாற்பட்ட இடத்தில் தீர்மானிக்கப்படுகிறது என்று சொல்வது இந்த நிலைமையைத் தொடர விடுவதற்குத்தான் ஆதரவாகும். ஒரு சிலர் வாழவும், மற்றும் பலர் வாடவுமான ஏற்றத்தாழ்வு நிலைமையை அனுமதிப்பது நம்மை நாமே கேவலப்படுத்திக் கொள்வதுதான். அது ஒரு ஏமாற்றும் கூட. சுவர்க்கத்தையும் நரகத்தையும் இங்கேயே தீர்மானித்து விடலாம் என்று முயல்வதுதான் சரி.*

★★

★ **ஈராக்கின் ஆயுத விபர அறிக்கை தமக்கு ஏமாற்றம் அளித்துள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளதே?**

சி. துஷ்யந்தன், மண்டூர்.

*பாய்ந்து தின்பது என்று தீர்மானித்த பிறகு, "குளத்தை நீ கலக்காவிட்டால் உன் அப்பன் கலக்கியிருப்பான்..." கதைதான்!*

★★

## இலக்கிய நயம்

# இனிமை தரும் உன் இளமைக் கோலம்

"என்னடி இது கோலம்?" என்று கேட்டுக் கொண்டே உள் நுழைந்தாள் மிதுகா.

"ஏன் வாசலில் காற்றுக்குக் கலைந்துவிட்டதா?"

என்று உணர்ச்சியற்ற வறண்ட குரலில் சம்பாவனா கேட்டாள்.

"ம்... வாய்க் கொழுப்பு மட்டும் இன்னும் வடியவில்லை" என்று கோபமாய்ச் சொன்னாள் மிதுகா.

"என்னடி.... ஏன் கோபப்படுகிறாய்?"

"பிறகென்ன? என்னமோ உன்னிடமிருந்த நீர்ச் சத்து எல்லா வற்றையும் பேயோ பிசாசோ உறிஞ்சி எடுத்துக் கொண்டு போய்விட்டது போல... பாதியில் பாதியாய்... இது என்ன கோலம் என்று உன்னைக் கேட்டால் ஒன்றும் தெரியாத பாப்பா மாதிரி வாசல் கோலத்தைப் பற்றிக் கதைக்கிறாய்..."

சம்பாவனா முகத்தில் கசப்பான சிரிப்புப் படர்ந்தது. அவள் கையைத் தன் கைகளில் எடுத்து வைத்துக்கொண்டே மிதுகா சொன்னாள்; "இங்கே பார், ஈர்க்குக் குச்சி போல ஆகிவிட்டது கை... வளையல்களுக்கிடையில் என் கையையும் நுழைத்துவிடலாம் போல உள்ளது. ஏதேனும் வேண்டுதலா? எத்தனை நாளாக உபவாசமிருக்கிறாய்?" பார்வையை எங்கோ வெறிக்கவிட்டுச் சோக சிற்பமாய் அமர்ந்திருந்தாள் சம்பாவனா.

'இவளுக்கு என் நிலை எப்படிப் புரியும்? நீர்ச் சத்து என்ன, உயிர்ச் சத்தே உறிஞ்சியெடுக்கப்பட்ட பிறகு உருவத்தில் எப்படிச் செழிப்பு வரும்'

சம்பாவனா இதழ்களின் ஓரத்தில் கைப்பு நகை நெளிந்தது. 'யாரும் நடமாட அஞ்சும் இருண்ட பொழுதுகளில் அவன் வருகையைப் பார்த்து ஒளிபெற்ற கண்கள், இந்த ஒளி மிகுந்த பகல் சூழலிலோ எதையும் பார்க்க முடியாதவாறு குருடாகிக் கிடப்பதை இவள் எப்படி அறிவாள்!'

அவனைக் காதலிக்க ஆரம்பித்துப் பல நாட்கள் கடந்த பிறகு, நிகழ்ந்த அந்த முதல் நாளை நினைத்தாள் சம்பாவனா. அன்று அவள் கையைப் பிடித்து 'வா' என்று ஏறக்குறைய பலவந்தமாக இழுத்தபடி அந்த மலையடிவாரத்துக்குச் சென்றான் தாருகன். சுற்றிலும் மரங்களின் மறைவில் இருந்த சிறுவழியில் கொண்டு வந்து அவளை நிறுத்தினான். தனிமை.

அவனையும் அவளையும் தவிர சுற்றிலும் யாருமற்ற தனிமை.

இப்படி யாருமற்ற ஓர் உலகில் அவனுடன் தனித்திருக்க வேண்டுமென்று எத்தனை நாள் அவள் மனதுக்குள் வேண்டியிருப்பாள்... இன்று ஏன் இப்படி உடம்பு நடுங்குகிறது?... நாம் அற்புதம், பேரின்பம் என்று நினைக்கும் நிகழ்ச்சிகள் உண்மையாகவே கிட்டும் போது ஏன் இத்தகைய அதிர்ச்சி ஏற்படுகிறது? என்று தன்னைத் தானே வினவிக் கொள்ளவும் செய்தாள்.

ஒரு பாறையில் அமர்ந்து கொண்ட தாருகன் அவளையும் தன்னருகில் அமர்த்திக் கொண்டான். அவளது முதுகைச் சுற்றிய அவன் இடதுகை இடையில் சென்று தங்கியது. முரட்டு விரல்களின் அழுத்தத்தில் அந்த மென்மைத் தசை நசுங்கியது.



'அந்த முரட்டு விரல்களை ஏன் இந்த இடை ரசிக்கிறது' என்று சினந்தாள். எதிரிடைகளின் கவர்ச்சியா எதுவும்? தன் உடல் ஏதோ காந்தத்தால் இழுக்கப்படுவது போல அவனை நோக்கி மெல்லச் சாய்வதைக் கண்ட அவள், தன் உடலும் சித்தமும் ஏன் தன் சுவாதீனத்திலில்லை என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டு விடை காணாமல் தவித்தாள். அதுமட்டுமில்லை, அப்படியே தன் மார்போடு இறுக்கித் தன்னை நொறுக்கிவிடமாட்டானா என்று ஏங்கவும் செய்தாள்.

பாசுபதாஸ்திரம் பெறும் தவத்திற்காகச் செல்லும் அர்ஜுனன் விடைபெற வந்தபோது, "எனது மார்புகள் இரண்டும் வலி எடுக்கும் அளவுக்கு உங்களை நான் இறுகத் தழுவுவேன்" என்று சொன்னதாகக் கவிஞன் எழுதியிருந்தது ஞாபகத்தில் வந்தது. பெண் வேட்கையின் உச்சத்தை எத்தனை துல்லியமாய் வர்ணித்திருக்கிறான் என்று வியந்தாள் சம்பாவனா.

உள்ளம் தவிக்க உடல் இன்பத்தால் துடிக்க அமர்ந்தது அமர்ந்தபடி இருந்தாள். செடிகளின் ஊடாகத் தெரிந்த அருவியைப் பார்த்தாள். 'உன் உறுதி இவ்வளவுதானா?' என்று சலசலவென ஓடிய அந்த அருவி அவளைப் பார்த்து நகைப்பது போலிருந்தது.

தாருகனும் புதுமையை உணர்ந்த படபடப்பிலிருந்தான். பாம்பு சீறுவது போல அவனுக்கு மூச்சு வந்துகொண்டிருந்தது.

இடையைப் பற்றியிருந்த கையால் அவளைத் தன்னை நோக்கி இழுத்து, அவள் கழுத்தில் தன் இதழ்களைப் புதைத்தான். அதனால் அவள் உடல் சற்றே நடுங்கியது. பிறகு அவனுடன் இழைந்தது. கழுத்தின் வழவழப்பிலிருந்து, சுகந்தத்திலிருந்து உதடுகளை நீக்கி நிமிர்ந்தவன் அவள் அழகிய கண்களை நோக்கினான். கண்களுக்கு எதிராகக் கண்களும், உதடுகளுக்கு எதிராக உதடுகளும் நின்ற நிலையில்... யுத்தகளத்தின் நெருக்கடி அங்கே தோன்றியிருந்தது. ஆயிரமாயிரம் கவிதை வரிகள் ஓடிய அவள் கண்களில் அழைப்பிருந்தது. சற்றே விரிந்து கிடந்த செவ்விய உதடுகளிலும் அழைப்பிருந்தது.

அவளை மெல்லச் சரித்து அவள் மீது பரவினான்.

அந்தத் தலைநாள் பரவசம் அவள் இதயத்திலும் அழிக்க முடியாதபடி பதிந்தது.

அதன் பின்னும் பல நாட்கள் இருவரும் அங்கே சந்தித்துக் கொண்டனர். ஒவ்வொரு நாளும் புதுப்புது அனுபவங்களே அங்கு விளைந்தன. புதிய புதிய நாட்களாகப் பொலிந்தன.

ஊர் உறங்கிய பின், யாரும் நடமாடத் தயங்கும் இருளில், முதலாம் நாள் வந்த அதே ஆர்வத்துடனும் படபடப்புடனும் தாருகன் வருவான். அவன் உருவைக் காண்கிற போதெல்லாம் ஏற்படும் இன்பப் படபடப்பை இப்போது மீண்டும் நினைந்தாள் சம்பாவனா.

அவனைக் கண்டு எவ்வளவு நாட்கள் ஆகின்றன? எப்போது இனிக் காண்போம் என்றும் தெரியவில்லை.


"தன் பிரசன்னத்தால் கண்களுக்கு ஒளி தந்து கொண்டிருந்தவனைக் காணாது தவிக்கும் இந்த உடலில் தோள் மெலிதலும், வளையல்கள் கழன்று விழுதலும் அதிசயமாடீ தோழி? என் முடிவே எப்படியாகுமோ அறியேன் நான். இதில் தோள்களையும், வளையல்களையுமா நான் பாதுகாத்துவிடப் போகிறேன்..."

**மலைமுதல் சிறுநெறி**
**தலைநாள் அன்ன**
**பேணலன் பலநாள்**
**ஆர்இருள் வருதல்**
**காண்பேற்கு**
**யாங்கு ஆகும்மே**
**இலங்கிழை செறிப்பே.**

*(நற்றிணை 332: 7-10)*



# மனைவியால் சிக்கல்



பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் தன் மனைவியால் சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறார்.

ரொனி பிளேயரின் மனைவியான செரி பிளேயர் பிரிட்டனில் மிகவும் பிரபலமான சட்டத்தரணி. இவர், அந் நாட்டு நீதிமன்றங்களினால் பலமுறை குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட பீற்றர் பொஸ்டர் என்ற ஏமாற்றுப் பேர்வழியுடன் சேர்ந்து, அமெரிக்காவின் பிரிஸ்டல் பகுதியில் விலை அதிகம் உள்ள தொடர் மாடிகள் இரண்டை முறைகேடாக வாங்கினார் என சர்வதேச ஊடகங்கள் குற்றஞ் சாட்டியுள்ளன.

இந்த பீற்றர் பொஸ்டர் 1980ம் ஆண்டு தொடக்கம் பிரிட்டனில் நன்கு அறியப்பட்ட ஏமாற்றுக்காரர். இந்தக் காலப் பகுதியில் பாய் லின் என்ற ஒரு வகை குடிபானத்தை அறிமுகம் செய்து. இதைப் பருகுபவர்களின் உடல் மென்மையடைவதாகப் பொய்ப் பிரசாரம் ஒன்றை மேற்கொண்டு கோடிக் கணக்கில் சம்பாதித்தவர். இவ்வாறு தொடர்ச்சியான பல சட்ட விரோதச் செயல்களில் ஈடுபட்டு சிலகாலம் நாட்டைவிட்டு வெளியேறியிருந்த இவர், பல்லாயிரக் கணக்கான பவுண் நட்டஈடு செலுத்தி மீண்டும் பிரிட்டனுக்கு வந்து சேர்ந்தவர்.




இந்த நபரின் உதவியுடன் ரொனி பிளேயரின் மனைவி அமெரிக்காவில் இரண்டு தொடர் மாடிகளை வாங்கி இருக்கிறார். இப்போது இது பெரும் சர்ச்சையாக உருவெடுத்துள்ளது. தனக்கு பீற்றர் பொஸ்டரின் ஊழல்கள் பற்றித் தெரியாது என செரி பிளேயர் கூறியிருப்பதைப் பெரும்பாலான பிரிட்டிஷ் மக்கள் நம்பவில்லை என்று கருத்துக் கணிப்புக்கள் கூறுகின்றன. இந்தச் சம்பவம் தொடர்பாகப் பிரதமர் பிளேயர் எந்தக் கருத்தையும் தெரிவிப்பதைத் தவிர்த்து வருகிறார். எவ்வாறெனினும் மனைவியின் இச் செயல் பிளேயருக்குள்ள ஆதரவைக் குறைத்து வருகிறது எனப் பிரிட்டிஷ் பத்திரிகைகள் எழுதுகின்றன.

## தகவல் பெட்டி

டைட்டானிக் திரைப்படத்தில் காதலிக்காக உயிர் துறக்கும் கதாநாயகனாக நடித்த லியனாடோ டி.கெப்ரியோவுக்கு எதிராக மற்றொரு நடிகர் 45 மில்லியன் டொலர் நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார்.

ஜோர்ஜ் வில்சன் என்ற நடிகரே இந்த வழக்கைத் தொடுத்துள்ளார்.

டி.கொப்ரியோவின் காதலியான எலிசபெத் பேர்க்லியின் முன்னாள் காதலன்தான் இந்த ஜோர்ஜ் வில்சன். எலிசபெத் பேர்க்லி 'ஷேர் கேர்ல்ஸ்' என்ற நாடகத்தில் நடித்ததன் மூலம் பிரபலமானவர்.

ஜோர்ஜ் வில்சனை டி.கொப்ரியோ ஆள் வைத்து அடித்தார் என்பதுதான் குற்றச்சாட்டு.

எவ்வாறெனினும் இந்தக் குற்றச்சாட்டை டி.கொப்ரியோ மறுத்திருக்கிறார்.

மென்மையான காதல் நாயகனை முரட்டுத்தனமான ஆசாமியாகப் பார்க்க வைத்திருக்கிறது இந்த வழக்கு!

# "அடிக்கவில்லை"



சமூகத்தில் நிகழும் பல்வேறு விதமான கொடுமைகளை, அநீதிகளை எதிர்த்துப் போராடுபவர்கள் மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக வெவ்வேறு வகையான உத்திகளைக் கையாள்வார்கள். அவற்றுள் சில சுவாரஸ்யமானவையாக இருக்கும். இன்னும் சிலவற்றில் வன்முறைத் தன்மை நிரம்பியிருக்கும். ஆபத்தான வழிமுறைகளும் கையாளப்படுவதுண்டு.

காஷ்மீரில் வாழும் முஹமட் அஹ்சான் என்ற மனித உரிமை செயற்பாட்டாளர், காஷ்மீர் பகுதியில் தொடர்ச்சியாக நடந்து வரும் மனித உரிமை மீறல் சம்பவங்களைக் கண்டித்துக் கடந்த 10ம் திகதி சர்வதேச மனித உரிமை தினத்தன்று வித்தியாசமான முறையில் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

இந்திய இராணுவத்தின் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து அஹ்சான் காஷ்மீர் தலைநகரான ஸ்ரீ நகரில் தன்னைத் தானே தீ மூட்டிக் கொண்டார்.

# எதிர்ப்பு

பொலிஸார் வந்து மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் அஹ்சானின் உடலில் பற்றிய தீயை அணைத்தனர். அவருக்குச் சிறிதளவு காயமேற்பட்டது.







ராஜ்சித்-சிம்ரன்
படம்: ஐ லவ் யூ டா

## திருச்சி ஹோட்டலில் ஒன்றாகத் தங்கிய கமல்-சிம்ரன்

கமல் சிம்ரன் இருவரும் திருச்சியில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு வந்ததாகச் செய்தி வியதையடுத்து ஹோட்டலைச் சுற்றி ரசிகர்கள் கூடிவிட்டனர்.

இருவரும் ஹோட்டலின் பின் வாசல் வழியே வேகமாக உள்ளே சென்றுவிட்டனர்.

திருச்சியில் கமலின் அண்ணன் சந்திரஹாசனின் வீடு உள்ளது. கமல், தனது அண்ணன் வீட்டுக்கு வந்திருக்கலாம் என்று கூறப்பட்டது.

அப்படியே இருந்தாலும் சிம்ரனுடன் அவர் திருந்த காரணம் குறித்துப் பல்வேறு வதந்திகள் கிளம்பியுள்ளன. ஒருவேளை சிம்ரனைத் தனது அண்ணன் வீட்டினருக்கு அறிமுகப்படுத்துவதற்காகக் கமல் கூட்டி வந்திருக்கலாம் என்று பேச்சு நிலவுகிறது.

மறுநாள் காலை சிம்ரன் தனியே தோணம் புறப்பட்டுச் சென்றார். அங்கு நடக்கும் 'அரசு' படப்பிடிப்பில் கலந்து கொள்ளச் சென்றதாகக் கூறப்பட்டது. பின்னர் கமலும் புறப்பட்டார். அவர் சென்னை திரும்பி விட்டதாகத் தெரிகிறது.

## பிரஷாந்த் உற்சாகத்தில்

'விரும்புகிறேன்,' படத்தின் வெளியீடு தாமதமாக நிகழ்ந்தாலும், தரமான படமாக உருவாகியுள்ளது குறித்து மகிழ்ச்சியுடன் காணப்படுகிறார் பிரஷாந்த். ஏற்கனவே அவர் ராஜ்கபூர் இயக்கத்தில் அமீஷா பட்டேல் ஜோடியாக நடித்த 'என்ன விலை அழகே...' படமும், சேரன் இயக்கத்தில் ஷிவானி போண்டவர் பூமி' ஷீதாவுடன் நடித்த 'விண்ணோடும் முகிலோடும்' படமும் விரைவில் திரைக்கு வரத் தயாராகிக் கொண்டிருக்கிறது. தவிர, 'வின்னர்' படத்தில் கிரண் ஜோடியாக நடிக்கிறார். சொந்தப் படமான ஜெய் இருக்கிறது. இப்படி ஒரே சமயத்தில் ஐந்து படங்களில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட கேரக்டரில் தோன்றி அசத்தப்போகிறார் பிரஷாந்த்.

## ஒரு பாட்டுக்கு ஆட்டம் போட வாய்ப்புத் தேடும் ராதா?

'சுந்தரா டிராவல்ஸ்' ராதா இப்போது சிங்கிள் டான்ஸுக்காக வாய்ப்புக் கேட்டுப் படி படியாக ஏறி, இறங்கி வருகிறார்.

முரளியுடன் சேர்ந்து 'சுந்தரா டிராவல்ஸ்' படத்தில் நடித்தவர் ராதா. இந்தப் படத்தில் வடிவேலு அடித்த காமெடி கலாட்டாவில் முரளியே காணாமல் போயிருந்த நிலையில் ராதாவை யாராவது ஞாபகம் வைத்திருப்பார்களா?

மலையாளக் கரையோரத்தில் இருந்து தமிழுக்கு வந்த இந்த ராதாவும் 'அலைகள் ஓய்வதில்லை' ராதாவைப் போல வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டார். நன்றாகத்தான் நடித்தார். ஆனால், வந்த ஒரு படத்திலேயே காணாமல் போய்விட்டார்.

நன்றாக நடித்தாலோ, ஹீரோயின் களுப்பாக இருந்தாலோ தமிழ் சினிமாவில் இடம் கிடைக்காதே! கிரண்களுக்கு மத்தியில் தாக்குப் பிடிப்பது அவ்வளவு சுலபமா என்ன?

'சுந்தரா டிராவல்ஸ்'க்குப் பின் கூட வாய்ப்புகள் முற்றிலும் இல்லாத நிலையில் இருந்த ராதாவுக்கு, முரளி புதுவாழ்வு கொடுக்க முன்வந்துள்ளார்.

தான் நடிக்கும் 'ஒளி' படத்தில் சிங்கிள் டான்ஸுக்கு வாய்ப்பு வாங்கித் தருவதாக ராதாவுக்கு உறுதி கூறியிருக்கிறாராம் முரளி.

இதனால் முரளி மீது ராதாவுக்கு அலாதிப் பிரியம் வந்துவிட்டதாம். அவர்தான் எனக்குக் குரு என்று, கண்ணில் படுபவர்களையெல்லாம் கூப்பிட்டுக் கூறிக் கொண்டிருக்கிறார் ராதா.

இனிமேல் சிங்கிள் பாட்டுக்கு டான்ஸ் ஆடியே மார்க்கெட்டைப் பிடிப்பேன் என்று, மார்தட்டிக் கூறி வருகிறார் ராதா.

## மினி சினி

* விஜய் தயாரித்து இயக்கும் படத்துக்கு இசை அமைக்கப் போகிறவர் யார் தெரியுமா? ஏ.ஆர்.ரஹ்மான். தனது நண்பர் பிடி.செல்வகுமார் தயாரிக்கும் 'பந்தா பரமசிவம்' படத்தில் ஒரு முக்கிய கேரக்டரில் நடிக்கும் இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார் தனக்காகச் சம்பளம் எதுவும் வாங்கிக் கொள்ளவில்லையாம்!

* விஜயகாந்த் நடித்த 'ரமணா' தெலுங்கில் தயாராக இருக்கிறதாம். இதில் கதாநாயகனாக நடிப்பது சிரஞ்சீவி. அத்துடன் (தமிழில் யூகிசேது நடித்த) நகைச்சுவை வேடத்திலும் நடிக்கிறார். இந்தியிலும் இப் படம் தயாரிக்கப்பட இருக்கிறதாம்.

* சூர்யாவுடன் 'ஸ்ரீ', ஆர்யன் ராஜேஷுடன் 'ஆல்பம்' ஆகிய படங்களில் நடித்த ஸ்ருதிகா, தற்போது சூப்பர் குட் பிலிம்ஸ் தயாரிப்பில் ஆர்.பி. சவுத்ரி மகன் 'ஆசை ஆசையாய்' ஜீவா நடிக்கும் 'தித்திக்குதே' படத்தில் இரண்டாவது நாயகியாக நடிக்கிறார்.

* '1997' என்ற பெயரில் ஒரு படம் எடுக்கப்பட்ட இருக்கிறதாம். இதில் நடிப்பது சரத்குமார். இதுவும் கிரணுக்கு ஜோடியாக இவர் நடித்த திவான் படமும் 2002ல் வெளிவர இருக்கின்றனவாம்.

* 'சீதா கல்யாணம்' என்ற மலையாளப் படத்தில் ஜெயராமுக்கு ஜோடியாக நடிக்கிறாராம் ஜோதிகா.

* சிம்ரனின் கைவசம் பத்துக்கும் மேற்பட்ட படங்கள் உள்ளன.

* 'அல்பு' படத்தில் நாயகி தீபு வடபழனியிலுள்ள ஜே.ஆர். மட்ரிகுலேஷன் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வருகிறார்.

* விரைவில் சென்னையிலேயே குடியேறவிருக்கிறார் ஷெரீன். பெங்களூரை விட சென்னை மிகவும் பிடித்திருப்பதாக வார இதழ் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார் ஷெரீன்.

* நடிகை த்ரிஷா ஏழு படங்களில் நடித்து வருகிறார். இனி முதல் படம் வெளிவந்த பிறகே அடுத்த படங்களை ஒப்புக் கொள்வது என்ற முடிவுக்கு வந்துள்ளார்.

* விரைவில் டாக்டர் ஒருவரை மணம் முடிக்க இருக்கிறாராம் நடிகை சௌந்தர்யா. நிச்சயதார்த்தம் முடிந்து இப்போது திருமண ஏற்பாடுகள் நடக்கின்றனவாம்.



சூர்யா-விக்ரம்
படம்: பிதாமகன்



பிரசாந்த்-சினேகா
படம்: விரும்புகிறேன்

## வாழ்த்துச் சொன்னதால் வம்பு

வசீகரச் சிரிப்பழகி ஸ்நேகாவுக்கும் கவர்ச்சிப் புயல் மும்தாஜிற்கும் சமீபத்தில் நடந்த திரை நிகழ்ச்சி ஒன்றில் வெளிப்படையாகவே லடாய் நடந்தது.

'பானயன்' தொண்டு நிறுவனத்திற்காக நிதி திரட்டும் கலை நிகழ்ச்சி கடந்த சனிக்கிழமையன்று சென்னையில் கிண்டி ஐஐடி அரங்கத்தில் நடந்தது. இதில், பங்குகொள்ள வந்தபோது மும்தாஜ் சும்மா இருக்காமல் ஸ்நேகாவை வாழ்த்துச் சொன்னார். அதுதான் பிரச்சினைக்கே காரணமாகும்.

அது சரி வாழ்த்து எதற்கு என்கிறீர்களா...?

## மீனாவின் பிரார்த்தனை!

'மிஸ்டர் பிரம்மச்சாரி' என்ற மலையாளப் படத்தில் மோகன்லால் மனைவியாக நடிக்கும் மீனா, கடந்த அமாவாசையன்று யாருக்கும் தகவல் தெரிவிக்காமல், திடீரென்று சென்னை சாலிகிராமத்தில் இருந்து சைதாப்பேட்டையில் அமைந்துள்ள புது பங்களாவுக்குக் குடிபெயர்ந்துவிட்டார்! இந்த வீட்டுக்குச் சென்ற ராசியாலாவது தனக்கு உடனடியாகத் திருமணம் நடக்க வேண்டும் என்பதுதான் தற்போது அவருடைய ஏக்கம்! மீனாவுக்கு நல்லதே நடக்கட்டும்.



# சினிவிசிட்

## எங்கிருந்து முதலில் டும்... டும்... வரும்

கோலிவுட்டில் பிரபலங்களுக்கு இடையில் ஏகப்பட்ட காதல் சமாச்சாரங்கள் நடந்து வருகின்றன. பெரும்பாலானவர்கள் தம் காதலை மறுத்து வரும் நிலையிலும் கூட எந்த ஜோடி முதலில் திருமண பந்தத்தில் இணையும் என்ற கேள்வி பல தரப்பிலிருந்தும் எழுப்பப்படுகின்றது.

ஏகப்பட்ட காதல் ஜோடிகள். இதில்

சூர்யா-ஜோதிகா, ஸ்ரீகாந்த்-ஸ்னேகா, பாலா-லைலா, கமல்-சிம்ரன், சிலம்பரசன்-ஐஸ்வர்யா குறித்துத் தீவிரமாக கிசுகிசு இருந்து வருகிறது. இதில் சிலம்பரசன் கதை குறித்து அதிக பேச்சு இல்லை. மற்ற நான்கு ஜோடிகள்தான் கோடம்பாக்கத்து வாய்களில் அடிக்கடி அடிபடுகிறார்கள்.

இவற்றில் சூர்யா-ஜோதிகா ஜோடிதான் முந்திக் கொள்ளும் என்பது பெரும்பான்மையானவர்களின் கணிப்பு. இருவரும் அடிக்கடி திநகரில் உள்ள ஒரு நட்சத்திர ஹோட்டலில் சந்தித்துக்கொள்கின்றனராம். மணிக் கணக்கில் பேசிக்கொண்டிருந்துவிட்டுத் தனிக் கார்களில் ஏறி வீடுகளுக்குப் பறந்துவிடுகிறார்களாம். இவர்கள் இங்கு சந்திப்பது இரு வீட்டார்களுக்கும் தெரியுமாம்.

கல்யாணத் தேதி கூட முடிவாகிவிட்டதாம். விரைவில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும். அதற்கு முன் சூர்யா ஒரு ஹிட் கொடுக்கட்டுமே என்று காத்திருக்கிறார்களாம். ஹிட் வந்தவுடன் டும் டும்தானாம்.

பாலா-லைலா காதல் கொஞ்சக் காலம் அமுங்கியிருந்தது. இப்போது மீண்டும் தலைதூக்கியுள்ளது. காரணம், பிதாமகனில் லைலாவும் ஒரு நாயகியாக நடிப்பது. தனது மனேஜரை நீக்கிவிட்டுத் தானே கால்ஷீட்களைப் பார்ப்பது (பாலாவின் உத்தரவுப்படியே மனேஜருக்குக் கல்தா கொடுத்தாராம் லைலா என்று பேச்சு உள்ளது). மும்பை வீட்டைக் காலி செய்துவிட்டுச் சென்னைக்கே வந்துவிட்டது.

இரண்டு பேருமே காதலாவது, கத்தரிக்காயாவது என்று மறைத்தாலும் கூட சிக்கிரமே ஏதாவது ஒரு செய்தி வரலாம் என்று எதிர்பார்க்கிறார்கள் கோலிவுட் பிரகஸ்பதிகள்.

அடுத்து ஸ்ரீகாந்த்-சிநேகா ஜோடி. இது லேட்டஸ்ட் காதல் ஜோடி. சிநேகாவுடனும், ஸ்ரீகாந்த்துடனும் பலரும் கிசுகிசுக்கப்பட்டுள்ளனர். இப்போது இரண்டு பேரையும் வைத்துச் செய்திகள் வருகின்றன. ஆனால் தாங்கள் நண்பர்கள்தான் என்று ஸ்ரீகாந்த் கூறி வருகிறார். இல்லை என்கிறது கோலிவுட். காயம் குறித்து பரஸ்பரம் நலம் விசாரித்த போது, அது அப்படியே காதலாகிக் கசிந்துருகிவிட்டார்களாம் இருவரும்.

கமல்-சிம்ரன் ஜோடி? சொல்வதற்கு இதில் புதிதாக ஒன்றும் இல்லை!

சிலம்பு-ரஜினி மகள் ஐஸ்வர்யா குறித்துப் பேச்சு அதிகம் காணோம்.

## பொங்கலன்று திரைக்கு வரும் 'லேசா லேசா'

பொங்கலன்று திரைக்கு வருகிறது 'லேசா லேசா' இதில் ஷாம், த்ரிஷா இணைந்து நடிக்கின்றனர். ஆனால், இறுதியில் த்ரிஷாவைத் திருமணம் செய்துகொள்வது மாதவன்தான். பட வெளியீட்டுக்கு முன்பே லட்சக் கணக்கான ஆடியோ கேசட்டுகள் விற்றுச் சாதனை படைத்து இருப்பதால், தயாரிப்பாளர் விக்ரம் சிங் உற்சாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளார்! ஹாரிஸ் ஜெயராஜ் இசை அமைப்பில் வாலி எழுதியுள்ள இளமை துள்ளும் பாடல் வரிகளுக்குப் பல தரப்பிலிருந்தும் பாராட்டுகள் குவிந்து கொண்டிருப்பதாகச் சொன்னார், 'லேசா லேசா' படத்தின் கிளைமாக்ஸ் காட்சி இடம்பெறும் அந்த இருபது நிமிடங்கள் பரபரப்பாகவும், விறுவிறுப்பாகவும் இருக்கும் என்கிறார் ப்ரியதர்ஷன்.

### முகப்பில்

சல்மான் கான்

யுக்தா முகி



## பொலிஸ் கண்காணிப்பில் பலான நடிகைகள்

மாஜி நடிகை மாதுரி போட்டுக் கொடுத்ததால் விபச்சார வழக்கில் உள்ளே தள்ளப்பட்ட நடிகை புவனேஸ்வரி தன் பங்குக்கும் சில நடிகைகள் குறித்து முக்கிய தகவல்களைப் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

இதையடுத்து, புவா கூறிய தகவல்களின் அடிப்படையில் சில நடிகைகளைப் பொலிஸார் கண்காணிக்க ஆரம்பித்துள்ளனர்.

அப்படிக் கண்காணிக்கப்படும் நடிகைகளில் முக்கியமானவர் நான்கு எழுத்து 'லவ்' நடிகையாம். பிரபுவின் படத்தில் அறிமுகமாகி ரஜினியின் படத்தில் நடித்துப் பிரபலமானவர் இந்த நடிகை. மைக் மோகனுடன் சேர்ந்து குறுகிய காலத்தில் நிறையப் படங்களில் நடித்த அவர் பின்னர் பட வாய்ப்புகள் இல்லாமல் டிவி பக்கம் ஒதுங்கினார்.

டிவி நடிகையானவுடன் புவனேஸ்வரியுடன் கூட்டணி வைத்துத் தொழிலை ஆரம்பித்தாராம். இடையில் புவனேஸ்வரியுடன் தகராறு ஏற்படவே தனியாகத் தொழிலை நடத்தத் தொடங்கினார்.

இவரைத்தான் இப்போது புவனேஸ்வரி போட்டுக் கொடுத்துள்ளாராம்.

புவனேஸ்வரி காட்டிக் கொடுப்பதற்கு முன்பே இந்த நடிகை குறித்துப் பொலிஸாருக்கு நன்றாகவே தெரியும் என்றும் அந்த நடிகை எப்போது வேண்டுமானாலும் பிடிபடலாம் என்றும் கூறப்படுகிறது.

இந்த நடிகை தவிர பாலுமகேந்திராவின் படத்தில் அறிமுகமான 'ராவ்' நடிகையும் விநோதமான நடிகையும் பொலிஸ் கண்காணிப்பில் இருக்கிறார்களாம்.

அதேபோல குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகிப் பின்னர் மகா குண்டான நடிகையும் இந்தக் கண்காணிப்புப் பட்டியலில் சமீப காலம் வரை இருந்தார். கேரளாவைச் சேர்ந்த இவர் ஒரு கன்னட நடிகருடன் வாழ்ந்து வந்தார். சமீபத்தில் திடீரென்று தமிழகத்தின் மிகப் பிரபலமான மறைந்த முன்னாள் படத் தயாரிப்பாளர் ஒருவரின் மகனை மறுமணம் செய்து கொண்டு செட்டிலாகிவிட்டார். இதனால் அவரைக் கண்காணிப்புப் பட்டியலில் இருந்து நீக்கியுள்ளது பொலிஸ்.

வரும் வாரங்களில் பிடிபடப்போகும் முதல் நடிகை யாரோ தெரியவில்லை.

## நாயகியாகும் தீபு

'ஐ லவ் யூடா' படத்தில் ஒரே ஒரு பாடல் காட்சியில், கொஞ்சம்கூட முக்கியத்துவமே இல்லாத ஒரு குரூப் டான்ஸராக ஆடியிருந்த தீபு, 'அன்பு' படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமாகிறார். 'ஐ லவ் யூடா' படத்தில் ஆடியதை மட்டும் பத்திரிகையில் எழுத வேண்டாம் என்று பத்திரிகையாளர்களிடம் கேட்டுக் கொள்கிறாராம்.



## வாய்ப்பு வேட்டையில் மும்தாஜ்

பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார் மும்தாஜ்... ஊஹூம். தொடர்ந்து பட வாய்ப்புகள் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருப்பதை அறிந்து நொந்துபோய்விட்டார். இப்போது சில இயக்குநர்களுக்கும், தயாரிப்பாளர்களுக்கும் டெலிபோன் செய்து, ஜூனியர் சில்க், லேகாஸ்ரீ, ஷகீலா, பாபிலோனா, ராணி இவங்களைவிட சம்பளம் குறைச்சலாக் கொடுங்க. வாங்கிட்டு நடிக்கிறேன். ஸாரி... ஆடிட்டுப் போறேன்! என்று வெளிப்படையாகவே வாய்ப்பு வேட்டை நடத்தி வருகிறார்! இதையறிந்த மும்தாஜ், இந்தப் பொண்ணு நல்லா வேதனைப்படட்டும். எனக்குப் போட்டியா சினிமாவுல குதிச்சவளாச்சே என்று கிண்டலடிக்கிறாராம்! பாவம் மும்தாஜ், குமுறிக் குமுறி அழுகிறார்.

## கவர்ச்சி நாயகியாகும் ஷிவானி

'இளசு, புதுசு, ரவுசு' படத்துக்காக கிளுகிளுப்பாக போஸ் கொடுத்துக் குளித்துக் கொண்டிருக்கும் ஷிவானி, இன்னும் கொஞ்சம் வேண்டுமா? இவ்வளவு போதுமா? என்று கேட்கும் ரகமாம். கவர்ச்சி காட்டுவதில் ஷகீலா, மும்தாஜ், பாபிலோனா போன்றவர்களை மிஞ்சிவிட வேண்டும் என்பதே இவருடைய திட்டம். இதில் கவர்ச்சிக் கதாநாயகியாக நடிக்கும் சுஜா, ஏற்கனவே 'பிளஸ் டூ' படத்தில் கதாநாயகியாக அறிமுகமான பள்ளி மாணவி!

## அருள்!

இறைமகன் இயேசு பெருமானே
தரையிறங்கி வந்து நடந்தருளும்
குறைகள் நிறைந்த பூமியிலே
நிறைவு பெறவே வாழ்த்தியருளும்

மலர் மணம் வீசிடும் மார்கழியில்
ஆயர் வாழ்த்திட வந்தருளும்
புலரும் பொழுதெல்லாம் இப்புவியில்
புதுமைகள் தோன்றிடச் செய்தருளும்.

அகதிகள் வாடிடும் முகாம்களிலே
வசதிகள் பெருகிட வைத்தருளும்-போர்
சகதியில் அமிழ்ந்திட்ட முகங்களிலே
நியதிகள் தோன்றிடச் செய்தருளும்.

பாழ்பட்ட பாதைத் தடைகளை
வாழ்த்தி வழியும் நடத்தியருளும்
தாழ்த்தப்பட்ட மனித குலங்களை
சூழ்ச்சியில் விழாது காத்தருளும்

வீடிழந்து வாழும் ஏழைகளை
தேடியழைத்து சேர்த்தருளும்
காடிக்கேனும் வழியற்ற மக்களை
கூட்டிச் சேர்த்து போஷித்தருளும்.

கறுபிலையை இழந்த அபலைகளின்
கண்ணீர் வாழ்வை அடைத்தருளும்
திக்கற்றே திரியும் சிறுவர்களை
திக்கெங்கிலும் போற்றிடச் செய்தருளும்

சுதந்திரம் சுதந்திரம் என்பவர்களும்
தந்திரம் செய்யாது தடுத்தருளும்
நிரந்தர சமாதானம் தோன்றிடவே
மந்திரவார்த்தை பொழிந்தருளும்.

டி. ஜோர்ஜ்-நுவரஎலியா.

## காதலின் செயல்

காற்று உக்கிரமாக
சுற்றிச் சுழன்றடித்தது;
கோபம் வந்ததாய்
காட்டிக் கொள்ள முனையும்
மனிதரைப் போல்

பெண் பறவை ஒன்று;
திடீர் அச்சத்தில்
இறகுகளைச் சிலிர்த்து
அபய ஒலியெழுப்பி-வேகமாய்
பறந்து மறைந்தது

கிளையொன்றில் இருந்த
ஆண்பறவை;
கோபமுறைப்புடன்
விழி சுழற்றியது;
அலைகாற்றை-தன்
அலகால்
கொத்தியடக்கும் துணிவுடன்;
தன்மேல், பெண் பறவை மேல்
பெருந்தவறு இழைக்கப்பட்டுவிட்ட
பாவத்துடன்

பின்னாது மென்மையாகி
சட்டெனக் கிளையைவிட்டுப்
பறந்தது;
எல்லாவற்றையும் மறந்த நிலையில்;

காற்றில் ஆடி அசைந்து
வீழ்ந்து கொண்டிருந்த
பெண்பறவையின்
உதிர்ந்த இறகை நோக்கி.

கெ. சன்யா-கொழும்பு-13.

## அவளுக்கோர் அழைப்பிதழ்

சில்லறையாய்
சிரித்த-என்
சிவப்பணுக்களை
சிலிர்க்க வைத்தவள் நீயடி!

சத்தமில்லாமல்
விழிகளில்
யுத்தம் செய்ய
கற்றுக் கொடுத்தவள் நீயடி!

நெற்றி வருடும்
கூந்தல் கோதி-என்
வெற்றிப் பாதைக்கு
வாசல் திறந்தவள் நீயடி!

கள்ளச் சிரிப்பில்
கண்ணி வைத்து-உன்
கன்னக் குழியில்
கால் இடற வைத்தவள் நீயடி!

சுற்றுலா
அழைத்துச் சென்று
உன்னை மட்டும்
சுற்றி உலாவர
வைத்தவள் நீயடி!

நட்போடு வந்து
காதலோடு பிரிந்து
சொல்லாமல்
சொல்லி-இன்று எனக்கு
சொல்லி வைப்பவள் நீயடி!

உதடுகள் குவிந்து
'உம்' என்றால்
உயிர் தரிப்பேன்
உனக்காக!!...
இதழ் பிரிந்து
"இல்லை" என்றால்
இமைக்கும் நொடியில்
உயிர் பிரிவேன்!!....

என்னவளே...
என் தோட்டத்து ரோஜாக்கள்
உனக்காக காத்திருக்கின்றன.
என்னைப் பிடித்தால்
கூந்தலில் சூடி
மணவறை வா...
மறுத்தால்
கைகளில் ஏந்தி
என்
கல்லறை வா...

திவ்யப்ரியன்-மஸ்கெலியா.

## வசந்தங்களாய் விடிய

காலங்கள் எப்போதும் எதனையும்
தன்காதில்
போட்டுக் கொள்வதில்லை!

பிறப்பதும்
நகர்வதுமே
அதன் வேதம்!

நாம்தான்
அதன் காலடியையும்
கைகளையும் தழுவி
நிற்கிறோம்!

அப்போதும்-அது
நிற்பதில்லை.
தன் வேலையைத்தான்
பார்க்கிறது!

நமக்குள்ளே நாம்
கேட்டுப் பார்ப்போம்.

வறுமைக் கோட்டில்
கால் கடுக்க
வயிறு தேய,
கண் கலங்க
உயிர் நோக-உன்னை
உறிஞ்சிய காலங்கள் எத்தனை?

உன் கனவுக்காய்
நீ
உறங்கிய இரவுகள் எத்தனை...?

உன் நிம்மதியைக்
களவாடி
உன்னை உலையிலிட்டு வாட்டிய
காலங்கள் எவ்வளவு....?

உன் முயற்சிக்காய்
கடந்து வந்த காலங்கள்தான்
எவ்வளவு...?

இத்தனைக்கும்
இந்த காலங்களிடம்
பதில் கேட்டதுண்டா...?
நாம் யார்
கேட்டாலும்-அதுகூறும்
ஒரே பதில்.

உன் கடமையைச் செய்-அதை
அன்றே செய்-அதையும்
திருத்தமாய் செய்
என்பதுதான்!

வரும் காலமெல்லாம்
வசந்தங்களாய் விடிய...!

இது பதிலல்ல
இதுதான் வேதம்!

இப்போது நாம்
நமது பாதையில்...
காலம்
அது பாதையில்...!

வே. கர்ணாநிதி-டயகம கிழக்கு.

## கவலைகள்

பள்ளிக்கூட
நோட்டுப் புத்தகத்தில்
ஆசிரியர்
போட்டுக் கொடுக்கும்
முட்டையைப்போல்
கணக்கில் அவன்
பூச்சியம் தான்

முக்காலிக்கும்
நாற்காலிக்கும்
எட்டுக் கால்
பூச்சிக்கும்
எத்தனை கால்
என்னும் போதெல்லாம்
பேந்தப் பேந்த
விழிக்கும் அவனை
நினைக்கும் போது
கவலையாகத்தான்
இருக்கின்றது

இப்போது எப்படி
எண்ணிக் கொண்டிருக்கிறான்
சிறைக்கம்பிகளை என்று!

மெய்யன் நடராஜ-டோகா. கட்டார்.

# தேன் கிண்ணம்

## அந்த ஒரு நாள்

விரக்தியின் அறைக்குள்
கைதியாகிக் கிடந்த
என் இதயம்
விடுதலை பெற்றது

விதைத்துக் கொண்டிருந்த
என் விழிகள் நிறுத்திக்
கொண்டன கண்ணீரை

உன் நினைவாலே உலர்ந்து
கிடந்த என் உடல்
ஊறிக் கொண்டது இப்போது

நிம்மதியைத் தொலைத்துவிட்டு
தேடிய என் மனம்
வாங்கிக் கொண்டது
அதனை உன்னிடம்

காற்றை மட்டும் உள்வாங்கி
கொண்டிருந்த என்னுடம்பு
அன்றுதான் ஏற்றுக்கொண்டது
உள் அனுப்பிய உணவையும்.

மொத்தத்தில் ஒரு கோடி
நாட்களை ஒரே நாளில்
வாழ்ந்திட்டேன்-எல்லாம்
அந்த ஒரு நாள் அன்போடு
என்னிடம் பேசிக்கொண்டதால்!

இராமச்சந்திரன் தவேந்திரன்-ஹாலி-எல.

## பேனா நண்பர்கள்



பெயர்: வ.வித்தியாதரன்
வயது: 18
முகவரி:
138, 4ம் ஒழுங்கை,
உக்குளான் குளம்,
வவுனியா.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்: வி. சுதன்
வயது: 25
முகவரி:
Mr.Sukumar Ragaratnam
84 Rue Moliere
94200 Ivry sur seine, France.
பொழுது போக்கு:
இன்டர் நெட், ஈ-மெயில்



பெயர்:
எஸ். வாசுதன்
முகவரி:
P.O.Box-83
Al-Bahar
Yanbu. K.S.A.
பொழுது போக்கு:
வழமையானவை.

## நினைத்து, நினைத்து சிரிக்க

இரண்டு குடிமகன்கள் நல்ல கிக்கோடு மதுபானக் கடையை விட்டுக் கிளம்பினார்கள். ஐந்து நிமிடம்கூட ஆகியிருக்காது... அவர்களில் ஒருவன் மட்டும் கடையை நோக்கி ஓட்டமும் நடையுமாக வந்தான். "சீக்கிரம் வாங்க... என் நண்பன் ஒரு கிணத்தில விழுந்திட்டான்" என்றான் நா தழுதழுக்க...

"ஐயையோ...!" என்று பதறிய கடைக்காரன், "சரி... அந்த கிணத்தில எவ்வளவு தண்ணி இருக்கும் தெரியுமா?" என்று கேட்டான்.

"அவனோட முழங்கால் அளவுக்குத் தண்ணி இருக்கு!" என்றான் வந்தவன்.

"அட.. இவ்வளவுதானே... இதுக்கு ஏன் இவ்வளவு பயப்படறே?" என்று கடைக்காரன் கேட்கவும் அவன் சொன்னான் "புரியாம பேசாதீங்க... அவன் தலைகீழா நின்றுகொண்டிருக்கிறான்..."

**நக்கலுக்குச் சரியான விளக்கம் என்ன?**

"நான் என்னுடைய நாயுடன் உங்கள் ஹோட்டலில் வந்து தங்கப் போகிறேன். உங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை இருந்தால் தெரிவிக்கவும்" என்று ஒருத்தர் ஒரு ஹோட்டலுக்குக் கடிதம் எழுதினார்.

இரண்டு நாள் கழித்து ஹோட்டலிலிருந்து அவருக்குப் பதில் வந்தது.

'எந்த நாயும் சிகரெட்டை அணைக்காமல் கட்டில் மேல் போடுவதில்லை. எந்த நாயும் ஹோட்டல் டவல்களை சூட்கேஸிற்குள் வைத்துக் கொண்டு போவதில்லை. எந்த நாயும் வங்கியில் பணமில்லாமல் செக் தருவதில்லை. அதனால் உங்கள் நாய் தாராளமாக வந்து எங்கள் ஹோட்டலில் தங்கலாம்.'

ஒரு பக்தனின் தொல்லை தாங்க முடியாமல் கடவுள் நேரடியாக அவன் முன் தோன்றினார். கையேந்தி நின்றவனை மனம் குளிர வைக்க நினைத்தார். "என்ன வரம் வேண்டும். கேள்!" என்று அவன் கேட்டதையெல்லாம் கொடுத்தார் கடவுள். அவன் வீட்டு மண்பானையைத் தன் ஆட்காட்டி விரலால் தொட்டார் கடவுள்; அது தங்கமானது, மரக் கதிரையை ஆட்காட்டி விரலால் தொட்டார். அது தங்கமானது. ஆட்காட்டி விரலால் வீட்டைத் தொட்டார், வீடு முழுதும் தங்கமானது "பக்தா இங்கே வா! இப்போது உனக்குச சந்தோசம்தானே. வேறு என்ன வேண்டும் கேள்!" என்றார் கடவுள். "இன்னும் ஒன்றே ஒன்றுதான் வேண்டும்!" என்றான் பக்தன். "எது?" என்று கேட்டார் கடவுள். "உங்கள் ஆட்காட்டி விரல்" என்றான் பக்தன்.

எழுதியனுப்பியவர்- தி. குணவர்த்தன, களுவாஞ்சிகுடி.

**கவிதை நெஞ்சங்களுக்கு!**
இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக-கவிதை எழுதுவது பற்றிய இரு கவிதைகள்.

## சிறப்புக் கவிதை

## மனசிலிருந்து எல்லாமே

வெளியேறிய
ஒரு அமானுஷ்ய நேரத்தில்
அது இடம் பிடிக்கும்.

பார்த்தவை கேட்டவை மற்றவை
எல்லாம் செக்குமாடு போல்
மறுபடியும்
கதவடைத்து உள்ளே நுழையும்.
அது மூச்சுத் திணறும்!
களைகளுக்குள் சிக்கிய பயிர்போல்.

பேருந்தின் இரைச்சல்
ஒலிபெருக்கியின் கூக்குரல்
ஹோட்டல்காரன் கரண்டி
இவையும் கூட
அதைத் தின்னத் துரத்தும்
பல நேரங்களில்.

அது பிடிபடாமலே
மாரீச மான்போல் ஓடி ஆடி
அலைய வைத்து பின் மறைந்துவிடும்.

அம்பும் அம்பறாத்தூணியும்
பேனாவும் பேப்பரும் இருந்தென்ன?
பறவைகளைப் போல் அதை
வலை போட்டுத்தான்
பிடிக்க வேண்டும்.

செருமல் சப்தம் கூட
கொக்குக் கூட்டத்தைப் பறக்க வைத்து
விடும்.

ஆனாலும் தத்தித் தத்தி
அதன் போக்கிலே அலைந்து
மனமெல்லாம் அதிலே லயிக்க
இறுதியில்
தும்பியைப் பிடித்துவிடும்
குழந்தையைப் போல்
பிடிபடும் கவிதையில்
ஒரு சுகமுண்டு.

இரா. பொன்னாண்டான்.

## கோழிகளுக்கு உரல்கள் வசதியாக இருக்கும்

கோழிகளுக்கு உரல்கள் வசதியாக இருக்கும்
வேறிடம் ஓடுவது, உலக்கைகளுக்குப் பயந்துதான்.
வைக்கோல் போர்களில் நன்றாக இடலாம்.
எனக்கு உரலடிதான் வைக்கோல் போரும்!

நின்று தின்னும் எருதுகளுக்கு
முட்டை அருமை தெரியாது.
மிதித்துக் குழப்பும் குளம்புகளுக்குத் தப்ப
இரும்பால் ஆனவை அல்ல, முட்டைகள்.
கலந்து உறையும் கவலை நாகங்களுக்கும்
எத்தனை முட்டைகள் திருட்டுக் கொடுப்பேன்!

கூடை உமியில் அடைகாக்கலாம்
திறந்து பார்த்தும் கவனிப்பார்கள்
என் முட்டைகள்தாம் விற்பனைக்கு இல்லையே!

முட்டையிடுவது ஒரு பிரசவம்
குஞ்சு பொரிப்பதோ மறு பிரசவம்.
இந்தக் குழப்பத்தில்தான்
கூழாங்கற்களை அடைகாத்து விடுவது
சில கூழ்முட்டையாகி நாறுவது.

இத்தனைக்கும் பிறகுதான்
குஞ்சுகளோடு தாய்க்கோழி திரிவது.
கொக்கரக்கோ பாட ஒரு சேவல் வருவது.

வயிற்றுப் பாட்டுக்கு அலையும் கோழிக்குக்
குஞ்சு பொரிப்பது ஆடம்பரந்தான்-
ஆனால் வீண் அல்ல!

த. பழமலை.

## மருத்துவரின் பாலியல் சில்மிஷம்



ஆண்டவனுக்கு அடுத்தபடியாக, ஏன் சிலவேளைகளில் ஆண்டவனாகவே எண்ணிப் போற்றப்படுகின்றவர்கள் மருத்துவர்கள். ஆனாலும் அவர்களின் கீர்த்திக்குத் திருஷ்டிப் பொட்டு வைப்பது போல அவ்வப்போது சில கறுப்பாடுகள், மருத்துவர் என்ற பெயரினையே இழிவுபடுத்தும் வகையில் காமக் களியாட்டம் நடத்தும் சம்பவங்களும் இடம்பெறாமல் இல்லை. சில மாதங்களுக்கு முன் டாக்டர் பிரகாஷின் லீலைகள் அம்பலமாகிப் பெரும் அதிர்வையே கொடுத்திருந்தது. இந்தச் சின்னத்தனங்கள் தமிழ்நாட்டில் மட்டு மல்லை, கலாசாரப் புரட்சியடைந்ததாகக் கூறிக் கொள்ளப்படும் மேல்நாடுகளில் கூட இடம்பெறுகின்றன என்பதற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார் இங்கிலாந்தைச் சேர்ந்த மகப்பேற்று மருத்துவர் ஒருவர்.

55 வயதான "பால்வினால்" என்ற பெயரினையுடைய இவர் 22 பெண் நோயாளிகளை நிர்வாணமாக்கிப் பாலியல் சேட்டைகளில் ஈடுபட்டிருக்கின்றார். அவர் மீது 31 வழக்குகள் பதியப்பட்டுள்ள நிலையில், அவை அனைத்தையும் மறுக்கும் "பால்" அப்படிப் பெண்களை நிர்வாணமாக்குவது தனது பரிசோதனைக்கு அவசியமானது என அடித்துக் கூறுகின்றார்.

ஆனால் அவரது சேட்டைகள் பற்றிப் பாதிக்கப்பட்ட பெண்கள் கூறும் தகவல்கள் அருவருப்பாக உள்ளன. வெளிப்படையாக எழுத முடியாத செய்கைகளை அவர் புரிந்ததாகப் பெண்கள் நீதிமன்றில் விலாவாரியாக எடுத்துச் சொல்லியிருக்கின்றனர்.

பல அரசு மருத்துவ மனைகளிலும், தனியார் மருத்துவ மனைகளிலும் மகப்பேற்று மருத்துவராகப் பணியாற்றிவரும் "பால்" தற்போது கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டுள்ளார். இந்தக் காமவெறிபிடித்த மருத்துவருக்கு என்ன தண்டனை என்பது வழக்கு விசாரணை முலம்தான் தெரிய வரும். தண்டனை என்னவாக இருந்தாலும் தரங்கெட்டுப் போனது மருத்துவத்துறை என்பது மட்டும் ஜீரணிக்க முடியாத உண்மை.

## நீரிழிவு சில தகவல்கள்

நாற்பது வயதைக் கடந்த பின் பெரும்பாலானோர் தமக்கு 'நீரிழிவு' நோய் இகிருக்கின்றதா எனச் சிந்திக்க வைக்கும் அளவிற்கு நீரிழிவு நோய் நம்மிடையே பரவலாகக் காணப்படுகின்ற ஒரு நோயாகும். இந் நோயின், காரணி, அறி குறி, வகைகள் போன்றவற்றைச் சற்று ஆராய்வோம்.

இரைப்பைக்குப் பின்புறம் அமைந்துள்ள கணையம் என்ற சுரப்பியிலிருந்து இன்சுலின் சுரக்கிறது. நாம் உட்கொள்ளும் உணவின் வகையையும், அதன் அளவையும் பொறுத்து கணையம் இன்சுலினை அதிகமாகவோ, குறைவாகவோ சுரக்கும். பொதுவாக உணவு அதிகம் உட்கொண்டால் இன்சுலின் சுரப்பதும் அதிகமாகும்.

ஆனால் சர்க்கரை நோயின் போது, உடலுக்குத் தேவையான அளவு அல்லது சிறிதளவுகூட இன்சுலின் சுரப்பதில்லை.

அப்படியே இன்சுலின் சுரந்தாலும் அதனை உடலால் பயன்படுத்த இயலுவதில்லை.


இந்த இன்சுலின்தான் உடலுக்குத் தேவையான குளுக்கோஸைத் தேவையான அளவு சேமித்துப் பயன்படுத்துகிறது. இரத்தத்தில் குளுக்கோஸை சீராக வைத்துக் கொள்ளவும், குறிப்பிட்ட அளவுக்கு மேல் அதிகமாகாமலும் பார்த்துக்கொள்கிறது.

இன்சுலின் பற்றாக்குறை ஏற்பட்டால் குளுக்கோஸ் பயன்படுத்தப் படாத நிலையில் இருக்கும். இதனால் உடலுக்கு வேண்டிய சக்தி கிடைக்காது. இரத்ததில் சீனி அதிகமாகும்.

இரத்தத்தைச் சுத்திகரிக்கும் சிறுநீரகங்கள் அதிகமாகத் தேங்கும் குளுக்கோஸ் அனைத்தையும் இரத்தத்திற்கு அனுப்பாமல் சிறுநீரில் கொஞ்சம் வெளியேற்றிவிடுகிறது. இதனால் உடம்புக்குக் கிடைக்க வேண்டிய குளுக்கோஸ் கிடைக்காமல் வீணாகிறது. இதனால் வரும் தொல்லைதான் நீரிழிவு நோய்.

பெரும்பாலும் இது பரம்பரையின் காரணமாக வருகிறது. தவிர, அதிக உடல் எடை உள்ளவர்களுக்கு, முப்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டிருந்தல், உழைப்பில்லாத நிலை, மன உளைச்சல் ஆகியவை முக்கிய காரணங்கள்.

### அறிகுறிகள்



நோய் இருந்தால் அடிக்கடி தாகம், அதிகமான பசி, நிறுத்த முடியாமல் அடிக்கடி சிறுநீர் கழிதல், பலவீனம், களைப்பு, பிறப்புறுப்புகளில் நமைச்சல், மற்றும் தோல் தொற்றுகள், பார்வை மங்குதல், கண் பிரச்சினைகள், சில நேரங்களில் வயிற்றுவலி, கை கால் விரல்களில் வலி, மதமதப்பு, ஊசி குத்துவது போன்று இருத்தல் ஆகியவைதான் முக்கிய அறிகுறிகள்.

சிறுநீர் வழியாக உடலில் இருந்து திரவம் அளவுக்கு அதிகமாக வெளியேறுவதால் தாகமும், நிறைய தண்ணீர் அருந்துவதால் சிறுநீர் பிரிதலும் உண்டாகிறது.

இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் உடலுக்குச் சக்தியைத் தர இயலாமல் சிறுநீரில் சென்றுவிடுவதால், உடலுக்குச் சக்தியைக் கொழுப்பிலிருந்தும், புரதத்தில் இருந்தும் பெற வேண்டியிருக்கிறது. இதனால் அகோரப் பசியும், உடல் எடைக் குறைவும் உண்டாகின்றன.

நீரிழிவு நோயுள்ள மூன்றில் ஒருவருக்கு நீரிழிவு நோயின் அறிகுறிகள் தெரிவதில்லை. நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இதன் பாதிப்பு அதிகமிருக்கும்.

### நீரிழிவு நோயின் வகைகள்.

நீரிழிவு நோயில் இரண்டு முக்கிய வகைகள் உள்ளன. அவற்றை இன்சுலின் சார்ந்த சக்கரை நோய், இன்சுலின் சாராத சர்க்கரை நோய் எனப் பிரிக்கலாம்.

இன்சுலின் சார்ந்த வகை குழந்தைகள் மற்றும் இளைய வயதினரையும் பாதிக்கிறது. கணையத்தில் உள்ள பீட்டா செல்கள் அழிந்துபோவதால் இன்சுலின் சுரப்பு நின்று குழந்தைக்கு நீரிழிவு நோயை உண்டாக்கி விடுகிறது.

இன்சுலின் சாரா நீரிழிவு நோய் வயது வந்தவர்களைப் பாதிக்கிறது. இந்த நோயால் பாதிக்கப்பட்ட நபர் எளிதில் சோர்வடைந்துவிடுவர். அடிக்கடி தொற்றுக்களால் சிரமப்படுவார்.

பின்வரும் அறிகுறிகள் இவருக்கு இருக்கும்.

பட்டினி கிடப்பார்- ஆனால் உடல் குறையாது. உரிய காலத்திற்கு முன்பே நெஞ்சு வலி, மாரடைப்பு, அதிக இரத்த அழுத்தம், இரத்த நாள நோய்கள் ஆகியவை ஏற்படும்.




செல்வாஸின் 7

சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு ஒரு சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்

பெயர்:.....................
முகவரி:.....................
.....................
தொழில்:.....................

உண்மை-நேர்மை-வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 04-01-2003

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சல்வார்?
திருகோணமலை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

எம்.எஸ். பஸ்மினா
பலத்கொகுபிட்டிய வீதி, கேகாலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


## தலைமுடியைப் பராமரிக்க எளிய வழிகள்..

★ தலைமுடிப் பிரச்சினை இல்லாதவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம் ஆண், பெண் என்ற பேதமோ, வயது வித்தியாசமோ இதற்குக் கிடையாது. பெண்களுக்கு, குறிப்பாக இளம் பெண்களுக்குத் தலைப் பொடுகு, பேன், இளநரை இவை வைத்த பிரச்சினை. ஆண்களுக்கு இவைகளை விட முக்கிய பிரச்சினை வழுக்கை ஏற்படுதல், இளம் வயதிலேயே முடி உதிர்வினால் முதுமையான தோற்றத்திற்கு ஆளாகும் நிலை.

★ முடி சரு மத்தின் அடியில் வேர் விட்டு வளர்கிறது. வளர்ந்த வேரின் வளர்ந்த பகுதி சரு மத்தின் மேலே தள்ளப்படுகிறது. நாம் காணும் முடி தசை நார்களினால், ஆன தண்டுப் பகுதி. இது மென்மையான செல்களும், இடையிடையே காற்று இடைவெளியும் கொண்டு அமையப் பெற்றது. முடியின் நிறம் அமைய நிறமிகள்தான் காரணம். முடியின் நிறம் வெளுத்துப் போக செல்களின் இடையே உள்ள இடைவெளி அதிகமாவது தான் காரணம் . ஆண்டொன்றுக்கு முடியின் வளர்ச்சி 6 அங்குலம். சிலருக்கு முடியின் வளர்ச்சி ஓரளவுடன் நின்று உதிரத் துவங்கி விடும். பின்பு அங்கு புதிய முடி முளைக்க ஆரம்பிக்கும்.

★ முடி உதிர்வு என்பது நோயின் அளவு கோல். உடலில் ஏற்பட்டுள்ள பாதிப்புதான் முடி உதிர்வின் அடிப்படைக் காரணமாகும். தவிர அதிகமான எண்ணெய்ப் பசை, எண்ணெயே இல்லாமல் முடி வறண்டு போதல், அதிகமான பதற்றம் இப்படி சில காரணங்களும் கூட இருக்கக் கூடும். காரணம் அறிந்து பின்புதான் சிகிச்சைகள் தொடங்க வேண்டும். முடி உதிர்வைக் கட்டுப்படுத்த மிக எளிய வழி வெறும் கைகளினால் தலைப் பகுதியில் இதமாக மசாஜ் செய்து விடுவதுதான். தலையில் இறுக்கமான தொப்பி, ஹேர்-பேன்ட் போன்றவைகள் அணிவதனாலும் கூட இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு முடி உதிர்வு ஏற்படும்.

★ தலைப்பகுதியில் ஏற்படும் வறட்சியையும் அதனால் ஏற்படும் முடி உதிர்வையும் ஆரம்பத்திலேயே கவனிக்காமல் அலட்சியப்படுத்துதலும்தான் வழுக்கைக்கு முக்கிய காரணமாகிறது.

★ அதிகமாக எண்ணெய் தடவவும் கூடாது. அதேபோல எண்ணெய் தடவாமலும் இருக்கக் கூடாது. தலையை நேரம் கிடைக்கும் போது மென்மையாக மசாஜ் செய்து கொள்ளுதல் நலம். இதனால் இரத்த ஓட்டம் சீராகும்- முடி உதிர்வது நிற்கும்.

★ குளிர்ந்த நீரினால் தலையை அலசுவது நலம் தரும். ஈரத்தலையை சீப்பினால் வாரக் கூடாது. கூடுமானவரை உலர்த்தியைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல் நலம்.

★ எண்ணெய்ப் பண்டங்கள், இனிப்புப் பொருட்களை உண்ணாமல் தவிர்த்தல் நலம். பொடுகு, பேன் போன்ற பாதிப்புகளுக்கு உடனடியாக மருத்துவரை நாட வேண்டும். அதேபோல முடி உதிர்வை ஒருபோதும் அலட்சியப் படுத்தக் கூடாது.

## ஆரோக்கியக் குறிப்பு

மார்புச் சளி உள்ளவர்கள் தினமும் பாலைக் காய்ச்சி அதிலே சிறிது மிளகுத்தூள் போட்டுக் குடித்து வந்தால் மார்புச் சளி நீங்கிவிடும்.

தலைமுடி வளர வேண்டும் என விரும்புபவர்கள் நாம் சமையலிலே பயன்படுத்தும் கறிவேப்பிலையை (குழம்பில் உள்ள கறிவேப்பிலையை) தாளிக்காமல் சாப்பிடத் தலைமுடி நன்றாக வளரும்.

மெலிந்து தோன்றுகின்றோமே என்று எண்ணிக் கவலைப்படுபவர்கள் தினமும் தயிர் சாப்பிட்டு வந்தால் உடல் பருமனாகும்.



சோர மிழைத்திடையர் பெண்களுடனே
- அவன்
சூழ்ச்சித் திறமை பல காட்டுவ தெல்லாம்
வீர மறக்குலத்து மாதரிடத்தே
வேண்டிய தில்லையென்று சொல்லி
-விடடீ!

சுப்பிரமணிய பாரதியார்-



## பாப்பா முரசு சிறுகதை

# கடவுள் வந்திருக்கேன்!



நாணு என்றொரு நரி இருந்தது. அது ஒரு சிறிய காடு, அதுவும் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள கிராமத்துக்கு மிக அருகாமையில் இருந்தது அந்தக் குட்டிக் காடு.

அங்கு கொடிய மிருகங்கள் இல்லை. சிறிய சிறிய மிருகங்கள்தான் அதிகம். தந்திரம் மிகுந்த குள்ளநரி நாணு 'அன்று சாப்பிட என்ன வழி?' என்று தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தது.

அப்போது நரி முன் ஒரு எலி துள்ளிக் குதித்துச் சென்றது. பசி வயிற்றைக் கிள்ளியது. எலியைப் பிடிக்கலாமா என்று முதலில் யோசித்த நரி 'சே.. சே.. அவ்வளவு கீழ்த்தரமாகச் செயற்பட்டால் நம்ம கௌரவம் என்ன ஆகிறது?' என்று தனக்குத் தானே கேட்டது. மீண்டும் தரையில் கால்களை நீட்டியபடி படுத்து நான்கு திசைகளிலும் பார்வையைச் செலுத்தியது நரி நாணு.

பசி கண்களை மூடச் செய்தது. நாணு நரி இலேசாகத் தூங்கிவிட்டது. சிறிது நேரம் தூங்கிவிட்டுக் கண்களைத் திறந்த போது பெரிய எருமை ஒன்று புல் தின்று கொண்டிருந்தது. அதுபாடு பரவாயில்லை.

அதுக்குப் புல் கிடைத்தாலே போதும். எருமை புல் தின்னும் காட்சியைச் சோகமாகக் கவனித்தபடி மீண்டும் கண்களை மூடியது நாணு நரி. 'சாப்பிடுவதற்குச் சிறிய மிருகங்கள் எதுவும் அகப்படவில்லையே! இன்று யார் முகத்தில் விழித்தேன்' என்று யோசித்தபடி மீண்டும் தூங்கியது நாணு நரி.

நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த நாணு நரி எதையோ கேட்டுக் கண் விழித்த போது சற்றுத் தொலைவில் ஒரு முயல் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டது.

நரி அசையாமல் படுத்து இருந்தது. அந்த முயல் கிடைத்தால் இரண்டு நாளைக்குச் சாப்பாடே வேண்டாம்! நரி வாயில் எச்சில் ஊறியது. மீண்டும் தூங்குவது போல் படுத்து இருந்து முயலைக் கண்காணித்தது நாணு நரி.

எக் காரணத்தைக் கொண்டும் முயல் தப்பிவிடக் கூடாது என்பதில் படு கவனமாக இருந்தது.

முயல், செடி கொடிகளைத் தின்றபடி மெதுவாக நகர்ந்து நரி அருகே சென்றது. நரி ஓரக்கண்ணால் கவனித்துக் கொண்டே இருந்தது. மிக அருகாமையில் வந்த முயல் மீது பாய்ந்த நரி 'லபக்' என்று பிடித்தது. முயல் தப்பி ஓட முயன்றும் பயனில்லை.

"அண்ணே, நான் பாவம் அண்ணே, என்னை விட்டுடுங்க, அப்பா,அம்மா காத்திருப்பாங் கண்ணே... என்னை விட்டுடுங்க..." என்று கெஞ்சிய முயலை ஆசையுடன் பார்த்தது நரி.

"விடவா சொல்கிறாய்.. நான் சாப்பிட்டு ரெண்டு நாளாச்சு. உன்னை விட்டால் நான் பசியால் செத்து விடுவேன். அதனால் விடவே மாட்டேன்," என்று கூறிய போது நரியின் வாயிலிருந்து எச்சில் ஒழுகியது.

'நரியிடம் இருந்து தப்பிக்க வேண்டும் என்றால் தந்திரமாகச் செயற்பட வேண்டும். எப்படியாவது நரியை ஏமாற்றி விடவேண்டும்' என்று முடிவு செய்தது முயல்.

"அண்ணே, கிராமத்து மக்கள் நரிகளைக் கடவுளாக நினைத்து வணங்குகிறார்கள். நரிகளுக்குக் கோழிகளைப் பரிசளித்துச் சந்தோசப்படுகிறார்களாம்! நான் செத்துப் போனால் இந்தத் தகவல் எப்படி உங்கள் காதுக்கு வரும் என்றுதான் கவலைப்பட்டேன். இனி என் கவலை தீர்ந்தது." என்று முயல் சொன்ன போது நரி யோசித்தது.

முயல் கூறுவது உண்மை என்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்! "அது சரி அந்தக் கிராமம் எங்கிருக்கிறது? வா... என்னுடன் புறப்படு," என்று ஆவலுடன் கூறியது நாணு நரி. இருவரும் புறப்பட்டனர்.

"அண்ணே.. கிராமத்துக்குச் சென்றதும் ஒவ்வொரு வீடாகச் சென்று வீட்டு வாசலில் படுக்க வேண்டும். பிறகு 'கடவுள் வந்திருக்கேன்... காணிக்கை கொண்டு வா... கோழிகளைக் கொண்டு வா...' என்று கூறிவிட்டுக் கண்களை மூடிப் படுத்துக் கொள்ள வேண்டும்." என்றது முயல்.

கிராமத்துக்குள் நுழைந்து முதலில் கண்ட வீட்டுக்குச் சென்று வாசலில் படுத்து "கடவுள் வந்திருக்கேன்.. காணிக்கை கொண்டு வா... கோழிகளைக் கொண்டு வா..." என்று கூறியது நாணு நரி.

இதைக் கவனித்த வீட்டுக்காரன் மெதுவாக நடந்து பெரிய தடி ஒன்றை எடுத்து வந்து ஓசைப்படாமல் நகர்ந்து நரி அருகே வந்தான். பிறகு ஓங்கி அடித்தான். அடி பட்ட நரி அதிர்ச்சி அடைந்து தப்பி ஓட முயன்ற போது அடுத்த அடியும் தலையில் விழுந்தது. உடல் முழுவதும் அடி விழுந்தது. நரி உயிரிழந்து, செயலற்றுத் தரையில் விழுவதைக் கண்டு நிம்மதியாகக் காட்டுக்குத் திரும்பியது முயல்.

குழந்தைகள் நரிக்கதை நிறையக் கேட்டதுண்டு. இந்த நாணு நரியின் கதையைப் படித்ததில் என்ன புரிகிறது? எப்படிப்பட்ட ஆபத்து வந்தாலும் சற்றும் கலங்கக் கூடாது. தைரியத்துடன் மூளையை உபயோகியுங்கள். தப்பிப்பதற்கு நிச்சயம் ஒரு வழி கிடைக்கும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **04.01.2003.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **477**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 478

பரிசுக்குரியவர்:
**பீ.மிதுர்கஜன்,**
சூரியகாந்தி எஸ்டேட், ஹல்கரனோயா.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **லோ. மடோனா டிலக்சி,** காரப்பாதேப்பாடசாலை, கல்முனை. | **எம்.என்.எப். ரிம்சாத் பேகம்,** துருக்கராகம, கஹட கஸ்திகிலிய. |
| **வ.மிறின் தனோஜன்,** 145, கந்தசுவாமி கோயில் வீதி, வவுனியா. | **எஸ்.ஏ. றஸானஸ்,** மு.க.வி. கல்பிட்டி வீதி, குறிஞ்சிப்பிட்டி. |
| **இரா. பார்கவி,** தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், பதுளை. | **கு. ஆதவன்,** தமிழ் மகா வித்தியாலயம், வவுனியா. |
| **ஜூட் அருள்தாசன்,** பத்பேரிய, அங்கந்த வத்த, பரகடுவ. | **எம்.கே.சித்தாரா,** மின்ஹாஜ் வித்தியாலயம், ஹொறம்பாவ. |
| **எம்.எஸ். துசான்,** தருமதூத்த கல்லூரி, பதுளை. | **ஜயதீப் விஜயகுமாரன்,** கொ/பஞமென்டால் த.வி. கொழும்பு-14. |

## விடுகதைகளும் விடைகளும்

1. நீ பாதி நான் பாதி அது என்ன?
2. தண்ணீர் தெரியா ஏரி அது என்ன?
3. காதுக்குள் நூறு சேதி; ஆனாலும் தருபவர் அருகில் இல்லை அது என்ன?
4. ஒவ்வொரு வார்த்தைக்கும் பணம் பணம் அது என்ன?
5. ஆடும் அசையும் ஆனாலும் பிடுங்க முடியாது அது என்ன?
6. போட்டது போட்டதுதான் பாதையில்... பார்வையில் மட்டுமே அது என்ன?
7. தானாகப் பறக்காது பறக்க வைக்கலாம் அது என்ன?
8. மண்ணுக்குள் நெளிபவன் நீருக்குள் போனால் மீனுக்கு இரையா வான் அவன் யார்?
9. வயதான பிறகு கூடுதலாக இந்தக் கை அது என்ன?
10. காட்டுக்குள்ளே பாட்டுச் சத்தம் அது என்ன?

**விடைகள்.**

1. குன்று மணி 2. கண்
3. டெலிபோன் பேச்சு
4. தந்தி 5. விரல்கள்
6. கோலம் 7. பட்டம்
8. மண் புழு 9. வழுக்கை
10. குயில்

## குட்டித் தகவல்கள்

### மம்மி



★ **மம்மி என்றால் என்ன?**

இறந்தவர்களின் உடல் அழிந்து போகா வண்ணம் பதப்படுத்தி வைப்பதற்கு 'மம்மீஸ்' என்று பெயர். இந்த மம்மிகள் எகிப்தில் பெரும்பாலும் காணப்படுகிறது.

★ **பிணத்தை ஏன் பாதுகாக்க வேண்டும்?**

எகிப்தியர்கள் இறந்தவர்களின் உடல் எவ்வளவு நாட்கள் அழியாமலிருக்கிறதோ அதுவரையில் இறந்தவர்களின் ஆவி உயிர் வாழும் என்று நம்பினார்கள்.

★ **எப்படிப் பதப்படுத்துவார்கள்?**

முதலில் சடலத்தின் உள் உறுப்புகளை அகற்றிவிட்டு, சடலத்தை உப்பு மற்றும் இரசாயனக் கலவையில் பல வாரங்களுக்கு ஊற வைப்பர். பிறகு வாசனைத் திரவியங்கள், மூலிகைகளிம்புகள் கொண்டு தடவி பிறகு மெல்லிய துணிகளால் கட்டி இரட்டைப் பிணப் பெட்டியில் வைத்துப் புதைத்துவிடுவார்கள்.

★ **எதையெல்லாம் இப்படிப் பதப்படுத்துவார்கள்?**

எருது, நாய், பூனை, முதலை, பறவை, மீன் மற்றும் பூச்சிகள்.

★ **வேறு எங்கெல்லாம் இந்தப் பழக்கம் காணப்படுகிறது?**

தென் அமெரிக்காவில் பெரு மற்றும் மெக்சிகோவில் காணப்படுகிறது.

### பல்லஸ் பூனை!




பூனை வகையைச் சேர்ந்த இவர் பெயர் பல்லஸ் கேட், இதன் உறுமல் சத்தம் நாய்க் குட்டிகள் குரைப்பது போலும், ஆந்தை அகவுவது போலும் இருக்கும். சாதாரணமான பூனைகளை விட அளவில் சிறியது. இதன் தலை தட்டையாகவும், முகத்தில் காணப்படும் வரி வரிக் கோடுகள் பார்ப்பதற்கு முகமூடிக் கொள்ளைக் காரர்கள் போலிருக்கும். இவை லடாக் மலைகளிலும், ஜம்மு, காஷ்மீர் பகுதிகளிலும் காணப்படுகிறது.

## வாரம் ஒரு TOP TEN

**இவ்வாரம்:- உலகின் மிக நீளமான 10 எல்லைகள்**

| நாடு | எல்லைகள் கிமீ | எல்லைகள் மைல்கள் |
|---|---|---|
| 1. சீனா | 22,143 | 13,759 |
| 2. ரஷ்யா | 20,139 | 12,514 |
| 3. பிரேசில் | 14,691 | 9,129 |
| 4. இந்தியா | 14,103 | 8,763 |
| 5. ஐக்கிய அமெரிக்கா | 12,248 | 7,611 |
| 6. கொங்கோ குடியரசு | 10,271 | 6,382 |
| 7. ஆர்ஜென்டினா | 9,665 | 6,006 |
| 8. கனடா | 8,893 | 5,526 |
| 9. மங்கோலியா | 8,114 | 5,042 |
| 10. சூடான் | 7,697 | 4,783 |


## இந்த வாரப் புதிர்



இங்குள்ள வட்ட வடிவக் கடதாசியை நான்கு நேர் வெட்டுக்களின் மூலம் 11 துண்டுகளாக்க வேண்டும். முயற்சி செய்யுங்கள் பார்க்கலாம்.

## அறிவுத் தேடல்

சென்றவாரப் புதிரின் விடை:



# உத்தர தரிசனம்

சீனி-5 கிலோ, நூடில்ஸ்-5 பக்கற், சோயாமீற்-500 கிராம், சோடா 2 பெரிய போத்தல்... கையிலிருக்கும் தொகையும் விருந்தினர் தொகையும் போட்டிபோட என் மனக்கணக்கில் மகளின் லக்டோஜன் மாக்கணக்கும் வந்து போனது. "கண்டியால வாறவைக்கு ஐஸ்கிறீமும் கொடுக்க வேணும். இப்ப ஐஸ்கிறீமும் வருகுதுதானே. 2 கிலோ பெட்டி வாங்குங்கோ" என மனைவி சொன்ன வார்த்தை மந்திரமானதால் எல்லாம் வாங்கிக் கொண்டு வீட்டு வாசல் வந்தேன்.

வரிசையில் நின்ற ஆட்டோக்காரரிடம் தப்பி மகேசனைக் கண்டு மனங் குளிர்ந்து அவனுடன் மாளிகாவத்தையிலிருக்கும் அவனுடைய கோழிக்கூடு வீட்டில் மனைவி தந்த பருத்தித்துறை வடை, வடகம், ஊறுகாயையும் வரிசையாய் அடுக்கியபோது லயன்எயாரின் பயணத்தில் என்னுடன் அவையும் நசுங்கித்தான் போச்சு. களைப்பாறச் சற்று உடல் சாய்ந்தேன்.

வான் ரயரின் வண்ணக் கோலங்கள். வந்த உறவினரின் வாய்ப் பேச்சில் ஏ-9 வழியின் நேர்முக வர்ணனை. "உந்தப் பாதையால.. யாரும் வருவினமே..? கஸ்ரம் ஒபீசில நான் எத்தின பேரை கவுரமா அனுப்பினனான். என்ன இவங்கள் கவட்டுக் கொட்டச் சொல்லுறாங்கள்... வெட்ட வெளியெல்லாம் வேகக் கட்டுப்பாடு... உலகத்தவரின் இன்றைய ஓட்டப் பாதையில் தமிழரின் வேகம்?" மச்சானின் வாயில் மங்கள கோசம்.

ஈட்டியாய்ப் பாய்ந்தது இரவுச் செய்தி அறிக்கை. "இரண்டாவதாய்ப் பயணித்த லயன்எயார் விமானம் வானில் காணாமல் போனது" என்ற வருத்தமான செய்தி. வந்த வேலை முடியும் முன் வரலாற்றுப் புகழ் மிக்க திருமலையில் வசந்தாக்கா வீட்டு வராண்டாவில் நான். "இண்டைக்குப் பதியினமோ..?"

"இல்லை. போன மாசம் பதிஞ்சு வைக்கு இண்டைக்கு இன்ரவியூவாம்..."

"யாழ்ப்பாணத்தில் அப்படி என்ன வேலை குடுக்கினமோ!!!!" இந்த மண் எங்களின் சொந்த மண் எல்லைகள் மீறி யார் வந்தவன்-என்ற பாட்டுக் கசற்களை ஈயப் பேப்பரில சுத்தி அந்த மண்ணில் புதைத்த நினைவுகள் என் மனக்கண் முன்.

மனைவி எப்படி இருக்கிறாளோ...! பி.பி.சி. கேக்கிற படியால் விசயம் தெரிஞ்சிருக்கும். அதிகாரிகள் முன் பதிந்து ஆக்கிரமிப்பாளர் முன் பணிந்து கப்பலேறிப் போயாச்சு. கரை காணும் வரை கந்தன்தான் என் துணை. "இனி தொடர்ச்சியா ஓடுமே..."

"என்னண்டு தெரியேல்ல...! ஐ.சி.ஆர்.சி. வழித் துணை கொடுக்க வேணுமே..!"

"இல்லயண்ண எப்படியும் ஓடும்." எங்களின் மனத் தாங்கல்கள் இயலாத காரியங்களில். இயலும் என்ற நம்பிக்கை எங்கள் வாழ்க்கையில்.



கு.சரவணபவசர்மா-சுன்னாகம்.

மறக்க முடியாத மச்சான் வரவுடன் வசந்தாக்கா குடும்பமும் வந்து சேர்ந்தது. "இவன் மகேசனும் குடும்பத்தோட வாறனெண்டு கொஞ்சம் முதல் போன் பண்ணினவன். அவனோட நீர்கொழும்பில இருந்து நித்தியாக்கா குடும்பமும் வருகினமாம்." மனைவி சொல்ல மீண்டும் மணியோசை. குருநாகலில் இருந்து ரங்கசாமிப் பெரியப்பா குடும்பமும் நாளைக்கு வெளிக்கிடுறதாயும் லண்டனில் இருக்கும் அவர் மகன் குடும்பமும் நேர யாழ்ப்பாணம் எங்கட வீட்ட வாறதாய் வந்தது செய்தி. எம் வசதி, தேவை என்று நாம் எல்லோர் வீட்டிலும் போய்த் தங்கியதால் அவர்கள் இப்போ வரும்போது வரவேற்பதுதானே முறை. இருந்தும் கொள்ளாதுதான் எம் சிறிய வீடு.

பெரியவிளானில் வைரவநாதன் வீடு என்றால் எவருக்கும் தெரியும். அப்படிப் பெரிய வீடு. கமம் செய்து வாழ்ந்து வந்த நான் இப்ப கொமினிக்கேஷன் வைத்துக் காலம் கடத்திறன். சமாதானக் கதவு சற்றே திறந்ததால் எம் வீடு நிறைந்தது விருந்தினர் கூட்டத்தால்.

"நீங்க என்ன.. செய்றீங்க..?"

"நான் றொட்டி.. சாப்.. இப்பதான்... சத்தி... எடுத்தனான்."

"கொஞ்சம்... உங்கட வா... குறையுங்கோ... சுமதி. சரி நீங்க எப்பிடி இருக்கிறீங்க...?"

"நான் நல்ல சுகமா..."

"உங்கட குடும்பத்தார்பற்றி...?"

"இறந்த அப்பா, இருக்கிற அம்மா, அண்ணா, அக்கா, தம்பி, தங்கை..."

"ஓ... நீங்க நிறையப்பேர்...!"

"ஆனால் வீட்டில நான் தனிய ஒரு பிள்ளை."

"சரி உங்கட விருப்பம்...?"

"போடா.... என்ற பகவதி படப் பாடல்."

"ஆ... உங்களுக்காக... இதோ..." தனியார் வானொலியில் தைரியமாக உரையாடிய தம்பி மகேசனின் மகள் சுமதியின் செயலால் நான் தைரியம் இழந்தேன். என் வசதி கருதி நான் நடாத்தும் கொமினிகேஷன் பில் என் சக்தியை மீறி....

விட்டுக் கொடுத்தார்கள்! வரலாற்றில். ஆனால் இவர்கள் இருவரும் எப்படி! சமர்க்களம் ஆடியோர் இன்று சந்தியில் ஒன்றாய். சமாதானக் காற்றே எங்கள் மூச்சு என்றனர். சமனும் சந்திரனும் சந்தித்துக் கொண்டு சரளமான உரை. "கோமத..?"

"நல்லது."

"ஒயா ஊரு?"

"கட்டை பறிச்சான். ஒங்கட கம?"

"உடுகம ஊரு."

"எந்தக் காம்..?"

"பலாலி மூலஸ்தான காம். ஒயாகம நல்லம். கோயில் கெதர டமேஜ். முன்னம் எல்லாம் நல்லம்." அன்பு மொழியோ அல்லது அடுத்து உருவாகப் போகும் மொழியோ தெரியவில்லை. ஆனால் ஒரு ஒளிக் கீற்று.

தொலைக்காட்சியிலிருந்துதான் வந்தது. அரசியற் கட்சி வெளியேறும் வரை அகிம்சை வழிப் போராட்டமாம். சனங்களின் வாழ்க்கையிலும் ஏதோ நடைபெறத்தான் வேண்டும். ஜன நாயகத்துக்காக ஜனங்களா? ஜனங்களுக்காக ஜனநாயகமா? செய்தியின் சிதறலில் மனங்குளம்ப, முகம் கழுவி தலை வாரக் கண்ணாடி முன் வந்த போது முகம் முழுக்கச் சிவப்புக் கொப்பளங்கள். முடியும் மட்டும் உரசிப் பார்த்தேன். நோவும் இல்லை. மறையவும் இல்லை..!!! என்ன இது என் கோலம்..!!!! பின்புதான் புரிந்தது வீட்டுக்கு வந்த விருந்தாளிப் பெண்களின் ஸ்ரிக்கர் பொட்டுகள் என் வீட்டு நிலையாடியிலென்று நினைத்து நினைத்துச் சிரிக்கச் சிரிக்க.

சுகமாய் இருந்தது குளியல். கசூர்ணா பீச்சிலிருந்து புறப்பட்டு, பழைய நூல் நிலையம், நயினாதீவு, நல்லூர், பூங்கனிச்சோலை, சங்கிலி யன்தோப்பு, வல்லிபுரக் கோயில், செல் வச்சந்நிதி, கீரிமலை, கந்தரோடை என்று எல்லா இடமும் நாலு நாளிலும் நம் விருந்தினர் அனைவரையும் கூட்டிச் சென்று சுற்றிக் காட்டினேன். நான்தான் ஹீரோ என்று எல்லோரும் வாயாரப் புகழ்ந்தனர். குழந்தைகள் தான் நுளம்புக் கடியையும் குண்டுத் துளை என்று சலித்தனர். எம் தேசத்தில் இன்று கூட உடலில் சன்னங்களுடன் எத்தனை குழந்தைகள். வாழ்வியற் சூழலில் எத்தனை மாற்றங்கள், பரிமாணங்கள். விளங்கவில்லை எனக்கு.

சந்திக்குப் போவதென்றால் கூட சந்திர மண்டலம் போவது போல் தலைக் கவசம். எத்தனை கெடுபிடி! இருந்தும் தினசரிப் பேப்பரில் ஓர் உயிர் பலி எனச் செய்தி. ஹீரோ, ஹொண்டாக்களில் திரிவோர் கீதோபதேசம் செய்த கண்ணன் போன்ற அறிவுச் சாரதிகளா என்ன? உறவினர் கொடுத்த அன்பளிப்புக்களால் மனைவியும் மக்களும் மகிழ்ச்சியில் திளைத்தனர். "இதை என்ன செய்யிறது..?"

"தலையை வாரிப்போட்டு இதை ஸ்பிரே பண்ணினால் தலை குழம்பாது." "அப்ப இது?"

"எலாம் வைச்சால் சேவல் மாதிரி கூவும்."

"இதென்ன?"

"காத்தடிச்சுப்போட்டு தண்ணி விட்டு சுவிம்மிங் பண்றது." என் பிள்ளைகளின் விழிகளில் ஒரே ஆச்சரியம். ரயிலைக் கூட காணாமல் வளர்ந்தவர்கள்தானே.


எல்லா வேலைகளையும் செய்து முடித்துவிட்டு முற்றத்தில் கிடந்த கட்டிலில் இருந்த என்னிடம் வந்தாள் மனைவி. வீடு முழுதும் விருந்தினர். வளவு நிறைய வாகனங்கள். எல்லோர் மனதிலும் கொண்டாட்டம். என் மனதில் மட்டும் திண்டாட்டம். உடற் சோர்வுடன் உள்ளமும் சோர்ந்து போக ஏனோ உறக்கம் மட்டும் வரவில்லை. "என்னங்க! இற்றை வரை எவ்வளவு செலவாச்சு..?"

"ஓ எல்லாமா ஒரு நாப்பத் தைஞ்சு..???"

"என்னப்பா செய்யிறது!!!"

"கடன்தான் சமாளிப்பம்..!!" டிஸ் அன்ரனாக்கள், இன்ரநெற் இணைப்பு, கான்போன், வங்கிகள் கணனிமயம், வாசல் வரை வரும் காப்புறுதி நிறுவனங்கள், வியாபாரக் காட்சியகங்கள்.. என வடக்கின் தரிசனங்கள். ஆனால் சாதாரண எம் வாழ்வில்..??? சமாதானத்தின் வரவை என்னால் சமாளிக்க முடியவில்லை. சாபம் இட்டவன் நான் ஒருவன் மட்டுமா!!!! "நாளை எல்லோரும் ஒன்றாய் போகினமாம்" எனக் கூறிய மனைவியின் வார்த்தை தாலாட்டாக என் மனம் ஏக்கத்தில் ஆழ்ந்தது. உறக்கத்தில் கூட தரிசனங்கள். தரிசனம் தந்தது ஆண்டவனல்ல. அடுத்து வரவிருக்கும் விருந்தாளி அவதாரம்.

# மனைவி



விவே.பிரேம்-கோமாரியூர்

அன்று காலை...
மழையுமல்ல பனியுமல்ல ஏதோ ஓர் தூர்த்தல் ஊரைத் தட்டியெழுப்பிக் கொண்டிருந்தது...

லக்ஷலா அதிகாலை பஸ்ஸில் பயணமாக பஸ் தரிப்பில் மார்பிலே புத்தகத்தை அணைத்தவாறு காத்துக் கொண்டிருந்தாள். ஊர் எழும்ப முன் ரவிக்குக் கிடைத்த நல்ல சந்தர்ப்பம் இதுதான். அம்மா கண்டால் திட்டித் தீர்த்து விடுவா, என்னைத் திட்டினாலும் பரவாயில்லை. என் லக்ஷலாவையும் அல்லவா திட்டித் தீர்த்து விடுவா என்ற ஒரே ஏக்கத்தோடு பஸ் தரிப்பில்...

லக்ஷலாவின் அருகே அமர்ந்து கொண்டான். சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு இனிய வார்த்தைகளை இடைவிடாமல் பரிமாறிக் கொண்டிருந்த ரவிக்கு, சற்றுத் தூரத்தில் வந்து கொண்டிருந்த ஏதோ ஒரு வாகனத்தின் சத்தம் காதில் விழ...

தன்னை லக்ஷலா பிரியும் நேரம் நெருங்குகின்றதென நினைத்தவனாய் அன்றையப் பொழுதின் நிகழ்ச்சி நிரலை அவளிடம் பட்டியலாய் சொல்லி முடித்தவனின் கண்களில் எதிரே வந்துகொண்டிருந்த ஜீப் வண்டி தென்பட...

அவசர அவசரமாக லக்ஷலாவிடம் விடைபெற்றுக் கொண்டு தன் வீட்டை நோக்கி விரைவாய் நடக்கலானான். எதிரே வந்து ஜீப்பும் அவன் நடையில் ஓர் பார்வையைச் செலுத்தியவாறு சென்று கொண்டிருந்தது. பீதியடைந்த ரவி ஓட்டமும் நடையுமாய் தன் வீட்டை அடைந்தான்.

தன் அறைக்குள் நுழைந்த அவன் ஏதோ ஒரு வாகனத்தின் சத்தம் கேட்க லக்ஷலாவிடமிருந்து ஒவ்வொரு நாளும் விடைபெறும் பஸ்தரிப்புக் கையசைவைக் காண வாசற்படிக்கு வந்து பார்த்தான்.

கண்களையே நம்ப முடியவில்லை வளவு முழுவதும் ஒரே சப்பாத்துப் பாதங்களின் முகங்கள். எதிரே கண்ட அந்த ஜீப் வண்டி தன்னை அழைப்பது போல் ஒரு சமிக்ஞை கொடுக்க... சில சப்பாத்துப் பாதங்களும் ரவியின் முகத்தைப் பதம் பார்க்க... சேட்டிலே பிடித்துத் தள்ளிவிடப்பட்டவனாய் ஜீப்பினுள் ஏற்றப்படுகின்றான்.

எங்கு? எதற்கு? என்னத்திற்காய் கொண்டு செல்லப்படுகின்றான் என்பது யாருமே அறியாத ஒன்றாய்...

எங்கோ... ஒரு மண் மூடை வேலிகள் நடுவே பால் வடியும் பண்பான ரவியின் முகம் சில சப்பாத்துப் பாதங்களின் பகிடி விளையாட்டுக்குப் பதமானது.

இதையறியாத ரவியின் அம்மா வீட்டின் அறை முழுவதும் ரவியைத் தேடினாள். பெற்ற மனம் பதைபதைக்க வீதிக்குப் புறப்படலானாள். வீதிக்குச் சென்றதும் வீதியில் ஒரே சலசலப்பு. அனைவரின் வாயிலும் ரவியின் கதையே. விசயத்தையறிந்த ரவியின் அம்மா பதை பதைத்து முகாமுக்கு விரைந்தாள்.

அங்கு நின்ற சில சப்பாத்துப் பாதங்களை கண்ணீரால் துடைத்தாள். அப்படிக் கண்ணீரால் வார்த்தைகளைச் சொரிந்தவளுக்கு சப்பாத்துக் கால்களின் மனங்கள் இரக்கம் காட்ட மறுத்தன. "இவ்வாறு ஒருவரும் இங்கு கொண்டு வரப்படவில்லை" அவள் மனதிற்குள்ளே அந்த சப்பாத்துப் பாதங்களின் இந்த வார்த்தை இடியாய் விழுந்தது. பெற்ற மனம் தாங்கவில்லை. அலறினாள். கூச்சலிட்டாள். கருணை காட்டும் என நினைத்த சப்பாத்துப் பாதங்கள் அவளின் முகத்தையும் ஒரு கணம் பதம் பார்க்கத் தவறவில்லை. நாகரிகமற்ற பெண்மையறியாத வார்த்தைகளும் அவளின் மனதைத் துளைத்தது. இனியும் இருந்து பயனேதும் இல்லை; வேதனை அனுபவிக்கவும் இயலாத ரவியின் அம்மா எழுந்து நடக்கலானாள். கால்கள் இடறின... தலை சுற்றியது. எதிரே நிற்பவர்களின் முகங்களைக் கண்கள் இனங்காண மறுத்தன. இப்படியாக இரண்டு அடி வைப்பதற்கிடையே எத்தனையோ இடறல்கள். இவ்வாறு இடறிய அவள், எதிரே விசயமறிந்து ஓடி வந்து கொண்டிருந்த லக்ஷலாவின் முன் விழுந்தாள். லக்ஷலாவோ மாமி என்ற உரிமையின்றி, பரிதவிக்கும் உடலை தூக்கி எழுப்பி அழத் தொடங்கினாள். இவையனைத்தையும் நின்று ரசித்துக் கொண்டிருந்த சப்பாத்துப் பாதங்களின் கண்கள் லக்ஷலாவின் அழகில் மயங்க இருவரையும் அழைத்தனர். லக்ஷலாவைப் பார்த்து "நீ யார்?"

எனக் கேட்க லக்ஷலா தடுமாறினாள். வாயிலிருந்து உரிமையோடு முறையேதும் வர மறுத்தன...

ஆனால்

அப்போது ரவியின் அம்மாவின் வாயால் ஒரு சில வார்த்தைகள் "இது தான் எனது மகன் ரவியின் மனைவி" சொல்லும் போதே வாய் தடுமாறியது. உடல் நிலை குலைந்தது.

ஆனால், இதைக் கேட்ட லக்ஷலாவின் மனத்தினுள்ளே மகிழ்ச்சி பொங்கியது. இருந்தாலும் "மனைவி" எனும் பெயரைப் பெற்றதற்கு அர்த்தமே இல்லாமல் போய் விடுமோ...

என நினைத்தவளின் அங்கங்களை சப்பாத்துப் பாதங்கள் ஏதோ ஒரு வார்த்தையால் வர்ணிப்பதை உணர்ந்த லக்ஷலா மாமியை உரிமையோடு பற்றிக் கொண்டு வீட்டை அடைந்தனர்.

ஆறு மாதங்கள் இரவும் பகலும் மாறி மாறி வந்து போனாலும் ஒருவருக்கும் தெரியாது அவள் உள்ளத்து உதிர ஊற்றுக்களின் கொடூரக் காட்சி: அவளது சோகமும், வேதனையும் எப்படிப்பட்டதென்று புரிந்து கொள்ளாவிட்டாலும் பரவாயில்லை. அவன் வந்து தங்கிய நெஞ்சில் இனி ஒருவருக்கும் இடமேயில்லை என நினைத்தவளாய்... மனம் முடிக்க முன்னமே "மனைவி" எனும் பட்டத்தைப் பெற்று எப்போவாவது ஒரு நாள் ரவியின் வரவை எண்ணி மனைவி எனும் மணிமுடியோடு காத்திருக்கிறாள் லக்ஷலா! ஆனால்...

நிச்சயம் "மீண்டுமொரு செம்மணியில் வாலிபனின் எலும்புக் கூடு"

பாவம் அவள் காத்திருப்பு.

"நோ அந்த ஹரிதாதான் எங்களுக்கு வேணும். சர்தாரோட சாவுக்குக் காரணமான அவளைக் கண்ட துண்டமா வெட்டியெறியப் போறோம். அவளைக் கூட்டிகிட்டு வரலைன்னா மத்த பாசஞ்சர்ஸை இந்த நிமிசமே வெட்டி எறிவோம், சம்மதம்தானா?"

விவேக் பதறினான்.

"வேண்டாம். அப்படியெல்லாம் பண்ணிடாதே. நான் ஹரிதாவோடு வர்றேன். அப்புறம் இன்னொரு விசயம் உங்க ஆள் உத்தம்க்கு கால்ல குண்டு காயம். வேன்ல கூட்டிகிட்டு வரட்டுமா?"

"வேண்டாம். உத்தம்சிங்காலே நடக்க முடியும் நடந்தே வரட்டும்... அவங்க ரெண்டு பேரையும் முன்னாடி நடக்கவிட்டு நீங்க மூணு பேரும் பின்னாடி ரெண்டு கைகளையும் தூக்கிட்டு நடந்து வரணும்."

விவேக் மெல்ல சிரித்தான்.

"இவ்வளவுதானா உன்னோட ஆசை, நிறைவேத்தி வெக்கறேன்."

"உடனே புறப்பட்டு வாங்க."

ஹெட்போனைக் கழற்றி ரிஸீவரை தொங்க விட்டான் கவி.

பெங்களூரின் கிழக்குத் திசை ஆரத்தியைக் கரைத்து ஊற்றின சைஸில் லேசாய் விடிந்து கொண்டிருந்த நேரத்தில்-

மெதுவாய் நடை போடும் குரு கோவிந்தும் பாண்டேஜ் கால்களோடு உத்தம் சிங்கும் நொண்டி நொண்டி நடக்க அவர்களுக்குப் பின்னால் கைகளை உயர்த்திக் கொண்டு ஃபிளைட்டை நோக்கி-

விவேக்-

பெல்லியப்பா-

ஹரிதா-

மூன்று பேரும் மெல்ல நடந்து கொண்டு இருந்தார்கள். கண்ட்ரோல் டவரிலிருந்தும் ஏர்போர்ட் லௌன்ச்சிலிருந்தும் காக்கி யூனிபார்ம் தரித்த போலீஸ் அதிகாரிகளும் வெள்ளுடுப்புக்குள் நுழைந்திருந்த விமான நிலைய அதிகாரிகளும் உறைந்து போன நிலையில் தெரிந்தார்கள்.

விவேக் தன் இரண்டு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்தியிருந்தாலும் பார்வையை நாலா பக்கமும் ஓட்டிக் கொண்டே நடந்தான்.

ஐந்து நிமிச நடையில் ஃபிளைட் வந்தது.

விமானத்தின் இடுப்போடு பொருத்தப்பட்டிருந்த படிகளில் உத்தம் சிங்கையும், குரு கோவிந்தையும் ஏற அனுமதித்த கவி-விவேக்-பெல்லியப்பா-ஹரிதாவை கீழே நிற்கச் சொல்லிவிட்டு சைலேந்தரைக் கூப்பிட்டான்.

"சைலேந்தர்! மூணு பேரையும் நல்லா செக் பண்ணு. ஆயுதம் பிஸ்டல் ஏதாவது இருந்தா எடுத்துடு. அப்புறமா ஃபிளைட்டுக்குக் கூட்டிட்டு வா."

அவன் தலையாட்டிக் கொண்டே படிகளில் இறங்கி மூன்று பேரையும் நெருங்கினான். சோதித்துப் பார்த்துவிட்டு நிமிர்ந்தான்.

"கவி! மூணு பேரும் நிராயுத பாணி..."

"சரி.. மேலே கூட்டிட்டு வா."

சைலேந்தர் பிஸ்டல் முனையில் மூன்று பேரையும் படிகளில் உயர்த்தி ஃபிளைட்டுக்குள் கூட்டிப் போனான்.

"வெல்கம் விவேக்... அண்ட் ஆல்ஸோ டு ஹரிதா" கவி கிண்டலாய் தலையைக் குனிந்து வரவேற்றான்.

விவேக் புன்னகைத்தான்.

"உன்னோட ரெண்டாவது கோரிக்கையும் ஓவர்... மிச்சம் இருக்கிற பயணிகளையும் வெளியே அனுப்பிவை.

"ஷ்யூர்... ஷ்யூர்.."

சொல்லிக் கொண்டே கவி ஜெயராஜைப் பார்க்க அவன் பயணிகளை நோக்கி நகர்ந்தான்.

அடுத்த நிமிசத்தின் ஆரம்பத்திலிருந்து விமானத்தில் இருந்த மிச்சப் பிரயாணிகளும் வெளியேற கவி உத்தம் சிங்கின் அருகில் வந்தான்.

"உத்தம்! சர்தார் தற்கொலை பண்ணிகிட்ட நியூஸைக் கேட்டு நாங்க எல்லாருமே ஆடிப் போயிட்டோம்."

உத்தம் உறுமினான். "சர்தாரோட சாவுக்கு காரணம் அந்த ஹரிதாதான்... அவளை என் கையாலே சாகடிச்சாதான் எனக்கு நிம்மதி..."

"கொஞ்சம் பொறு உத்தம். லாகூர் ஏர்போட்டுக்குப் போனதும்-உன்னோட ஆசையை நிறைவேத்திக்கலாம்..."

"நோ கவி! அவளை இதே ஏர்போர்ட்ல-அவ அப்பாவுக்கு முன்னாடியே பிணமாக்கி ரன்வேயில் எறியணும்... அதைப் பார்த்து அந்த கமிஷனர் துடிக்கணும்."

"உத்தம் சொல்றதுதான் சரி" எட்டு விசாரணைக் கைதிகளும் ஒரே குரலில் கோஷித்தார்கள்.

## அங்கம் 15

கவி கையமர்த்தினான்.

"பாசஞ்சர்ஸ் முதல்ல வெளியே போகட்டும்... அப்புறம் ஹரிதாவை தீர்த்துக் கட்டறதைப் பத்தி யோசிப்போம்..."

பயணிகள் வெளியே போகக் காத்திருந்தார்கள்.

சில நிமிசங்கள்தான்.

விமானத்தில்-பைலட்களின் இருக்கைகளைத் தவிர எல்லா இருக்கைகளும் காலி. ஜெயராஜ் பிஸ்டலால் விவேக்கையும் ஹரிதா-பெல்லியப்பாவையும் ஓரமாய் தள்ளி நிறுத்தினான்.

"தலைக்குப் பின்னாடி கைகளை கோர்த்துக்கிட்டு நில்லுங்க."

நின்றார்கள்.



உத்தம்சிங் பாண்டேஜ் காலோடு நொண்டிக் கொண்டே போய்-தேவிகாவின் கையிலிருந்த மிஷின் கன்னை வாங்கிக் கொண்டான்.

"கவி! இந்த மூணு பேரையும் சுட்டுத் தள்ளட்டுமா?"

"வேண்டாம் உத்தம்.. ஹரிதாவை மட்டும் தீர்த்துக் கட்டு... விவேக்கையும் பெல்லிய்பபாவையும் லாகூர்ல வெச்சு முடிச்சுக்கலாம்... லாகூர் போய் சேர்கிற வரைக்கும்-ரெண்டு பேராவது பணயக் கைதிகளாக ஃபிளைட்ல இருக்கிறது நல்லது."

"அதுவும் சரிதான்! விவேக்! நீயும் பெல்லியப்பாவும் ஹரிதாவை விட்டுத் தள்ளி நில்லுங்க...!"

அவர்கள் தயங்க-

"உம்ம்ம்ம்.." என்று உறுமினான் உத்தம்.

விவேக்கும்-பெல்லியப்பாவும்-தயக்கமாய் தள்ளி நின்று கொண்டனர். எட்டு விசாரணைக் கைதிகளும்-கைகளைத் தட்ட ஆரம்பித்தார்கள்.

"ரப்.. ரப்.. ரப்..."

"ரப்.. ரப்... ரப்..."

உத்தம் மெஷின் கன்னை ஹரிதாவின் மார்புக்கு நேரே உயர்த்தினான். ஆட்காட்டி விரலை கேள்விக்குறியாக்கி-ட்ரிக்கரில் பதித்தான்.

"கமிஷனரின் மகளே! குட் பை."

எழுதுவது

**ராஜேஷ்குமார்**

ஹரிதா திக்கென்று-மிரள மிரள பார்க்க-

கவி கத்தினான்.

"சுடு உத்தம்!"

உத்தம்சிங் கையிலிருந்த மெஷின் கன்னை பளிச்சென்று திருப்பி-அவனுக்கு இடது பக்கமாய்- வரிசையாய் நின்றபடி கைகளைத் தட்டிக் கொண்டிருந்த விசாரணைக் கைதிகளின் பதினாறு முழங்கால்களையும் பார்த்து-

'தட தட'வென்று சுட்டான்.

கண்ணிமைக்கும் நேரத்தான்.

அத்தனைபேரும் சிதறினார்கள்.

விவேக் கவி மேல் பாய்ந்து-அவன் முகத்தை முஷ்டியால் நொறுக்க-பெல்லியப்பா ஜெயராஜையும் சைலேந்தரையும் இடுப்பு பிரதேசங்களில் தாக்கிச் சுருள வைக்க ஹரிதா தேவிகாவை சந்தித்துத் தன் கராத்தே டெட் ஸ்ட்ரோக்கை உபயோகித்து-அவளை மயக்கத்திற்குக் கொண்டு போனாள்.

வெளியே ஆம்புலன்ஸ்கள் 'ரொய்ங்க் ரொய்ங்க்..' என்று அலறிக் கொண்டு வரும் அரவங்கள்! காற்றில் கேட்டது.

கடைவாயிலும், மூக்கிலும் இரத்தம் ஒழுகினாலும் அதைப் பொருட்படுத்தாத கவி-திடுக்கிட்டுப் போய் உத்தம் சிங்கைப் பார்த்தான். பேச்சுவராமல் வாய் குழறியது.

"உ.. உ.. உத்தம் நீ... நீ... நீயா இப்படி?"

விவேக் சிரித்துக் கொண்டே கவியின் சட்டைக் காலரைப் பற்றித் தன் பக்கமாய் திருப்பினான்.

"கவி! இவர் நீ நினைக்கிற மாதிரி உத்தம்சிங் இல்லை. அவரோட ப்ரதர் மதன்சிங். அதாவது உத்தம்சிங்கைப் போலவே இருக்கிற மதன்சிங். நேற்றைக்கு ராத்திரி நீ கோரிக்கைகளை சொன்னதுமே நான் விசாரணை கைதிகளோட கேஸ் பைலையும் உத்தம் சிங், குரு கோவிந்த் கேஸ் பைலையும் புரட்டிப் பார்த்து-ஏதாவது மார்க்கம் கிடைக்குமான்னு யோசிச்சுப் பார்த்தேன். உத்தம் சிங்கைப் பற்றி அவனோட கேஸ் ஹிஸ்டரியில் படிக்கும் போது அவன் 'ட்வின்ஸ்' பிறப்பு என்கிற உண்மை எனக்கு தெரிஞ்சது. ட்வின்ஸ்ன்னு சொன்னாலே உருவ ஒற்றுமை ஒரே மாதிரிதான் இருக்கும். இந்த உருவ ஒற்றுமையை உபயோகப்படுத்தி உங்க கூட்டத்தைப் பிடிக்க முடிவு பண்ணினேன். மும்பை டி.எஸ்.பி. சதானந்தத்தை போன்ல கான்டாக்ட் பண்ணி உத்தம் வீட்டு அட்ரசைக் கொடுத்து அவனோட ப்ரதரை கான்டாக்ட் பண்ணச் சொன்னேன். அவரும் கான்டாக்ட் பண்ணி மதன்சிங்கை ராத்திரியோடு ராத்திரியா உத்தம்சிங்கா மாத்தி கூட்டிட்டு வந்தார். சீக்கிய டர்பன், தாடி,மீசை, முக ஒற்றுமை எல்லாமே உத்தம்சிங் மாதிரியே இருந்ததினாலே நீங்களும் ஏமாந்திட்டீங்க. கால்ல பாண்டேஜ் கட்டை மாத்திரம் எக்ஸ்ட்ராவா போட்டோம். மதன் சிங்குக்கு ஆரம்பத்திலிருந்தே உத்தம்சிங்கோட போக்கு பிடிக்கலை; அவன் சார்ந்திருக்கிற இயக்கம் பிடிக்கலை. ஸோ அவர் எங்களுக்கு முழு அளவில் உதவினார்."

விவேக் பேச்சை சில விநாடிகள் நிறுத்திவிட்டு-பின் தொடர்ந்தான்.

"மதன்சிங் எங்களுக்கு உதவுவதாக சொன்னாலும், உன்னை நினைச்சு நாங்க பயப்பட்டோம். நீ மதன்சிங்கை அடையாளம் கண்டுகிட்டா நாங்க போட்ட திட்டமே நாசமாயிடுமே! ஃப்ளைட்டுக்குள் வரும்போதே,

'திக் திக்'ன்னு வந்தேன்... ஆனா மதன்சிங் உங்க எல்லாரையும் ஏமாத்திட்டார்..." விவேக் சொல்லிக் கொண்டிருக்கும்போதே-

ஆம்புலன்ஸ் வேன் ஆர்டர்லிகளும்-

பொலிஸ் அதிகாரிகளும்-

விமான நிலைய அதிகாரிகளும்-ஸ்டேர்ஸில் ஏறி ஃபிளைட்டுக்குள் அவசரமாய் வர-விவேக் வலது கை கட்டை விரலை வளைத்துக் காட்டி-புன்னகைத்தான்.

அதிகாரிகளால் கை குலுக்கப்பட்டான்.

அணைக்கப்பட்டான்.

செல்லமாய் கன்னங்களில் தட்டப்பட்டான்.

அவர்களுடைய அன்பு கசங்கல்களுக்கு ஈடு கொடுத்து கொடுத்து வெளியே வந்து, ஸ்டோர்ஸில் இறங்கி ரன்வேக்கு வர-

தொலைவில் ரூபலா ஓடி வருவது தெரிந்தது.

அருகில் வர வர கண்களில் சந்தோசக் கண்ணீர் மின்னியது.

"என்னங்க?" என்று ஆர்வமாய் ஓடி வந்தாள். விவேக்கை நெருங்கியதும் அவனை இறுக அணைத்து முகத்தை நிமிர்த்தி-அவனுடைய தலையைக் குனிய வைத்து நெற்றியில் அழுத்தமாய் முத்தமிட்டாள். சந்தோசத்தோடு சொன்னாள்.

"எனக்குத் தெரியுங்க... உங்களை எந்த கொம்பனாலும் எதுவும் பண்ண முடியாதுன்னு... எனக்கு நல்லாவே தெரியுங்க."

விவேக் அவளை தோளோடு சேர்த்து அணைத்தபடி ஏர்போர்ட் லௌன்ஞ்சை நோக்கி நடக்க ஆரம்பித் தான்.

தொலைவில் கமிஷனர் விஷ்ணுவர்த்தன் கை குலுக்கக் காத்திருந்தார்.

-முற்றும்-



**அடுத்த வாரம்**

அசத்தல்

தொடர்

ஆரம்பம்

# ஆறுமனமே ஆறு!

## இளம் வயதுத் திருமணம்.....

"தலைவர்! சிவராமனை நீங்கள் சந்தித்துக் கதைத்திருக்கிறீர்களா?"

"ஓம் தம்பி. சிவராமன் நேற்றுக் கூட போழை விளையாடிக் கொண்டிருந்தான். உலகம் தெரியாத பெடியன். எந்த நேரமும் புளிய மரத்தில் ஏறி விளையாடிக் கொண்டிருப்பான். இவனுடன் என்னத்தைப் பேசுவது நாமொன்று கேட்க வேறேதோ பதில் சொல்லுவான்."

"அதுசரி றஞ்சனியோடு ஏதாவது கதைத்திருக்கிறீர்களா?"

"றஞ்சனி.. பிள்ளைக்கு இன்னும் பக்குவமாக, அடக்க ஒடுக்கமாக உட்கார்ந்து இருக்கத் தெரியவில்லை. எனது வீட்டிலிருந்து முன்றாவது வீட்டில்தான் இருக்கிறாள். அவள் அணிந்திருக்கும் யங்கி தெரியுமளவுக்குத் தன் உடுப்பைச் சரி செய்யாமல் உட்கார்ந்திருப்பாளாம். குழந்தை போல முகாம் முழுவதும் சுற்றித் திரிவாள்; ஓடித் திரிவாள். விபரமில்லாத பிள்ளை."

"தலைவரே! நீங்கள் இவர்கள் இருவரையும் சேர்த்து வைக்க முயற்சி செய்திருந்தாலும் பயனளிக்கவில்லை என்று சொல்லுகிறீர்களா?"

"ஓம் தம்பி சின்னஞ் சிறுசுகள். குடும்பம், வாழ்க்கை என்பதைப் பரியாதவர்கள். நான் கதைப்பதையும் அவர்கள் விளையாட்டாகத்தான் எடுக்கிறார்கள்."

"சரி தலைவரே! நீங்கள் கொஞ்ச நேரம் வெளியில் இருந்து கொண்டு சிவராமனை இங்கு அனுப்பிவிடுங்கள்" என்று கேட்டுக் கொண்டேன். வெளியில் சென்ற தலைவர் "சிவரா மனைக் காணவில்லை" என்று சொன்னார். நான் உடனே வெளியில் சென்று தேடினேன். சிவராமன் எனது அலுவலகத்தின் பின்புறத்திலுள்ள நெல்லி மரத்திலுள்ள காய்களைப் பிடுங்கித் தின்று கொண்டு நின்றான்.

"தம்பி சிவராமன்! வாருங்கள் உங்களுடன் கொஞ்சம் கதைக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க சிவராமன் எனது அலுவலகத்திற்குள் வந்தான்.

"இந்தக் கதிரையில் இருங்கள் சிவராமன்" என்றேன். கதிரையில் இருந்த சிவராமன், எனது அலுவலகத்திற்குள் இருந்த சுலோகங்கள், படங்கள், தரவுகள் ஆகியவற்றைச் சுற்றிப் பார்த்தான். அப்பாவித்தனமாகக் காணப்பட்டான். அடிக்கடி தனது சேட் கொலரைச் சரி செய்து கொண்டிருந்தான்.

"சிவராமன்! உங்கள் சொந்த இடம் எது?" என்று கேட்டேன். "கணேசபுரம்" என்றான்.

"நீங்கள் எத்தனையாம் வகுப்பு வரை படித்தீர்கள்." "கோடிப்பட்டியில் 5ம் வகுப்பு மட்டும் படித்தேன்" என்றான்.

"சிவராமன்! உங்கள் மனைவியின் பெயர் என்ன?"

"றஞ்சனி."

"உங்கள் குழந்தை ஆண் குழந்தையா பெண் குழந்தையா?"

"ஆண் குழந்தை" என்று சொன்னான்.

"நீங்கள் உங்கள் குழந்தையைப் பார்க்கவில்லையா?"

"இல்லை."

"ஏன் பார்க்கவில்லை? குழந்தையில் ஆசையில்லையா?"

சிவராமன் அமைதியாக இருந்தான்.

"சிவராமன்! றஞ்சனியுடனும் குழந்தையுடனும் சேர்ந்து வாழ நான் ஏற்பாடு செய்து தரவா?" என்று கேட்டேன்.

"எனக்கு அந்த வேசை வேணாம். அவளுக்குச் சமைக்கத் தெரியாது. வீட்டில் தங்குவது கிடையாது. அவள் ஊர்க்குருவி; அவள் எனக்கு வேணாம். எங்க அம்மாவும் வேணாம் என்று சொல்லிவிட்டாங்க. அவள் குழந்தையை யாருக்குப் பெத்தாளோ தெரியாது." என்று கூறி முடித்தான்.

சிவராமன் கூறியவை என்னைச் சங்கடத்தில் ஆழ்த்தியது

"சிவராமன்! நீங்கள் 10 வருடமாக இந்த முகாமில் இருக்கிறீர்கள். றஞ்சனியும் இதே முகாமில்தான் இருந்திருக்கிறாள். விருப்பத்துடன்தான் திருமணம் செய்துள்ளீர்கள். குடும்பமாக வாழ்ந்து ஒரு குழந்தையும் பெற்றுள்ளீர்கள். இவ்வளவும் நடந்து முடிந்த பின் றஞ்சனியைப் பற்றித் தவறாகக் குற்றம் சுமத்துவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. திருமணம், குடும்பம், வாழ்க்கை என்பவை விளையாட்டுக்கள் அல்ல என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் சிவராமன்!" என்று கூறினேன்.

"அவளோடு நான் சேர்ந்து வாழ மாட்டேன்" என்று உறுதியாகச் சொன்னான் சிவராமன். இன்னும் பல உதாரணங்களையும் கூறி சிவராமனுக்கு நீண்ட விளக்கம் கொடுக்க முயற்சி செய்தேன். இருப்பினும் புரிந்து கொள்ளும் பக்குவம் சிவராமனுக்கு இல்லை என்பது தெளிவாகியது. இத்துடன் அமர்வை நிறுத்தி தலைவரையும் சிவராமனையும் மீண்டும் சந்திப்பதாகக் கூறி அனுப்பி வைத்தேன்.

அடுத்தநாள் சிவராமனின் அம்மா செல்லம்மாவை அழைத்திருந்தேன்.

"வாருங்கள் செல்லம்மா உட்காருங்கள்.

நேற்று உங்கள் மகன் சிவராமன் ஏதாவது சொன்னாரா?"

"ஓம். நீங்கள் கூப்பிட்டுக் கதைச்சீங்களாம் என்று சொன்னான். எம் புள்ள குழந்தைப் பயல். அவனை எப்பிடியோ மயககிப் போட்டாள்.

### எஸ்.பி.லெம்பட் வங்காலை

அவன் பிடிவாதம் புடிச்சதாலேயும், ஒரே புள்ள தற்கொலை ஏதும் செய்திடுவானென்ற பயத்திலே கல்யாணம் முடித்துக் கொடுத்தேன். முடித்து 8 மாதத்திலேயே விட்டுட்டு வந்திட்டான். விருப்பமில்லாத பயல எப்படிங்க சேர்த்து வைக்கிறது. இப்ப அவனுக்குக் கலியாண வயசும் இல்ல. இன்னும் 5 வருசம் போன பிறகு நல்ல பெண்ணைப் பார்த்துச் செய்து வைக்கலாம் என்று நினைக்கிறேன்." என்று மூச்சு விடாமல் சொல்லி முடித்தாள் செல்லம்மா.

"செல்லமம்மா! சிவராமனுக்கு கல்யாண வயதில்லை, இன்னும் 5 வருடத்திற்கு பிறகு முடிச்சு வைக்கலாம் என்று நீங்கள் சொல்வது சரி. றஞ்சனிக்கும். குழந்தைக்கும் என்ன முடிவு? றஞ்சனி உங்கள் மகளாக இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? நாமெல்லாம் இலங்கைத் தமிழர்கள், அகதிகள், ஒரே குடும்பமாக வாழ வேண்டியவர்கள். நமது பிள்ளைகளைப் போல் மற்றவர் பிள்ளைகளையும் பார்ப்பதுதான் ஒரு தாயுடைய பண்பாக இருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன்" என்றேன்.

தொடர்ந்து வரும்...

## அண்டை மண்டலத்திலிருந்து...

# குஜராத்தின் எதிரொலி தமிழகத்தில்?

குஜராத் மாநிலத்தில் பாரதீய ஜனதா இமாலய வெற்றி பெற்றிருக்கிறது. சட்டமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை உண்மையிலேயே வரலாறு காணாத வெற்றி. இந்துத்துவம் இப்படி ஆர்ப்பரித்து எழும் என எவருமே கணிக்க முடியவில்லை. கடந்த மார்ச் மாதம்தான் அங்கே ரணகளம். ஏறத்தாழ இரண்டாயிரம் முஸ்லிம்கள் கொன்று குவிக்கப்பட்டனர். மேலும் பல்லாயிரம் மக்கள் தங்கள் உடைமைகளை இழந்து அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்தனர்.

இத்தனைக்குப் பிறகும் பெருமளவில் குஜராத் மக்கள் திரண்டு வந்து, கலவரத்தின்போது முதல்வராயிருந்த நரேந்திர மோடிக்குத் தங்கள் ஏகோபித்த ஆதரவைத் தெரிவித்திருக்கின்றனர்.

தொடர்ந்து தோல்விகளையே சந்தித்து வந்து கொண்டிருந்த பாரதீய ஜனதாவிற்குப் புதியதொரு உற்சாகம், இரண்டாண்டுகளில் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல்களில் தனியாக இல்லாவிட்டாலும் கூட, தேசிய ஜனநாயகக் கூட்டணியாகவாவது வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிவிடலாம் என்ற நம்பிக்கை அவர்கள் மத்தியில் துளிர்த்திருக்கிறது.

கூடவே நடந்த அண்டை மாநிலமான ராஜஸ்தான் சட்டமன்ற இடைத் தேர்தல் நடைபெற்ற மூன்று தொகுதிகளிலும் பா.ஜ.க. வெற்றி பெற்றது. சங்க பரிவாரத்தினர் ஆனந்தக் கூத்தாடிக் கொண்டிருக்கின்றனர்.

குஜராத்தில் இரண்டாண்டுகளுக்கு முன்புதான் நரேந்திர மோடி முதல்வரானார். அதுவரை முதல்வராக இருந்த கேசுபாய் படேலின் நிர்வாகம் மக்களின் வெறுப்பையே சம்பாதித்திருந்தது, இடைத் தேர்தல்களில் தோல்விகளையே சந்தித்து வந்த பா.ஜ.க. கலக்கமுற்று சங்க பரிவாரத்தினரின் முடிவின்படியே மோடி அங்கு முதல்வராக்கப்பட்டார். அதற்குப் பிறகும் ஓராண்டிற்கு மேல் நிலைமை திருந்துவதாயில்லை. உள்ளாட்சித் தேர்தல்களில் படுதோல்வியடைந்தது பாரதீய ஜனதா.

இந்தப் பின்னணியிலேயே கடந்த பிப்ரவரி 27ஆம் நாள் கரசேவகர்கள் வந்த ரயில் பெட்டி கோத்ராவில் தீக்கிரையானது. ஐம்பதிற்கும் மேற்பட்டவர்கள் எரித்துக் கொல்லப்பட்டனர். உடனேயே கலவரம் மூண்டது.

மோடி அரசு திட்டமிட்டு வன்முறைகளை அரங்கேற்றியது எனச் சிலர் கருதுகின்றனர். இல்லை! இல்லை! சிறுபான்மையினர் மீது பல்வேறு காரணங்களினால் வெறுப்புற்றிருந்த இந்துக்களின் கோபத்தின் இயற்கையான வெளிப்பாடே அந்தக் கலவரம், மோடி கண்டும் காணாமல் இருந்தார் என்று வேண்டுமானால் கூறலாம் என்கின்றனர் வேறு சிலர்.

எப்படியோ மத ஆசாரங்களைக் கூர்மைப்படுத்தி, பிளவை அதிகப்படுத்தி, கலவரத்தைத் தூண்டிவிட்டதால், இலாபம் மதத் தீவிரவாதிகளுக்கே.

தவிரவும் உலகமயமாதலின் விளைவாக நாட்டில் பொருளாதார நெருக்கடி, அத்தகைய சூழலில் மிகச் சிறிய பிரச்சினைகளென்றாலும், பெரும்பான்மை இந்துக்கள் மற்ற மதத்தவர் மீது பாயத் தயாராய் இருக்கின்றனர்.

இந்துமதவாதம் பேசுவதே சரியென்ற மனநிலைக்கு வந்து கொண்டிருக்கின்றனர் என்பதே குஜராத் முடிகள் தெரிவிக்கும் செய்தி.

இந்துத்துவத்தின் பரிசோதனைக் கூடம் குஜராத் என்றுதானே பத்திரிகைகள் எழுதின. வெற்றி பெற்றுவிட்டோமே, இனி அடுத்த ஆண்டு தேர்தல்கள் நடக்கவிருக்கும் மாநிலங்களில் இந்து மதத்தின் பெயராலேயே வாக்குகள் கேட்போம். இன்னும் இரண்டாண்டுகளில் இந்தியா இந்து நாடாக அறிவிக்கப்பட்டுவிடும் என்று பிரகடனமே செய்திருக்கிறார் விஸ்வஹிந்து பரிஷத்தின் தலைவர் பரவீண் டொகாடியா.

காங்கிரஸும், மதச்சார்பின்மையில் நம்பிக்கை கொண்டுள்ள பத்திரிகைக்காரர்களும், அறிவுஜீவிகளும் ஆடிப்போயிருக்கிறார்கள்.

அதே காரணங்களினாலேயே தமிழகத்தில் ஜெயலலிதா இப்போது இரட்டிப்புத் தெம்புடன் வலம் வருகிறார்.

குஜராத் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடனேயே சூட்டோடு சூடாக மோடிக்குத் தனது வாழ்த்தினைத் தொலைபேசி மூலமாக அறிவித்தவர் அவர்தான்.

பல்வேறு தடைகளையும், பத்திரிகைகள், தொலைக்காட்சி சானல்கள் மற்றும் தேர்தல் கமிசன் ஆகியவற்றின் கடும் எதிர்ப்பினையும் மீறி, பெரும் வெற்றி பெற்றுவிட்டீர்கள் என்று தனது மகிழ்ச்சியினைத் தெரிவித்துவிட்டு அந்த வாழ்த்தினைப் பத்திரிகைகளுக்கும் தொலைக்காட்சிகளுக்கும் அறிவித்திருக்கிறார். ஏற்கெனவே பல முறை நாம் குறிப்பிட்டிருப்பது போல், இந்து மதத்தின் மீதும், பல்வேறு சம்பிரதாயங்கள் மீதும் தீவிர நம்பிக்கை உடையவர் ஜெயலலிதா. காஞ்சி சங்கராச்சாரியாருக்கு நெருக்கமானவர். அவர் மூலமாகப் பாரதீய ஜனதாவிற்குத் தூது விட்டுக் கொண்டிருப்பவர். 1992ல் அயோத்தியில் இந்துக்களின் உணர்வை மதித்து அங்கே அவர்கள் கோயில் கட்ட அனுமதிக்கப்பட வேண்டும் என வாதாடியவர்.

தற்போது மதமாற்றத் தடைச் சட்டத்தினை இயற்றி சங்க பரிவாரத்தினரை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியிருக்கிறார். திராவிடக் கட்சி என்று கூறிக் கொண்டாலுங் கூட அந்தப் பரிவாரத்தினரின் இயற்கையான கூட்டாளி ஜெயலலிதா என்றால் அது மிகையாகாது. தீண்டத் தகாதவர்களாகக் கருதப்பட்டு வந்த பாரதீய ஜனதாவுடன் முதலில் கூட்டணி அமைத்ததே ஜெயலலிதாதான். அவருக்குப் பிறகே அகில இந்திய அளவில் மற்ற மதச்சார்பற்ற கட்சிகள் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்துக் கொள்ள முன்வந்தன.

கடந்த வாரம் நடந்து முடிந்த அ.இ.அ.தி.மு.க. பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்களில் ஒன்று, இந்து மதத்தினரின் மனதைப் புண்படுத்தும் வகையில் தொடர்ந்து பேசி வரும் குற்றத்திற்காக கருணாநிதியைக் கைதுசெய்ய வேண்டுமென்பதுதான். மற்றத் தீர்மானங்களெல்லாம் வழக்கம் போல ஜெயலலிதாவிற்கு வாசித்தளிக்கப்பட்ட வாழ்த்துப்பாக்கள்தான்.

எத்தனையோ காரணங்களுக்காப் பொதுக்குழு கருணாநிதியைத் தாக்கியிருக்கலாம். ஆனால் சமீப காலமாக அவர் இந்து மத நம்பிக்கைகளை ஜாடைமாடையாக விமர்சனம் செய்து வருவததைக் குறிப்பிட்டு அவரைக் கைது செய்ய அ.இ.அ.தி.மு.க. கோரியிருக்கிறது. எதிர்வரும் காலங்களில் எந்தக் கோணத்திலிருந்து அது அ.தி.மு.க.வை நெருக்கப் போகிறதென்பதற்கு இதை விடவும் வேறு சான்று தேவையில்லை.

கருணாநிதியோ மத மாற்றத் தடைச் சட்டம் வந்த நாளிலிருந்தே பழைய திராவிடக் கழகப் பாணியினை மேற்கொள்ளத் துவங்கிவிட்டார். சிறுபான்மையினர் நடத்திய பொதுக் கூட்டத்தில் தேவையில்லாமல் இந்து என்றால் திருடன் என்றார். பிறகு இந்து மதம் என்ற மதமே கிடையாது என்றார்.

விமர்சனம் எழுந்தபோது, மறைந்த காஞ்சி சங்கராச்சாரியார் சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், மறைந்த காங்கிரஸ் தலைவர் கமலாபதி திரிபாதி வெளியிட்ட கலைக்களஞ்சியம், பெரியார் பொன்மொழிகள் போன்றவற்றை ஆதாரமாகக் காட்டினார் கருணாநிதி.

அ.இ.அ.தி.மு.க. பொதுக்குழுத் தீர்மானத்திற்குப் பிறகு, பேராசிரியர் அன்பழகனின் 81வது பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு பேசுகையில், மீண்டும் இந்து பிரச்சினையைக் கையில் எடுத்துக்கொண்டு, அண்ணா வழியில் மூகாம்பிகை கோயிலுக்குச் சென்றேன்; பெரியார் கொள்கைப்படி குருவாயூர் கோயிலுக்கு யானை காணிக்கை அளித்தேன் எனக் கூறி அவர்களை அசிங்கப்படுத்த வேண்டாம். எங்களைச் சிறையில் தள்ளுவதைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் பெரியார், அண்ணாவை அசிங்கப்படுத்துவதை எங்களால் பொறுத்துக் கொள்ள முடியாது என எச்சரித்தார்.

என்ன செய்வார் என்பதை அவர் கூறவில்லை. குஜராத்தில் பெரும் கலவரம் மூண்டபோது, குறுக்கிட்டு நிலைமையைச் சீர் செய்யத் தவறிய மத்திய அரசை எதிர்த்துத் தீர்மானம் வந்தபோது, அதற்கெதிராக ஏன் தி.மு.க. வாக்களித்தது என்றோ அல்லது கலவரத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லீம்களுக்கு ஆறுதலாக ஏன் குரல் கொடுக்கவில்லையென்றோ, மோடியின் வெற்றி இந்துத்துவாவின் வெற்றி என முழக்கமிடும் சங்க பரிவாரத்தினரை ஏன் கண்டிக்கவில்லையென்றோ அவர் எந்த விளக்கமும் தரவில்லை.

பா.ஜ.க.வைக் கண்டிக்கத் துணிச்சலில்லாமல் ஜெயலலிதாவை மட்டும் ஏசுவது, மறுபடி மறுபடி தேவையில்லாமல் இந்துக்களை வம்புக்கிழுப்பது, இப்படிச் செய்வதன் மூலம் அவரால் தான் இழந்த செல்வாக்கினை மீட்டுவிட முடியுமா என்று தெரியவில்லை.

சிறுபான்மையினரை ஆதரிப்பதாகச் சொல்லிக்கொண்டு பெரும்பான்மையினரைக் கேலி செய்வது சிறுபான்மையினரில் விசமிகள் செய்யும் சமூக விரோத காரியங்களை நியாயப்படுத்துவது போன்ற அணுகுமுறைகளினால் தான் பா.ஜ.க. பல இடங்களில் வளர்ந்து வருகிறது. தமிழகத்தில் பா.ஜ.க.விற்குச் செல்வாக்கு இல்லையெனினும், அ.இ.அ.தி.மு.க. அதன் கொள்கையை ஏதோ ஒரு விதத்தில் பரப்பிக்கொண்டிருக்கும் வேளையில், கருணாநிதியின் தற்போதைய நிலைப்பாடு எந்த அளவு எதிர்மறை விளைவுகளை உருவாக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆனால் ஜெயலலிதா, கருணாநிதி இருவருமே நெருப்புடன் விளையாடுகிறார்கள் என்பது மட்டும் உண்மை.

**கானகன்**

# கிழக்கில் நடைபெறும் ஆட்கடத்தல்- கொலைகள்

யுத்த நோக்கங்களுக்காகச் சிறுவர்களைக் கடத்துவதும், பணம், பொருளுக்காக வர்த்தகர்கள், அரச உத்தியோகத்தர்கள், வெளிநாடு சென்று திரும்பியோர், அவர்களின் உறவினர்கள், மீனவர்கள், விவசாயிகள் கடத்தப்படுவதும் எமது வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அன்றாட நிகழ்வாகியுள்ளது. கிழக்கில் முஸ்லீம் மக்கள் மத்தியில் எழுந்த அச்சம், பதற்றம் கூடப் பிரதானமாக இந்த ஆட்கடத்தலினாலேயே ஏற்பட்டன.

சிறுவர்கள் யுத்தத்திலீடுபடுத்தப்படுவது தொடர்பாக ஐ.நா. சபை பல தடவை விசனம் தெரிவித்துள்ளது. ஒலரா ஒட்டுனு அவர்களின் அண்மைய அறிக்கையில் கூட, சிறுவர்களை ஆயுதப் படைகளுக்காக அணி திரட்டுவது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கட்டாய ஆட்திரட்டல் இவ்வருட முற்பகுதியிலிருந்து இறுதிப்பகுதிவரை தீவிரமாக நடைபெற்றுள்ளது. மட்டக்களப்பு மாவட்டம் இதனால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. சிறுவர் சிறுமியர் பயிற்சி முகாம்களிலேயே மரணிப்பது, தப்பி வரும்போது கொல்லப்படுவது சர்வதேச, உள்ளூர் மனித உரிமை அமைப்புக்களின் அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அறிக்கைகளில் அவை ஆதாரங்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளன.

கடத்தப்பட்ட சிறுவர், சிறுமியர் தப்பியதற்காக தமது பிள்ளைகளைத் தர மறுத்ததற்காகப் பெற்றோர்கள் பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள். சில பெற்றோர் கடத்தப்பட்டிருக்கிறார்கள். அல்லது தமது சொந்த வீடு வாசல்களை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். அல்லது பணம் கேட்டு மிரட்டப்பட்டிருக்கிறார்கள். இல்லையேல் கால்நடைகள் ஓட்டிச் செல்லப்படுகின்றன. வயல் நிலங்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன.

மட்டக்களப்பு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால் எதையுமே செய்ய முடியவில்லை. இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழுவின் நிலையும் இதுதான்.

மாற்று அரசியல் கருத்துக் கொண்டோர், மாற்று அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வருட முற்பகுதியிலிருந்து பரவலாகக் கடத்தப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாது. புலிகளால் கடத்தப்பட்ட தமது கணவர்களை விடுவிக்கக் கோரி மனைவிமார் மட்டக்களப்பு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

அண்மையில் இந்த ஆட்கடத்தல் தீவிரமடைந்துள்ளது, ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட் ஆகிய பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் கடத்தப்பட்டுள்ளனர். இவர்களில் பிரதேச சபை உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் போன்றவர்களும் அடக்கம்..

ஆனால் புலிகள் இந்த ஆட்கடத்தல்கள் தொடர்பாக ஒரே மாதிரித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதாவது சமாதானத்தைக் குழப்ப முயலும் சத்திகளின் சதி என அவர்கள் சொல்கிறார்கள். இது ஒரு வசதியான, ஆபத்தான முடுதிரையாகும்

இப்படி ஒரு வசதியான வார்த்தைப் பிரயோகத்தைப் புலிகள் தெரிவு செய்து வைத்திருப்பது வடக்கு-கிழக்கில் மாற்று அரசியல் சத்திகளை மாத்திரமல்ல வேறுபட்ட அபிப்பிராயம் கொண்ட சகலரையும் வேரறுக்கும் நடவடிக்கையின் ஓரங்கமாகும். சமூகத்தில் மாற்று அபிப்பிராயங்களை இல்லாதொழிப்பது முதலில் அரசியல் தளத்திலாகும். அந்த நோக்கத்திற்காகவே நெடுந்தீவிலிருந்து ஈ.பி.டி.பி.யினரை வெளியேற்றுவதற்கான சதி மக்களின் பேரில் அரங்கேற்றப்பட்டுள்ளது.

**கிழக்கான்**

புலிகளினால் கடத்தப்பட்ட வெல்லாவெளிப் பிரதேச சபையின் உறுப்பினர் பூபாலபிள்ளை அழகுதுரையின் சடலம் மண்டூர் வாவியிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை எதிர்காலத்தில் நிகழப்போகும் பயங்கரத்தைக் கோடிட்டுக் காட்டுகிறது. இது மற்றவர்களை அச்சுறுத்துவதற்குச் செய்யப்பட்ட நடவடிக்கையாகும்.

சமாதானம் என்பது மனித உரிமையையும் ஜனநாயகத்தையும் உள்ளடக்கியதே.

சிறுவர்களைப் பலாத்காரமாக இணைத்துக் கொண்டு, மாற்று அரசியல் கட்சிகள், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கெதிராகக் கொலைப் பயங்கரத்தைக் கட்டவிழ்த்து விட்டுக்கொண்டு இங்கு சமாதானத்தை- மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றலாம் என்று கூறுவது முரண்பாடானதாகும்.

ஏகபிரதிநிதித்துவம் என்ற கருத்தை வலியுறுத்துவது நெடுந்தீவை விட்டு ஈ.பி.டி.பி.ஐ வெளியேற்றுவதற்கான சதி முயற்சிகளில் ஈடுபடுவது, கிழக்கில் மாற்று அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களைக் கடத்துவது, படுகொலை செய்வது என்பன பாசிசத்தின் தெளிவான அறிகுறிகளாகும். எதிர்காலத்தில் கொலைப் பயங்கரங்கள் நிறைந்த பாசிச ஆட்சியா அல்லது மனித உரிமை, பன்முகத்தன்மை உறுதிப்படுத்தப்பட்ட ஜனநாயக ஆட்சிமுறையா ஏற்படுத்தப்படப்போகிறது என்பதைச் சர்வதேச சமூகம்தான் உறுதிப்படுத்த வேண்டும்.

# ஆடிய ஆட்டமென்ன...?

நீண்ட காலமாக மைக்கல் ஜக்சனின் முகத்தை குளோசப்பில் போட்டோ எடுக்கும் சந்தர்ப்பம் பத்திரிகையாளர்களுக்குக் கிடைக்கவில்லை. அண்மையில் வழக்கு ஒன்றின் நிமித்தம் நீதிமன்றத்திற்கு வந்த மைக்கல் ஜக்சன் வழமையாகத் தனது முகத்தை மூடிக்கொண்டிருக்கும் துணியை விலக்கிச் சாட்சியமளித்தார். இதன்போது ஜக்சனின் முகத்தை நெருக்கமாகப் பார்த்த பலருக்கும் பேரதிர்ச்சி. இது மைக்கல் ஜக்சன் தானா? என்று நம்ப முடியாத அளவுக்கு அவர் அலங்கோலமான நிலையில் இருக்கிறார்.

கண்கள் சிவந்து, மூக்கின் ஒரு பகுதி காயம் போன்று சிதைவடைந்து, முகம் முழுவதும் ஒரு வெளிறிய தோற்றத்துடன் மரணப் படுக்கைக்குச் சமீபமாக உள்ள ஒரு நோயாளியை நினைவு கூருகிறது ஜக்சனின் முகம்.

மைக்கல் ஜக்சன் ஆபத்தானதொரு நோய்க்கட்டத்தில் இருக்கிறார் என அவரது குடும்பத்தினர் அச்சம் கொண்டுள்ளனர். ஜக்சனின் தவறான பழக்கவழக்கங்கள் அவரை இந்த நிலைக்குத் தள்ளியிருப்பதாகவே பலரும் கூறுகின்றனர்.

இசை நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்வதாக ஒப்புக்கொண்டு அதில் கலந்துகொள்ளாததினால் தனக்கேற்பட்ட நட்டத்தை மைக்கல் ஜக்சனிடமிருந்து பெற்றுத் தருமாறு கோரி கலிபோர்னியா நீதிமன்றத்தில் ஒருவரினால் தொடுக்கப்பட்ட வழக்குக்காகவே மைக்கல் ஜக்சன் சாட்சியமளிக்க வேண்டி ஏற்பட்டது.

மைக்கல் ஜக்சனின் உடலின் பல இடங்களிலும் காயங்கள் போன்ற தழும்புகள் இருப்பதைப் பத்திரிகையாளர்கள் கண்டுள்ளனர். காலிலுள்ள ஒரு காயத்தை மட்டும் காட்டிய ஜக்சன், வீட்



டில் இருக்கும்போது தன்னைப் பூரான் கடித்துவிட்டதாகச் செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறார். ஆனால் உண்மை அதுவல்ல என இப்பொழுது ஜக்சனுக்கு நெருக்கமானவர்கள் கூறி வருகிறனர். அவர் டெமரோல் என்ற ஒரு வகைப் போதை மருந்துக்குப் பயங்கரமாக அடிமையாகியுள்ளதால் அதன் தாக்கம் உடல் முழுவதையும் மோசமாகப் பலவீனப்படுத்தியிருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

ஜக்சன் பல முறை முகத்தில் பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை செய்து கொண்டார். ஆரம்பத்தில் கறுப்பின இளைஞராக இருந்து பின்னர் தன் முகத்தை வெள்ளையாக மாற்றிக் கொண்டார். அவர் ஒரு அலி என்றும் பின்னர் ஆணாக மாறினார் என்றும் கூறப்படுவதுண்டு. எவ்வாறெனினும் பல முறை முகத்தில் சத்திர சிகிச்சை செய்த நிலையில் போதைப் பொருளுக்கும் அடிமையாகியதால் இப்போது ஜக்சனின் உருவ அமைப்பு மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது. இத்தனைக்கு மத்தியிலும் அவர் எவ்வித மருத்துவ சிகிச்சையையும் பெற்றுக்கொள்ள மறுப்பதுதான் குடும்பத்தினரை இன்னும் எரிச்சலடைய வைத்திருக்கிறது.

ஜக்சனின் விருப்பங்களை நிறைவேற்றிக் கொடுக்க இரசிகர்கள் தயாராக இருப்பதால் அவர் எதைப் பற்றியும் கவலைப்படாத ஒரு நிலையில் இருப்பதாகவும் இதனாலேயே தனது உடல் நலம் குறித்தும் அக்கறை செலுத்துவதில்லை என்றும் ஜக்சனின் குடும்பத்தினர் கூறுகின்றனர். அவர் திடீரென ஒரு நாள் வீட்டுக்குள் செத்துக் கிடக்காமல் இருந்தால் போதுமென்பதே இப்போதைய விருப்பம் என்கிறார்கள்.

44 வயதான மைக்கல் ஜக்சன் சில ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் செய்து ஒரு குழந்தைக்கும் தந்தையானார் என்பதும் குறிப்பிடத் தக்கது. □

## புற்றுநோய் பாதித்த கல்லீரலை வெளியே எடுத்து கதிர்வீச்சு சிகிச்சை
## இத்தாலி டாக்டர்கள் அற்புத சாதனை

புற்றுநோய்க்குச் சிகிச்சை அளிப்பதில் இத்தாலி நாட்டு டாக்டர்கள் புதிய வரலாறு படைத்துள்ளனர். ஓராண்டுக்கு முன் நிகழ்த்திய இச் சாதனையை, நோயாளி எப்படித் தேறுகிறார் என்று பொறுமையாகப் பார்த்து திருப்தியடைந்த பிறகே வெளியுலகுக்கு அறிவித்துள்ளனர்.

48 வயது நிரம்பிய அந் நோயாளிக்குப் புற்றுநோய் முற்றிவிட்டது. 2001 டிசம்பர் மாதம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருடைய கல்லீரலை அப்புறப்படுத்தி, அணுக் கதிர்வீச்சு சிகிச்சை அளித்து மீண்டும் உடலில் பொருத்திப் பார்த்தால் என்ன என்று டாக்டர்கள் சிந்தித்தனர். உடனே அருகில் உள்ள அணு ஆராய்ச்சி நிலைய அதிகாரிகளிடம் விசயத்தைச் சொல்லி அவர்களின் ஒப்புதலை வாங்கினர்.

நோயாளியை அறுவைச் சிகிச்சைக் கூடத்துக்குக் கொண்டு சென்று, அவருடைய உடலிலிருந்து கல்லீரலைத் தனியாகப் பிரித்தெடுத்தனர். பிறகு அதில் ஒரு அமினோ அமிலத்தை ஊசி மூலம் செலுத்தினர். சாதாரண செல்களைவிட, புற்றுநோய் பாதித்திருந்த செல்கள் அந்த அமிலத்தை ஆறு மடங்கு உறிஞ்சிக் குடித்தன. பிறகு ஒரு நொடியும் தாமதிக்காமல் அதை அருகில் உள்ள அணு உலைக்குக் கொண்டு சென்றனர். அங்கு தொடர்ந்தாற் போல 11 நிமிடங்கள் அணுக் கதிர்களை அந்தக் கல்லீரல் மீது பாய்ச்சினர். பிறகு நோயாளியும் தேறலானார். வேறு ஏதாவது பின் விளைவு ஏற்படுகிறதா என்று தொடர்ந்து கண்காணித்து வந்த டாக்டர்கள் இப்போது இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

கல்லீரல் மட்டுமல்ல, சிறுநீரகம், கணையம், நுரையீரல் என்று உடலில் பிரித்தெடுக்கக் கூடிய எந்த உள் உறுப்பிலும் இவ்விதம் புற்றுநோயைப் போக்கும் கதிரியக்கச் சிகிச்சையை மேற்கொள்வது எளிது என்பதை இது காட்டுகிறது என மருத்துவர்கள் கூறுகின்றனர். ○

# இன்டர்நெட் காதல்கள்

## லைசென்ஸ் பெற்ற ஆன்லைன் காதல்

எனக்குத் திருமணம் ஆன பிறகுதான் காதலே ஏற்பட்டது! என் கணவர் அமெரிக்காவில் இன்ஜினியரிங் படித்துக் கொண்டிருந்தார். நான் பி.ஏ. பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருந்தேன். அவருக்கு 26 வயது, எனக்கு 21.

அவர் ஜாதகத்தைப் பார்த்த ஜோசியர், பையனுக்கு அந்த வருடத்திற்குள் திருமணம் செய்து வைக்கவில்லை என்றால் அவனுக்கு 35 வயதுக்குப் பிறகுதான் திருமணம் நடக்கும் என்று சொல்லிவிட்டார். அவர் எனக்குத் தூரத்து உறவு. அதற்கு முன்பு நாங்கள் மிகச் சின்ன வயதில்தான் நேரில் பார்த்திருக்கிறோம். எங்கள் இருவருக்குமே அது ஞாபகம் இல்லை.

நான் தொடர்ந்து படிப்பதில் என் மாமனார், மாமியாருக்கு ஆட்சேபனை இருக்கவில்லை. எங்களுக்குத் திருமணம் நடந்த இரண்டு வாரங்களில் அவர் அமெரிக்காவுக்குக் கிளம்பிவிட்டார்.

அந்த இரண்டு வாரங்களில் நாங்கள் அதிகம் பேசிக்கொள்ளவில்லை. எங்கள் திருமணத்திற்கு வந்திருந்த உறவினர்கள் விவஸ்தை கெட்டதனமாக எங்கள் வீட்டில் டேரா போட்டிருந்தார்கள்.

அவர் போன பிறகு அங்கிருந்து வாரம் ஒரு முறை ⁛போன் செய்து என் மாமனார், மாமியாருடன் பேசுவார். என்னைப் பற்றி அவர் விசாரிக்கக் கூட மாட்டார். அவர்கள்தான் என்னிடம் ⁛போனைக் கொடுப்பார்கள். ஒரு முறை அவர் "ஈ-மெயில் அனுப்ப, சாட் செய்யக் கற்றுக் கொள், நாம் ⁛போனில் பேச வேண்டாம்" என்று என்னிடம் சொன்னார்.

நான் என் நண்பிகள் மூலம் ஒரே நாளில் இன்டர் நெட்டைக் கற்றுக் கொண்டேன். அவர் நச்சரிப்பில் என் மாமனார் எனக்கு கம்ப்யூட்டரும் இன்டர்நெட் இணைப்பும் வாங்கிக் கொடுத்தார்.

நான் என் கணவருக்கு அனுப்பிய முதல் ஈ-மெயில் இப்போது கூட எனக்கு நினைவிருக்கிறது. "Hello, how are you? We are all fine here. Take care. Please reply" என்று எழுதினேன். கொஞ்சம் தயங்கிவிட்டு "With love" என்று சேர்த்துக் கொண்டேன். அவர் நேரில் இல்லாததால் என் கூச்சம் குறைந்திருந்தது.

அதற்குப் பிறகு முதல் முறையாக ஒரு 'இன்ஸ்டன்ட் மேசஞ்சர்' மூலம் அவருடன் சாட் செய்தேன். "என்ன, கல்யாணம் ஆகி ஒரு மாசத்துக்குள்ள புருஷன்கிட்ட லவ்வா?" என்று அவர் கிண்டலடித்தார்! இன்டர்நெட்டைக் கற்றுக் கொள்ளும்போது என் தோழிகளோடும் உறவினர்களோடும் சாட் செய்திருக்கிறேன். ஆனால் இந்த அளவுக்கு அதை இரசித்ததில்லை.

அவர் நேரில் இல்லாதது எனக்குத் தைரியம் கொடுத்தது. நாங்கள் இருவரும் ஒருவரைப் பற்றி ஒருவர் முழுமையாகத் தெரிந்து கொண்டோம். நாங்கள் நல்ல நண்பர்கள் ஆனோம். கணவன்-மனைவி என்ற உறவு முதலில் எங்கள் சாட்டில் வெளிப்படவில்லை.

இன்டர்நெட் எனக்குப் புதிது என்பதால் என் ஈ-மெயிலிலும் சாட் உரையாடல்களிலும் நிறைய தப்பு செய்வேன். அவர் இன்டர்நெட் புலி என்பதால் அந்தத் தவறுகளைச் சுட்டிக் காட்டி என்னை ஓயாமல் கிண்டல் செய்து கொண்டிருப்பார். ஒரே மாதத்தில் நாங்கள் நெருக்கமாகிவிட்டோம்.

அவருடன் சாட் செய்வது, அவர் மெயிலைப் படிப்பது எல்லாம் எனக்குப் புல்லரிப்பான அனுபவங்களாக இருந்தது. என் முதல் காதல் அது! அதற்குப் பிறகுதான் நாங்கள் ஒருவரிடம் ஒருவர் நிறைய உரிமை எடுத்துக் கொண்டு பேசினோம்.

அவர் தன் அலுவலகத்தில் இருக்கும் தங்க நிறக் கூந்தல் உள்ள சக ஊழியர்களைப் பற்றி "ஆஹா ஓஹோ" என்று புகழ்ந்து தள்ளுவார். முதலில் அவர் என்னைப் பொறாமைப்பட வைக்க முயற்சி செய்கிறார் என்று எனக்குப் புரியவில்லை. நான் அப்பாவித்தனமாய் "ஓஹோ!" என்று மேலும் விவரங்கள் கேட்பேன். அவர் எரிச்சல் ஆகி அவர்களைப் பற்றிப் பேசுவதை நிறுத்திவிட்டார்!

திடீரென்று ஒரு நாள் எனக்கு ஏ ஜோக் ஒன்றை மெயிலில் அனுப்பினார். சொல்லவே வாய் கூசுகிற மாதிரி அவ்வளவு பச்சையான ஜோக்கை அவர் அனுப்பியிருந்தார். சூப்பர் ஜோக் அது!

அவர் அதை அனுப்பிய அன்று சாட் செய்தபோது "நான் அனுப்பிய ஜோக்கைப் படித்தாயா?" என்று கேட்டார். "கிடைக்கவில்லையே" என்றேன் நான். "ஓ.கே., நான் அதை மீண்டும் அனுப்புகிறேன்" என்றவர், சில நொடிகள் கழித்து, "மெயில் செக் செய்து பார்" என்றார். அப்போதும் "எனக்குக் கிடைக்கவில்லை" என்றேன்.

அவர் திருப்பித் திருப்பி எனக்கு அந்த ஜோக்கை அனுப்பிக் கொண்டே இருந்தார்! நான் விடாமல் "வரவில்லை" என்றே சொல்லிக் கொண்டிருந்தேன்!' "என்ன, விளையாடுகிறாயா? பின்னிடுவேன்" என்றார் என் கணவர். நான் தயங்காமல் "போடா!" என்றேன்!

அவர் அந்த ஜோக்கை சாட்டிலேயே சொல்ல ஆரம்பித்துவிட்டார்! எனக்குத் தப்பிக்க வழி இல்லாமல் போனது. "ஜோக் நன்றாக இருக்கிறது" என்று சொல்லித் தொலைத்தேன்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகுதான் அவர் நாங்கள் கணவன்-மனைவி என்பதை எனக்கு அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தார். அவர் ஓவராகக் கொஞ்சுவதெல்லாம் அப்போதுதான் ஆரம்பித்தது.

இந்த விளையாட்டை எல்லாம் அவர் நேரில் செய்திருந்தால் எனக்கு வெட்கம் பிடுங்கித் தின்றிருக்கும். இன்டர்நெட்டில் எனக்குக் கூச்சமே இல்லாமல் போனது. பிறகு நாங்கள் சைபர் செக்ஸ் வரை போய்விட்டோம். அது கூட முதலில் எனக்குத் தர்மசங்கடமாகவும் வேடிக்கையாகவும் இருந்தது. அப்புறம் பழகிவிட்டது.



நாங்கள் இன்டர்நெட்டிலேயே எல்லா விதத்திலும் இணைபிரியாதவர்கள் ஆனோம். ஈ-மெயிலில் அவர் அனுப்பிய அவரது புகைப்படத்தை ஒரு நாளுக்கு நான்கைந்து தடவையாவது பார்க்கவில்லை என்றால் எனக்கு அன்று தூக்கம் வராது!

நேரில் சந்திக்க நாங்கள் இருவருமே அவசரப்பட்டோம். நாங்கள் இன்டர்நெட்டில் பழகத் தொடங்கிச் சரியாக மூன்று மாதங்கள் கழித்துத் திரும்பி வந்தார், என்னை அங்கே அழைத்துப் போக! அதற்குள் நான் பி.ஏ. பட்டம் பெற்று கரஸ்பான்டென் சில் எம்.ஏ. படிக்கத் தயாராகிக் கொண்டிருந்தேன்.

நாங்கள் சந்தித்தபோது நீண்ட காலம் பிரிந்திருந்து சந்திப்பது போல்தான் இருந்தது. எங்கள் நெருக்கம் நாங்கள் நேரில் பழகாமலே ஏற்பட்டிருந்தது. நாங்கள் வழக்கமான கணவன்-மனைவி போல ஒன்றாக வாழ்ந்திருந்தால் அது நடந்திருக்காது. மூன்று மாதங்களுக்குள் இவ்வளவு காதல் எங்களுக்கிடையில் ஏற்பட்டிருக்காது.

எனவே திருமணம் ஆன பிறகு பிரிந்திருப்பவர்களுக்கு என் அட்வைஸ் இதுதான்-இன்டர்நெட் மூலம் உங்கள் உறவை வளர்த்துக் கொள்ளுங்கள். அது எவ்வளவு அற்புதமான விசயம் என்று புரிந்து கொள்வீர்கள். □

# தலைமுறை இடைவெளியா? தலைவலியா?



இன்றைய சமுதாய கட்டமைப்பில் தலைமுறை இடைவெளி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இளைய தலைமுறையினரின் வேகமான சிந்தனைகளையும், மூத்த தலைமுறையினரின் விடாப்பிடிக் கொள்கைகளையும் இணைக்கும், பாலம் கட்டும் முயற்சியில் இருவருமே ஈடுபடாமல் இருப்பதுதான் இடைவெளிக்குக் காரணம்.

கீழே இருக்கும் 6 விசயங்கள் இரு பிரிவினருக்கும் இடையே உறவுப் பாலம் அமைக்கப் பெரிதும் கைகொடுக்கும்.

(அ) உங்கள் விமர்சனங்களையும் பாராட்டுக்களையும், வார்த்தைகளாகச் சொல்லுங்கள்.

(ஆ) சிறுபிள்ளைத்தனமான காரியங்களை எல்லாம் சுட்டிக் காட்ட முயற்சி செய்யாதீர்கள். ஒரு வீம்பிற்காகப் பெரிய மனுசத்தனத்தைக் காட்ட முயலாதீர்கள்.

(இ) விளைவுகளைக் காட்டிப் பயமுறுத்தாதீர்கள், சில விசயங்களில் அனுபவப் பாடம் சிறந்தது என்பதை உணர்த்துங்கள்.

(ஈ) சிறு தவறுகளையெல்லாம் குற்றம் போல் சோடிக்காதீர்கள்.

(உ) 'இதெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை' என்று கோபமாக வார்த்தை வரும் போது, பிடிக்காமல் போனது உங்களை அல்ல, உங்களது கருத்தைத்தான் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள்.

(ஊ) உள்ளுக்குள் பீறிடும் உங்களின் பரிசுத்தமான அன்பைக் கண்களில் தேக்கி வைக்காமல், வார்த்தைகளாய் வெளிப்படுத்துங்கள். அப்போதுதான் அது முழுமையாய் அடுத்தவருக்குச் சென்று சேரும்.

---

அவன் ஒரு ஆராய்ச்சியாளன். நாட்டுப்புறப் பாடல்களைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காகக் கிராமம் கிராமமாகச் சென்று கிராமியப் பாடல்களைச் சேகரித்துக் கொண்டிருந்தான். சில வேளைகளில் கிராமியப் பாடல் பாடுபவர்களைத் தேடி பஸ் வசதியே இல்லாத குக்கிராமங்களுக்கும் செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகியது.

ஒரு நாள் பாடல் சேகரித்து முடிக்கும் போது பொழுது சாய்ந்து இரவு வந்து விட்டது. தான் தங்கியிருக்கும் பக்கத்து நகருக்குச் செல்ல பஸ் வசதியும் இல்லை.

'சரி இன்றைக்கு இந்த ஊரில் தங்க வேண்டியதுதான்.." என மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

பின்னர் அந்தக் குக்கிராமத்திலுள்ள ஒரு வீட்டுக்கு வந்து "ஐயா.. நான் இங்கே கிராமியப் பாட்டு சேகரிக்க வந்தேன். இருட்டிவிட்டது. தங்க வேண்டும். உங்க வீட்டில்தான் தங்க வேண்டும். வசதி செய்து தருவீர்களா? பணம் தந்து விடுகிறேன்" என்றான்.

அந்த வீட்டுக்காரர் கொஞ்சம் பலமாகவே யோசித்துவிட்டு "இங்கே வயசுக்கு வந்த பொம்பிளைப் பிள்ளைகள் இருக்காங்க. அதனால் தங்க இடம் கொடுக்க என்னால் முடியாது" என்றார்.

ஏமாற்றத்துடன் அடுத்த வீட்டில் சென்று "தங்க இடம் வேண்டும்" எனக் கேட்டான். அங்கும் "வயசுக்கு வந்த பொம்பிளைப் பிள்ளைகள் இருக்காங்க அதனால் தங்க இடம் கொடுக்க முடியாது" என்றார்கள்.

மீண்டும் ஒரு சில வீடுகளில் தங்க இடம் கேட்டான். 'அவர்களும் வயசுக்கு வந்த பொம்பிளைப் பிள்ளைகளையே' காரணம் காட்டினார்கள்.

'வயசுக்கு வந்த பொம்பிளைப் பிள்ளைகள் இருந்தால் தங்க இடம் தர மாட்டார்கள். அதனால் ஏன் ஒவ்வொரு வீட்டிலும் தங்க இடம் இருக்கான்னு முதலில் கேட்கணும்? இனிமேல்... வயசுக்கு வந்த பிள்ளைகள் இருக்காங்களா? இல்லையா?ன்னு கேட்டுப் பதில் தெரிஞ்ச பிறகு தங்க இடம் கேட்போம்" என முடிவு செய்து கொண்டான் அந்த ஆராய்ச்சியாளன்.

பின்னர் இன்னொரு வீட்டுக்கு வந்தான். கதவைத் தட்டினான். ஒரு பெரியவர் வந்து கதவைத் திறந்தார்.

"இங்கே வயசுக்கு வந்த பொம்பிளைப் பிள்ளைகள் இருக்காங்களா?" கேட்டான்.

"ஏன்... என்ன விசயம்?"

"இன்றைக்கு இராத்திரி தங்கணும். அதுதான் கேட்டேன்"

பெரியவருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. "என்னது? இந்தப் பயல் பொம்பிளைப் பிள்ளைகள் இருக்கும் வீட்டில்தான் தங்குவானா?" என நினைத்து வீட்டுக்குள் சென்று பெரிய கம்பை எடுத்து அடி அடியென அடித்து நொறுக்கினார். விசயம் தெரிந்த ஊர்க்காரர்களும் அடித்து உதைத்தார்கள்.

தப்பிப் பிழைத்தால் போதும் என ஓட்டமெடுத்தான் ஆராய்ச்சியாளன்.

தன் மனதில் நினைத்ததைப் பிறருக்குத் தெளிவான முறையில் விவரிக்கத் தெரியாத பலர் சிக்கலில் தவித்துச் சீரழிந்து போகிறார்கள்.

சரியான மொழியை, சரியான வார்த்தைகளைச் சரியான நேரத்தில் சரியான இடத்தில் கையாளத் தெரியாதவர்கள் பிரச்சனைகளைத் தாமாகவே வரவழைத்துக் கொள்கிறார்கள்.

படிக்காதவர்கள் மட்டுமல்ல, மிக அதிகம் படித்தவர்கள் கூடப் பேசத் தெரியாமல் வகையாக மாட்டிக் கொள்வதும் உண்டு.

"பெரியவர்களிடம் எப்படிப் பேச வேண்டும்?" என்ற கலையை இப்போது பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்க மறந்து விடுகிறார்கள். இதனால்தான் சிறுவர்கள் கூட வயதில் பெரியவர்களைப் பார்த்து 'பெருசு' என்றும் 'கிழம்' என்றும் தடித்தடியான வார்த்தைகளைக் கொண்டு அழைக்கக் கற்றுக் கொள்கிறார்கள்.

கணவனிடம் எப்போது, எதைப் பேச வேண்டும் என்று தெரிந்த மனைவிமார்கள் குடும்பத்தையே மகிழ்ச்சியில் திளைக்க வைத்துவிடுகிறார்கள்.

'நீ', 'வா' என்று ஒருமையில் அழைத்துப் பேசாமல் வயதில் சிறியவர்களையும் கூட 'நீங்கள்' 'வாருங்கள்' என்றெல்லாம் அழைத்துப் பேசுவது நல்ல பண்பாடு.

அலுவலகத்திலும் தன்னுடன் பணி புரியும் அலுவலக நண்பர்களுடன் மேலதிகாரிகளுடன், முதலாளியுடன் எப்படிப் பேச வேண்டும்? என்ன பேச வேண்டும்? எதைப் பேச வேண்டும்? எனத் திட்டமிட்டுப் பேச்சை ஆரம்பிப்பது நல்லது.

"நேரம் போகவில்லை... சும்மா கொஞ்ச நேரம் பேசிக்கொண்டு இருப்போம்." எனப் பேச்சை ஆரம்பித்து யாரையாவது குறை சொல்லியும், தரக்குறைவாக விமர்சித்தும் சுகம் காண்பதைச் சிலர் விரும்புகிறார்கள். விளையாட்டாக ஆரம்பிக்கும் இந்தப் பழக்கம் பின் வழக்கமாகி அதன் பின் நம் பழக்க வழக்கமாகிவிடும் என்பதை உணர்ந்து கொள்வது நல்லது.

"நாம் பேசும் பேச்சு எதிரிகள் கூட விரும்பிக் கேட்கும் விதத்தில் அமைய வேண்டும்" என்பது திருவள்ளுவரின் கருத்து ஆகும். இதைக் கடைப்பிடித்தால் வீண் பேச்சுக்கள் தானாகக் குறைந்து விடும்.

---

# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வதெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

நத்தார்ப் பண்டிகை நடக்கிற காலம். வெடி வேடிக்கை வினையாகி வீடு கடையெல்லாம் பத்தியெரிஞ்சு ஒரு இருபது, இருபத்தியொரு பேர் பலியாப்போனது துக்க நிகழ்ச்சி. அஞ்சுலாம்படிச் சந்தி அனர்த்தமா முடிஞ்சது மனவேதனையாக் கிடக்கு.

அதிலயும் அதிர்ச்சி இத்தனை உயிர்களைத் தாங்கியிருந்த அந்தக் கட்டிடம் எத்தனை பெரிய ரிஸ்க்கோட இத்தனை காலமும் கழிச்சிருக்கின்றது தெரிய வரேக்கதான். எங்கட நாட்டு நகர அதிகாரிகள் கதிரையிலேயே தூங்கி வழிஞ்சபடி சுழையாச் சம்பளத்தை ஒரு பொக்கெற்றுக்கயும் கிம்பளத்த மற்றப் பொக்கற்றுக்கயும் திணிக்கினமே தவிர, ஒரு நாளைக்கெண்டாலும் கொஞ்சம் காலாற நடந்து இந்தப் பழங்காலக் கட்டிடங்களெல்லாம் என்ன விறுத்தத்தில இருக்குது, உள்ளுக்க இருக்கிற சனங்கள் என்ன அவலமாச் சீவிக்குதெண்டு எட்டிப் பாக்கிறதே இல்லை.

இப்பிடி இன்னும் எத்தின கட்டிடத்தில தீப்பிடிக்குமோ, எத்தினை இடிஞ்சு விழுமோ இனியினித்தான் தெரியும்.

நத்தார் பண்டிகையும் அதுவுமா துக்க சேதியக் கதைச்சு உங்கட மூடக் கெடுத்திட்டன் போல. சரி. கொஞ்சம் சந்தோசமாப் பேசுவம் என்ன?

இப்ப பாருங்கோ, எங்கட கிறிஸ்மஸ் தாத்தா சிகப்புத் தொப்பி, சிகப்புச் சட்டை, வெள்ளைத் தாடியோட கரோல் பாட்டுப் பாடிக்கொண்டு வீடுவீடா வரப் போறார்.

வாறவருட்ட சின்னப் பிள்ளைகள் எல்லாம் தங்களுக்கு விருப்பமானதைக் கேட்க அவரும் இருக்கிறத அள்ளி அள்ளிக் கொடுக்கப் போறார்.

எங்கட உலகத் தலைவர்கள் எல்லாரையும் குழந்தைகள் ஆக்கிவிட்டால் கிறிஸ்மஸ் தாத்தாவிடம் என்ன கேட்பார்கள். இதோ அமெரிக்கா என்றொரு நாட்டில புஷ் என்ற குழந்தை கேட்கும் நத்தார் பரிசு: "நத்தார் மாமா! நத்தார் மாமா! எனக்கு கடிச்சுத் தின்ன சதாம் ஹுசைன் என்ற கரும்பை ஈராக் நாட்டிலிருந்து வெட்டி எடுத்துத் தருவீங்களா?"

பின்லேடன் என்ற கொஞ்சம் பிடிவாதக் குழந்தை நத்தார் மாமாட்டக் கேட்டு அடம் பிடிக்கிற பரிசு இப்பிடியிருக்கும்: "எனக்கு பில்டிங் புளக்ஸ் கட்டி உடைச்சு விளையாட அமெரிக்கன் டுவின் டவர் போல நாலு ஐஞ்சு உயர்ந்த டவர்கள் கொண்டுவந்து அடுக்கி வையுங்கோ."

ஆனாலும் எங்கட சதாம் மட்டும் நத்தார் மாமாவை ஒரு பிடி பிடிச்சுட்டுத்தான் விடுவார். "இந்த ஐ.நா. காரருக்கும் அமெரிக்கக்காரருக்கும் தண்ணி காட்ட வோட்ட பிஸ்டல் கொஞ்சம் பரிசாத் தாருங்கோ என்ர ஆயுதக் களஞ்சியம் இவ்வளவுதான் எண்டு அடுக்கிவைச்சுக் காட்டிப்போட்டு போய் படுத்து நித்திரை கொள்ளுவம்".

ஆனால் எங்கட அரபாத் மட்டும் கொஞ்சம் கவலையாத்தான் கேட்கப் போறார். "நத்தார் மாமா! நத்தார் மாமா! நானும் மனுசன். நீயும் மனுசன். நீ மட்டும் ஜெருசலம் போய் கரோல் பாடி வரலாம். நான் பிறந்த நாட்டில ஒரு பகுதி அது, எனக்கு மட்டும் ஏனாம் போகக் கூடாது என்று தடை?"

ரொனிபிளேயர் குழந்தையாயிருந்தால் ஆசைப்பட்டுக் கேக்கிறது எதுவா இருக்கும்? அவருக்கென்ன தனியா ஆசை இருக்கப் போகுது. அமெரிக்க அண்ணன் கேட்கிறதில தனக்கும் கொஞ்சம் தந்தால் போச்செண்டு இருந்திட்டுப் போறார். ஒருவேளை அண்ணன் புஷ்ஷு க்கு தடிமல் பிடிச்சிருந்தால் இவர் நத்தார் மாமாட்ட விக்ஸ் கேட்பார்.

எங்கட அண்டை நாட்டார வீட்டுட்டம். சரி வாஜ்பாய்யென்ற பேபி நத்தார் மாமாவைக் கண்டால் என்ன கேட்கப் போறார்? "அடுத்த வருசத் தேர்தலுக்கு பரிசோதனை நடத்திக் காட்ட ஒரு அணுகுண்டைச் செய்து தாங்கோ அது போதும்," என்றுதான் கேட்பார்.

சோனியா காந்தி எண்ட சின்ன பேபி என்ன கேட்கும்? "விளையாட்டுப் பொம்மைக்குப் பதிலா வன்னிக்குள்ள இருக்கிற சின்னத் தம்பியை பிடிச்சுக் கொண்டு வந்து தா" எண்டுதான் கேட்கும்.

நம்ம ஊர்க்காரங்கள விட்டுட்டம் தானே. ரணிலும் சந்திரிகாவும் ஒண்டாச் சேர்ந்து நத்தார் மாமாவைக் கண்டால் கட்டாயம் ஒரு சீசோ தரச்சொல்லிக் கேட்பினம். ஒராள ஒராள் மாறி மாறி விழுத்திற் விளையாட்டு என்றால் சின்னப் பிள்ளைகளுக்கு நல்லாப் பிடிக்கும்தானே.

தமிழ்க் கூட்டமைப்பில இருக்கிற தலைவர்கள் ஆசையாக் கேட்கிற ஒரே பொருள் மண்வெட்டியாத்தான் இருக்கும். ஏனெண்டால் ஒருத்தருக்கொருத்தர் குழிபறிக்க இலேசான விளையாட்டுச் சாமானெல்லோ.

மண்ணெண்ணை மகேஸ்வரன் சின்னவனாய் இருந்தால் நத்தார் மாமாவைக் கண்டு என்ன கேட்டிருப்பார்? சின்னப் போத்தல் ஒண்டுக்குள்ள மண்ணெண்ணையத்தான்.

காதிலபூ கந்தசாமி என்ன கேட்பார் என்பது இன்னுந் தெரியெல்லையா? பூ இதுகூடத் தெரியல்லையா? எல்லாம் நீங்கள் ஆளுக்கு இரண்டு காது வைத்திருக்கிற நம்பிக்கையிலதான்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

---

# இந்தவாரம் உங்கள் பலன்

## சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

**தனு** - சூரியன், **தனு** - புதன், **இடபம்** - இராகு, **மிதுனம்** - சனி, **கர்க்கடகம்** - வியாழன், **விருட்சிகம்** - கேது, வெள்ளி, **துலாம்**- செவ்வாய். சந்திரன் துலாம், விருட்சிகம், தனு, மகரம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) முயற்சி மேன்மை, கௌரவம், பணவரவு, காரியானுகூலம், உறவினர் பகை, வீண் தொல்லை, மனக் கிலேசம் உண்டு. உத்தியோகம் நன்னிலை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மையுண்டாம். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 7.

**இடபம்**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) இனசன நன்மை, பெரியோர் உதவி, தேகாரோக்கிய சுகம், பிள்ளைகள் உதவியுண்டு, உத்தி யோகத்தர் சிறப்பு, வீண் தொல்லை நீங்கும். மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல: 3.

**மிதுனம்**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) தொழில் சிறப்பு, பணவரவு, குடும்ப சுகம், வீண் செலவு, மனை மாற்றம் உண்டாம். உத்தியோகத்தர் மனக் கவலை, பதவி மாற்றம். மாணவர் கல்வி உயர்ச்சி, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 1.

**கர்க்கடகம்**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) பெரியோர் உதவி, முயற்சி பலிதம், இனசன விரோதம், கௌரவக் குறைவு உண்டு. உத்தியோகத்தர் நன்மை, மேலதிகாரிகள் உதவி. மாணவர் கல்விச் சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 4.

**சிங்கம்**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) இனசன நன்மை, தொழிற்பேறு, உயர்ந்த நிலை, பணவரவு உண்டு. உத்தியோகத்தில் குழப்பம், மேலதிகாரிகள் தொல்லை. மாணவர் கல்வி பேறு. பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.

**கன்னி**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) வீண் குறை கேட்டல், தொழில் மந்தம் பணவரவு கஷ்டம். வெளியிட வாழ்க்கைச் செலவு மிகுதி உண்டு. உத்தியோகத்தர் சிறப்பு, கௌரவம், மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 2.

**துலாம்**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) தொழில் சிறப்பு, நண்பர்கள் உதவி, மன மகிழ்ச்சி, திடீர்ப் பிரயாணம், செலவு மிகுதியுண்டு. உத்தியோகத்தர் பதவி மாற்றம். வீண் கலக்கம். மாணவர் கல்வி உயர்ச்சி. இடமாற்றம். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 1.

**விருட்சிகம்**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) குடும்ப மகிழ்ச்சி, பணவரவு, அன்னியர் உதவி, மனத் தெளிவு, செலவு மிகுதியுண்டாம். உத்தியோகத்தில் மகிழ்ச்சி, மாணவர் கல்வி மேன்மை உண்டு. விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 6.

**தனு**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) வீண் குறை கேட்டல், இனசன மகிழ்ச்சி, பயனற்ற செயல், பணக் கஷ்டம் உண்டாம். உத்தியோகத்தர் நன்மை, பதவி உயர்வு, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 5.

**மகரம்**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் கலக்கம், காரியத் தடை, வீண் பிரயாணம், செலவு மிகுதியுண்டாம். உத்தியோகத்தர் உயர்ச்சி, மாணவர் கல்வி மந்தம், பிரயாச மிகுதி. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 3.

**கும்பம்**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) தொழில் மேன்மை, காரியானுகூலம், பணக் கஷ்டம், கடன்படல், அன்னியர் சகவாசம், உத்தியோகக் கவலை, வீண் பிரயாணம், மாணவர் கல்விச் சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் முயற்சி பலிதம்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 7.

**மீனம்**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) மனக்குறை நீங்கும். செலவு மிகுதி, பணவரவு தடை, பெரியோர் உதவி, புதிய முயற்சியுண்டு, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் தொல்லை. மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 1.

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேழைக

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு 11

325657


# எந்தத் திசையில் தாவும்



# எக்ஸ்ரே கடிகாரம்



அருள் ஜுவலர்ஸ்


பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


கையில் எலும்பு முறிந்திருக்கிறதா என மணிக்கூட்டில் பார்த்துக் கொள்ளலாம். இந்தக் கைக்கடிகாரத்தினுள் மினி எக்ஸ்ரே கருவி இருக்கிறது. சிறிய அளவில் எக்ஸ்ரே பிரிண்ட் பெறலாம் எலும்பு முறிந்திருக்கிறதா என சமிக்ஞை மூலம் காட்டும் வல்லமை இந்தக் கைக்கடிகாரத்திற்கு உண்டு. அது மட்டுமல்ல, பக்ஸ், தகவல் பரிமாற்ற வசதி போன்ற பலதும் இதற்குள் அடக்கம். ஆக மொத்தத்தில் தொலைபேசியின் பயனையும், எக்ஸ்ரே கருவியின் பயனையும் இந்தக் கைக்கடிகாரத்திலிருந்தே பெற்றுவிடலாம்.



குழந்தைகள் தலையொட்டிப் பிறப்பது குறித்த செய்திகளை ஏராளமாக வாசித்திருப்பீர்கள். இரண்டு தலையுடன் ஒரு குழந்தை பிறப்பதும் ஒரு தலையில் இரண்டு உடல்கள் ஒட்டியிருப்பதும் போன்ற சம்பவங்கள் அன்றாடம் நிகழ்கின்றன. இது அத்தகையதொரு தவளை சமாசாரம். இந்த பச்சைநிறத் தவளைக்கு இரண்டு தலைகள், ஒரு உடல். ஒரு தலையில் உள்ள மூளை ஒருபக்கத்திற்கு தாவச் சொல்லும் போது மற்றத் தலையில் உள்ள மூளை வேறு ஒரு திசையில் தாவச் சொன்னால் உடம்பு தாங்குமா?

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



திரு. திருமதி சுபாஸ்கரன்-ராதிகா (வேலணை மேற்கு-கரவெட்டி கிழக்கு) தம்பதிகளின் செல்வப் புதல்வி கம்ஷாயினி தனது முதலாவது பிறந்த தினத்தை 30.12.2002 திங்களன்று யாழ்ப்பாணம் கரவெட்டியில் உள்ள தனது அம்மப்பாவின் இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகிறார். கம்ஷாக் குட்டியை அன்பு அப்பா, அம்மா,

### செல்வி எஸ். கம்ஷாயினி 30.12.2002

அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சுட்டா சித்தப்பா, இலங்கேஷ் சித்தப்பா, சதீஷ் மாமா, மஞ்சு அத்தை, யோகேஷ் சித்தப்பா, சியாமளா அத்தை, திலா பெரியப்பா-தேவிகா பெரியம்மா, ஜவாகர் அண்ணா, நதுஷன் அண்ணா, கண்ணன் மாமா, வதனி மாமி, மது மச்சான், சிவா மாமா, சங்கர் மாமா, கார்த்திகா சித்தி மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் எல்லாம் வல்ல அதிசய விநாயகர் அருளால் சகல சௌபாக்கியங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: அப்பா- எஸ். எம். சுபாஸ்கரன், கச்சேரி, முல்லைத்தீவு.

## 1வது, 2வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



செல்வன் T. Alain Joshua (16.12.2002)



செல்வி T. Anny Florence (21.10.2002)

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை (Paris) வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் தம்பதிகளின் செல்வப் புதல்வன் Alain Joshua தனது முதலாவது பிறந்த நாளையும், செல்வி Anny Florence தனது இரண்டாவது பிறந்த நாளையும் Parisஇல் உள்ள Losari Espace ABC paris - 75018 என்னும் மண்டபத்தில் 29.12.2002 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள்.

செல்வன் Joshuaவை அன்பு அப்பா, அம்மா, அக்கா Annyயும், செல்வி Annyயை அன்பு அப்பா, அம்மா, தம்பி Joshuaவும், இவர்கள் இருவரையும் அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார் நடராசா, துரைராசா (நாவற்குழி), யோகராசா (கனடா), பஞ்சாட்சரம் (லண்டன்) சித்தப்பாமார் குணராசா (லண்டன்), குணசீலன் (கனடா), மோகன் (லண்டன்), அத்தை அருந்ததி (கனடா), அன்ரன் (லண்டன்), இந்தியாவில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா சாம்சன், பெரியம்மா எஸ்தர், அக்கா பிரிஸ்சிலா, மாமாமார் ரமேஷ், சிறீதர், அத்தை கிரேஸி, மைத்துனர்மார் சாம் போல், சாம் திவகரன் மற்றும் அக்காமார், அண்ணன்மார், உற்றார், உறவினர் அனைவரும் கர்த்தர் இயேசுவின் நாமத்தில் வாழ்கவென வாழ்த்துகிறோம்.

தகவல் திரு.-திருமதி. திருச்செல்வம் (பிரான்ஸ்)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



பளாலி கிழக்கைச் சேர்ந்த செல்வச் சந்திரன்-அம்பிகாதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வன் அஜின் தனது முதலாவது பிறந்த நாளை 12.12.2002 அன்று லண்டனில் உள்ள தனதில்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

### செல்வன் செ. அஜின் 12.12.2002

அஜின் குட்டியை அன்பு அப்பா, அம்மா, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பூட்டன், பூட்டி, லண்டனில் வசிக்கும் மாமாமார், பெரிய சித்தப்பா தவம், சின்னச் சித்தப்பா ரூபன், சித்தி தங்காதி, பெரியப்பாமார், பெரியம்மாமார், அன்ரிமார், சித்தப்பாமார், அத்தைமார், மாமாமார், அக்காமார், அண்ணாமார், மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பளாலி அம்மனின் அருள் பெற்றுப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: சித்தப்பா தவச்சந்திரன், லண்டன்.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 9A ஆம் இலக்கத்தில் டி.டி. எண்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தால் பொரலஸ்கமுவயில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் டிச. 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.